Registered as a News Paper in Sri Lanka
පිටු / දිනමුරසු වාරමලර்
பக்கம் 20 ரூபா 12/00
மே 28-ஜூன் 03, 2000

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 358



## இலங்கைத் தமிழர் நெருக்கடியில் கலைஞர் ஆடும் அரசியல் நாடகம்



## நெற்றி ஜோதிடம்

## அழகிக்கு அடி

## சகலமும் நானே

## இர்விங் வாலஸின் இரு வாரத்தொடர்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

## உடனடி அவசியங்கள்

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு
பேச்சுவார்த்தை மூலம்
இணக்கமான தீர்வைக்காண்பது
இப்போதைய நிலையில்
உடனடிச் சாத்தியமில்லையென
மத்தியஸ்தம் செய்யும்
பொறுப்பை ஏற்றுக்கொண்ட
நோர்வே நாட்டின்
பிரதிநிதி
கவலை தெரிவித்துள்ளார்.

அந்த வகையில்
சமாதானத்துக்கான
சூழ்நிலை மிகமிக
தேய்மைக்கு
விலகிச் சென்றுகொண்டிருப்பதைக்
காணமுடிகிறது.

யுத்த நிறுத்தத்துக்கு
புலிகள் விடுத்த
கோரிக்கையையும்
அரசாங்கம்
ஏமாற்று வித்தையென
மறுத்துவிட்டதுடன் யாழ்ப்பாணத்தில்
இறுதி இராணுவ வீரன்
இருக்கும்வரை
போராடியே தீருவோமென
உறுதி தெரிவித்துள்ளது.

இதே வேளை
விடுதலைப் புலிகளோ
யாழ்ப்பாணத்தின் மீதான
தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அரசாங்கமும்
அவசர அவசரமாக
பல்வேறு நாடுகளிலிருந்தும்
ஆயுதங்கள் மற்றும்
யுத்த விமானங்களைத்
தருவித்து
உயர்ந்தகட்ட நிலைக்கு
யுத்தத்தைக்
கொண்டு சென்றுள்ளது.

இந்நிலையில்
இலங்கையில்
சகல கொண்டாட்டங்களும்
நிறுத்தப்பட்டுள்ளன.
வழமையாக
அரசியற் கட்சிகளும்
தொழிற்சங்கங்களும்
தத்தமது
பலத்தையும் செல்வாக்கையும்
வெளிப்படுத்திக் காட்டும் மேதினக்
கூட்டங்களும் ஊர்வலங்களும்
சோபை இழந்துவிட்டன.

மிகவும் கோலாகலமாகக்
கொண்டாடப்படும்
வெசாக் பண்டிகையும்
இம்முறை
களையிழந்துவிட்டன.

பதிலாக
நாட்டின் பல்வேறுபகுதிகளிலும்
போர் வீரர்களது
மரண வீடுகள்
கொண்டாடப்படுகின்ற
துயரம் நிறைந்த
உணர்வுகளே
வியாபித்துள்ளன.

இராணுவ வாகனங்கள்
தேசியக் கொடி போர்த்த
பிரேதப் பெட்டிகளை
ஏற்றிச் செல்ல
கடை வாசல்களில்
தரித்து நிற்பதை
அடிக்கடி காணமுடிகிறது.

இத்தகைய சூழ்நிலையில்
இந்தியாவும் மத்தியஸ்தம் வகிக்க
விருப்பம் தெரிவித்துள்ளது.
இலங்கை அரசாங்கமும்
புலிகளும் விரும்பினாலே
அதற்கு முன்வரமுடியுமென
அது தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகளுடன்
ஜனாதிபதி நடத்திய
கலந்துரையாடலில்
அதனையிட்டு
அரசாங்கம்
என்ன கருதுகிறதெனக்
கேட்கப்பட்டபோது,
உத்தியோக பூர்வமாக
இந்த அறிவித்தலை
இந்தியா தரவில்லையெனத்
தெரிவிக்கப்பட்டது.
இந்திய மத்தியஸ்தத்தை
நாமே தான்கோரவேண்டுமெனச்
சுட்டிக்காட்டப்பட்டதற்கு
அரசாங்கத் தரப்பிலிருந்து
பதிலளிக்கப்படவில்லை.

மிகவும் இக்கட்டான
ஒரு காலகட்டத்தில்
தீர்க்கமான முடிவுகளை
எடுக்கத் தவறினால்
மோசமான விளைவுகளைச்
சந்திக்க நேரிடலாம்.

அரசியல் தீர்வொன்றை
முன்வைப்பதும்
பேச்சுவார்த்தைக்குச்
செல்வதும்
இருதரப்பையும்
கண்காணிக்கக் கூடியதும்
தீர்மானங்களை
அமுல்படுத்த
நிர்ப்பந்தம் செலுத்தக்
கூடியதுமான
மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்தை
அங்கீகரிப்பதும்
இந்த நெருக்கடிக்குத்
தீர்வு காண
உடனடி அவசியங்கள்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்



## 'பகவத்கீதை படித்து பயன் பெறுவோம்'

ஸ்ரீ கிருஷ்ணபகவான் இறைவனைப் பற்றி பக்தனின் மனப்பான்மை பண்படாமல் பிழையுடையதாக இருப்பினும் அதில் தெய்வீகம் உள்ளது என்று கூறுகிறார். எவ்வடிவத்தில் இறைவனை வழிபடுகின்றோம் என்பது முக்கியமில்லை. அருள் தாகத்துடனும், திட நம்பிக்கையுடனும் வழிபாடு நடத்தப்படுகின்றதா? என்பதே முக்கியம் என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

இறைவனிடம் எண்ணிக்கையில் அடங்காத கடவுள் வடிவங்களும், பண்புகளுமுள்ளன. எந்தவொரு வடிவமும், பண்பும் முடிந்த முடிவல்ல. ஆனால் ஒவ்வொரு வடிவமும், பண்பும் உண்மையே. இவ்வாறாக 'பகவத் கீதை' இறைவனைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் பரந்த மனப்பான்மையை எதிரொலிக்கிறது.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அருச்சுனன் வாயிலாக மனித குலத்துக்கே நல்கியுள்ள வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை போதனைகளைப்பற்றி போதித்துள்ளார்.

எனவே மானிடர்களாகிய நாங்கள் உலகம் போற்றும் உன்னத நூலான பகவத் கீதையை படித்துப் பயன் பெற்று வாழ்வோமாக!

அ.அரசரெத்தினம்-மூதூர்.

## அருற் பேறே அல்குர் ஆன்

இன்று மனித குலம் தம்மைப் படைத்த அல்லாஹ்வை மறந்து அவன் கட்டளைகளுக்கு அடி பணியாது மனோ இச்சைகளைத் தூண்டும் மதுவிலும் மற்றவைகளிலும் நாட்டம் கொண்டு கீழ்தரமான உணர்வுகளுக்கு உந்தப்பட்டுள்ளது.

இதனால்தான் மனிதர்களில் பலபேர் இம்மையிலும் துன்புற்று மானமிழந்து மதிகெட்டழிந்து மறுமையிலும் கொடிய நரகைச் சேர வழி திறந்து கொள்கின்றனர்.

மனோ இச்சை பற்றி மாமறை கூறுவது: அல்லாஹ்வின் நேரிய வழியை விட்டு தனது மனோ இச்சைகளைப் பின்பற்றி நடப்பவனைவிட வழி தவறியவன் உண்டா? இத்தகைய அக்கிரமச் செயல் புரிவேருக்கு இறைவன் நேர்வழி காட்டுவதில்லை. அல்குர் ஆன்: 28:50

எந்த ஒரு பகுத்தறிவு படைத்த மனிதனும் தனது மனோ இச்சைகளுக்கு அடிமையாகி விடக் கூடாது. இந் நிலை போக்க இறை மறை போதனைகளை இதயத்தில் கொள்ள வேண்டும். மனித குலத்திற்கு மாபெரும் அருட்பேறே அல்குர் ஆன்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## மனம் திரும்புங்கள்!

இவ்வுலகில் மிகவும் விலையேறப் பெற்ற சொத்து அல்லது உடமை எங்களின் ஜீவியமே. எமது ஜீவியத்தை பாதுகாத்து மென்மேலும் வளமுட்ட நாம் இயற்கையாகவே அதற்கேற்ற எல்லா முயற்சிகளையும் செய்கிறோம்.

ஆனால் இயேசுவோ தன்னை பாதுகாத்துக் கொள்ளவில்லை. தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள கூடுமாயிருந்த போதிலும், எமக்காக இப்பூமிக்கு வந்து மரணமடைந்தார். மூன்றாம் நாளில் உயிர்த்தும் எழுந்தார். அவர் வந்திராவிட்டால் ஒருபோதும் எமக்குத் தேவனை அறிந்து கொள்ளத் தருணம் கிடைத்திருக்காது-இயேசு எமக்காகவே தன்னுடைய ஜீவனைக் கொடுத்தார்.

நீங்கள் எவ்வளவு காலங்களாக உங்கள் சொந்த வழியில் வாழ்ந்திருக்கக் கூடும். இனிமேலும் உங்களுடைய ஜீவியத்தை நீங்கள் ஆளாமல் முற்றிலுமாய் இயேசுவிடம் ஒப்புக் கொடுத்தால் என்ன?

அருமையானவர்களே! கடந்தகால பாவ ஜீவியத்தினின்று மனம் திரும்பி, உங்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் பொருட்டு உங்களுக்காய் மரித்த இயேசுவினிடத்தில் வேண்டுதல் செய்யுங்கள். அப்போது உங்களுக்கு புத்தம் புது ஜீவியத்தைத் தருவார்.

திரு.வேதமாணிக்கம்-கொழும்பு-05.

## கவிதைப் போட்டி இல.358



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.06.2000

கவிதைப் போட்டி இல.358
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.355

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



### பரிசுக்குரிய கவிதை

### நாளை கூட.....

**இத்தனை மகிழ்வாய்**
**எவ்வளவு காலம் தொடரலாம்.....?**
**நாளை கூட மழை மாறி**
**அது குருதி மழையாகலாம்!**

**சி.மதியழகன்-அல்வாய்.**

### பொழிவு

குண்டு பொழியும் நம் நாட்டில்
மழை கூட பொழிகிறதே! என
நனைந்து பார்க்கின்றாயா?
கவனம், காய்ச்சல் வந்தால்-
கவனிக்கும்
உறவுகளை தொலைத்து
விட்டாய்!

செ.பிரமிளா-ஹாலி-எல.

### இயற்கை அணைப்பில்....!

மழையில் நனைவதோ மனிதருக்குச் சுகமோ?
மரநிழலில் இருப்பதோ மாந்தருக்குச் சுகமோ?
அல்லும் பகலும் அகதியர் நமக்கோ,
ஆடலும் அழுகையும் இயற்கையின்
அணைப்பிலே!!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

### எச்சரிக்கை!

கொட்டும் மழை நீரில்!
கொஞ்சும் சின்னத் தம்பியே...!
கண்மூடி நீயும்!
களிப்புற்று இருக்காதே!
குண்டுமழை சிலநேரம்!
உன்னை....
குற்றுயிராய் ஆக்கலாம்!

ஹப்புத்தளையூர் மனோ
கோபாலன்.

### இதில் எது?

கடும் வரட்சிக்குப் பின்
மழை யென்று குளிப்பா?-இல்லை
கடும் புரட்சிக்குப் பின்
நிலை நின்ற களிப்பா?

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### களிப்பு

காணாமல் போன அப்பாவை
கண்டதினால் வந்த களிப்பில்
மழையில் நனைந்து
மகிழும் சுட்டிப் பையன் இவன்!

மெற்றில்டா மரியதாஸ்,
பண்டாரவளை.

### (த)கண்ணீர் அஞ்சலி

வன்னி மண்ணில்
வதைப்பட்டு வாழும்
எங்களுக்காய்
வானமே!
நீ வடிக்கும் கண்ணீர்
துளிகளா இவை?

ஆ.ஜெகதீஸ்வரன்-புசல்லாவ.

### சுகம்

மழையில் நனைதலும்,
வெயிலில் காய்தலும்
சொந்த மண்ணில்தான்
சுகம் தரும்!

ந.மதி-மோதர.

### ஓயாத அலை

வானிலிருந்து ஒளி வரும்
ஓசை வரும்!
மழை வரும்....
செயற்கையாகவும்!

பிரபா-பதுளை.

### வசந்தம்

இந்த....
மழைத்துளியின் வரவால்
இவன் வாழ்வில்
சோகங்கள் மறைந்து
வசந்தம்.....
துளிர் விடுகிறது..!

என்.எல்.முஸம்மில்-
புதிய காத்தான்குடி-06.

### ஆனந்த மழை!

நீடித்த வறட்சி நிம்மதியைக் கெடுக்க
நெருங்கியே வந்ததோர் மாரிகாலம்;
வாடியபயிர்களும் உயிர்களும்
உய்யவே
வழங்கியே நின்றது நீர்க்கோலம்!


பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### அருமை

மழையின் அருமை
வெயிலில் தெரியும்!
குளிப்பின் அருமை
காய்ச்சலால் புரியும்!
மருந்தின் அருமை
வன்னியில் தெரியும்!

சிவஸ்கந்தா சசிதரன்-
கொழும்பு 13.

# வாசக(ர்)சாலை



என் இனிய முரசே,
நான் உன்னை வாரம் தவறாமல் வாசிக்கும் அபிமான வாசகன்.

நீ சுமந்து வரும் முத்தான செய்திகள் அனைத்தும் சிறப்பிலும் சிறப்பு. உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்

ஆர்.எம்.றிஸாத்-நிக்வெவ.

●●

என் உளம் கவர்ந்த இதமான முரசே..!
உன்னில் அடங்கியுள்ள அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை! 'இலக்கியநயம்', 'தேன்கிண்ணம்', 'செய்திச் சிதறல்' போன்றவை என்னை மிகநன்கு கவர்ந்துள்ளவை! உன் சேவைக்கு நிகர் நீயே..! மென்மேலும் உன் சேவை பிரகாசமாக மிளிர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

சி.நந்தகுமார்-ஆரையம்பதி-02.

●●

முரசே,
உண்மைகள் சுமந்துவரும்
உந்தன் அம்சங்கள்
அத்தனையும்
மென்மையானவை
மொத்தத்தில்-என்
முரசே!
முதன்மையானது!

லயனி சிவலிங்கம்-வவுனியா.

●●

முரசுக்கு,
முத்தமிழ் அத்தனையும்
முத்தாக தித்திக்கும்
முரசே,
உண்மைகள்
உறங்காத தமிழே
உந்தன் உடல்கள்
அத்தனையும் சுத்தமானவை
அன்பே நீ வாழி.

குகபாலினி ஸ்ரீகுசன்-வவுனியா.

●●

இதயம் கவர்ந்த இனிய முரசே...!
ஈழத்திருநாட்டின் பத்திரிகைத்துறையில் முத்திரை பதித்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் சரிதையை சுமந்து வரும் முரசுக்கு கோடானு கோடி நன்றிகள்! முரசே: உன் வழி தனி வழிதான் என்பதை நிரூபித்து விட்டாய்.

மொஹமட் இர்ஹாம்-
காத்தான்குடி.05.

●●

என் உயிரினும் மேலான என் அன்பின் முரசே!
உன் உயிர் நாடி எழுதுவது, உன்னை தவறாமல் ஒவ்வொரு வாரமும் பார்க்கிறேன். அதில் நீ கொண்டு வரும் அத்தனை அம்சங்களும் சுவையாகவே இருக்கின்றன. அதிலும் 'இடி அமீன்' தொடர்கதை, 'நில்-கவனி-முன்னேறு' இளைஞர்களுக்கு உதவக் கூடியதாக இருக்கின்றது. மற்றும் 'பாப்பா முரசு', 'சிந்தியா பதில்கள்' இவை அனைத்தும் அருமையாகவே இருக்கின்றன.

எனவே உனது பணி மேலும் வளர நான் வாழ்த்திக் கொண்டிருப்பேன்.

எச்.எம். றிபாஜி, புதிய சோனகத் தெரு, திருகோணமலை.

●●

என் அன்பின் முரசே,
உன்னை விரும்பிப் படிக்கும் பல்லாயிரம் வாசகர்களில் நானும் ஒருவன். நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் படு சூப்பர். மேலும் உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

எம்.எம்.மஸீஹுஸ் ஸமான்-
ஹொறோபொத்தானை.

●●

எனது இனிய முரசே,
நான் ஒவ்வொரு கிழமையும் உன்னைக் காண்பதற்காகவே தவம் கிடைக்கின்றேன். உன்னில் வரும் ஆக்கங்களில் எனக்கு பிடித்தது. 'தேன்கிண்ணம்' எனும் பகுதியும் திக்திக் தொடர், 'மன்னாதி மன்னன்' தொடர் கதை யாவும் எனக்கு மிகவும் விருப்பமான ஆக்கங்கள்.

அவற்றை வாசித்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் ஒவ்வொரு வாரமும் என்னைப் போன்ற ரசிகைகளின் உள்ளம் மகிழ வாரம் தோறும் வருவாய் என வாழ்த்தி விடைபெறும்

எஸ்.லலிதா-திருகோணமலை.

●●

அன்பின் முரசே!
முத்து முத்தான சொற்களை சுமந்து வந்து, என் இதயத்தில் சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறாய். நீ வந்து கொண்டு இருக்கும் வாரம் ஒருநாளில் பிந்தி விட்டால் இதயம் துடிக்கிறது. நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் என்னை மென் மேலும் சந்தோஷப்பட வைக்கிறது உன் சேவை மென் மேலும் வளர என் இதயம் கனிந்த நல்வாழ்த்து.

க.சுஜி-ஏறாவூர்-4.

●●

இனிய முரசே!
உன்னை பிரிந்து என்னால் ஒரு கிழமை கூட இருக்க முடியவில்லை. நீ தருகின்ற ஒவ்வொரு அம்சங்களும் மாணிக்கக்கற்கள் போன்று பெறுமதி மிக்கவையாக இருக்கின்றன. மேலும் நீ தருகின்ற 'பாப்பாமுரசு' மிகவும் சுவாரசியமாகவும். அறிவை விருத்தி செய்கின்றனவாகவும் அமைகின்றன. அரசியல் அம்சங்கள் பற்றியும் அறிய முடிகின்றது. ஓயாத அலையைப் போன்று உன் பணி தொடர என் உள்ளங் கனிந்த வாழ்த்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.ஜெகதா-திருக்கோவில்.

●●

இளம் கன்றுக் குட்டி போல் துள்ளி வரும் என் இனிய முரசே!
உனது இலட்சோப இலட்சம் வாசக நெஞ்சங்களில் நானும் ஒருவன். 'இடி அமீனின் தொடர்', 'சிகப்பு வணக்கம்', கவியரசின்'அரங்கம் அந்தரங்கம்' என்பன மனதைத் தொட்ட தொடர்கள். 'தேன் கிண்ணம்', 'சிறுகதைகள்' தித்திப்பாய் இனிக்கின்றன. 'சிந்தியாவின் பதில்கள்' குட்டிக் கதைகள் உள்ளத்தில் பதிகின்றன. 'செய்திச் சிதறல்', 'அதிரடி அய்யாத்துரை' என்பன அருமை! 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'ஸ்பெஷல் ரிப்போர்ட்' களும் வெளுத்து வாங்குகின்றன.

உன் சேவை தனிவழி! வளர்க வாழ்க!

சி.ஸ்ரீரவி-கல்கிஸ்ஸ.

### அறிவித்தல்

**உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்து விட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.**

***-நிர்வாகி.***


**மடல்கள் மற்றும்**
**ஆக்கங்கள்- உட்பட சகல**
**தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலைபேசி: 074-514282**
**தொலை நகல்(Fax):- 074-513266**

# போர் நிறுத்தப்பிரகடனம் ஏற்படுத்தப்படுமா?

# நோர்வே குழுவினர் முயற்சிக்கலாம் என்று நம்பப்படுகிறது!

**சமாதானத் தீர்வொன்றை எட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்வதாற்காக மீண்டும் நோர்வே நாட்டின் உயர் மட்டத் தூதுக்குழுவொன்று இலங்கை வந்துள்ளது. அமைதிக்கான தீர்வை எட்டுவது சுலபமான காரியமல்ல இதற்கு நீண்ட காலம் தேவைப்படலாம். அதுவரை போர் தொடருமானால் நேரடியாக மோதும் அரசப் படையினரும், புலிகளும் மட்டுமல்லாமல் ஏராளமான பொதுமக்களும் அழிய நேரிடும். இத்தகைய சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக தற்காலிக போர் நிறுத்தமொன்றை இரு தரப்பினரும் அறிவிக்க வேண்டுமென்று நோர்வே தூதுக்குழுவினர் கோரிக்கை விடக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.**

இலங்கையில் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்காக நோர்வே நாடு முழு மூச்சுடன் இயங்க முன் வந்துள்ளது. அந்நாட்டின் பிரதிவெளிவிவகார அமைச்சர் ரேய்மன்ட் ஜொஹன்சன் தலைமையில் மேலும் மூவரைக் கொண்ட குழுவினர் திங்கட்கிழமை இலங்கை வந்து சேர்ந்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் இக்குழுவினர் திங்கட்கிழமையன்றே சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இங்கு தற்போதுள்ள சிக்கலான சூழ்நிலையில் அமைதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினமாக இருக்கும் என்று இத்தூதுக்குழுவினர் கருதுகின்றனர்.

நோர்வே நாட்டின் சிறப்பு ஆலோசகராக இந்தியாவுக்கும் பின்னர் இலங்கைக்கும் அண்மையில் வந்திருந்த எரிக் செல்றேய்ம் அவர்களும் இங்குள்ள தற்போதைய நிலையில் ஒரு சமாதானமான உடன்பாட்டினை ஏற்படுத்துவதற்கான காலம் மிக நீண்டதாக இருக்கக் கூடும் என்றே தெரிவித்தார்.

அமைதித் தீர்வொன்றினை எட்டுவதற்கான காலம் நீடிக்குமானால் அதுகாலவரை அரசுப் படைகளும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து மோதிக் கொண்டு இருந்தால் நிலைமை படு மோசமாகிவிடக் கூடும். நேரடியாக மோதலில் ஈடுபடும் இரு தரப்பினருக்கும் மட்டுமல்லாமல் சாதாரண அப்பாவிப் பொது மக்களும் பல்லாயிரக் கணக்கில் மாண்டு போகவும் வாய்ப்புண்டு. ஆகவே ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் போரை நிறுத்தி அதனைத் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவது பொருத்தமான ஒரு முடிவாக இருக்குமென்று கருதப்படுகிறது.

இங்கு வந்துள்ள நோர்வே நாட்டு உயர் மட்ட தூதுக்குழுவினர் தற்காலிகமாக போர் ஓய்வுக்கான ஒரு திட்டத்தை முன் வைக்கக் கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

போரினால் ஏற்பட்டுவரும் பேரழிவைத் தடுப்பதற்கு தற்காலிக போர் நிறுத்தமொன்றே ஒரே வழி என்பதே சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முடிவாகும். இரு தரப்பினரும் இதற்கு இசைவார்களா?

## கனடாவில் தமிழர் குழுக்குளின் அடாவடித் தனங்கள் அதிகரிக்கின்றன

கனடாவிலுள்ள ஒண்டாரியோ மற்றும் கியூபெக் பகுதிகளில் இலங்கை தமிழர்களின் குழுக்கள் மத்தியில் மீண்டும் சட்ட விரோத நடவடிக்கைகள் பரவி வருவதாக கனடாவின் ரு.டி.து.மு. பொலிஸ் உளவுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இவர்கள் வீடுகளில் புகுந்து பணம் மற்றும் பொருட்களை கையாடுதல், போதைப் பொருள் பாவித்தல் மற்றும் சட்ட விரோதமாக ஆட்களைக் கடத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனராம்.

டொரண்றோ, மொன்றியல் மற்றும் வேன்கூலர் நகரங்களில் ஏறத்தாழ 2 இலட்சம் இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் ஒருசிலர் ஆயுதப் பயிற்சிகள் பெற்றவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் பெரும்பாலும் பல குழுக்களாகப் பிரிந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று உளவுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய குழுக்களால் இதுவரை பல கொலைகளும் நடைபெற்றுள்ளன. இக்கொலைகளை புரிந்தவர்களை கண்டு பிடிப்பதும் அவர்களை சட்டத்தின் கைகளில் ஒப்படைப்பதும் முடியாத காரியமாகவே இருந்து வருகிறது.

இலங்கையில் நடைபெறும் மோதல்களினால் பாதிக்கப்படாமல் தப்பித்துக் கொள்வதற்காக கனடா போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள் இவ்வாறு தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வது விசனத்துக்குரியதாகும்.

## தபாலகத் தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது

காரைதீவு பிரதான தபாலகத்தின் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டதால் பொதுமக்கள் திண்டாடவேண்டியுள்ளது.

முதலாந்தர தபாலகமான காரைதீவு தபாலகத்தின் பிரதி தபாலதிபர் எஸ்.சுந்தரலிங்கத்திடம் கேட்ட போது 'கடந்த 03ம் திகதியிலிருந்து தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் சுமார் 100 வாடிக்கையாளர்கள் தொலைபேசி பாவனையின்றி ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிறார்கள்.

தொலைபேசிக்குரிய கட்டணத்தை உரிய வேளைக்கு எமது திணைக்களக் கணக்காளர் செலுத்தியும் இணைப்புதுண்டிக்கப்பட்டமை கவலைக்குரியது' என்று பதிலளித்தார். கடந்த 25 நாட்களாக வரும் அழைப்புக்கள் மட்டுமே கிடைக்கிறது. வெளிச்செல்லும் அழைப்புக்களை இங்கு பெறமுடியாது. பொதுமக்கள் கூடுதல் விலைக்கு தனியார் நிலையத்திற்குச் செல்ல வேண்டி நேரிடுகிறது.

காரைதீவில் நாணயக்குற்றி தொலைபேசி கூட இதுவரை நிறுவப்படவில்லை.

## கல்முனை ப.நோ.கூ. சங்க மோசடிகள் மலிந்துள்ளன

கல்முனை ப.நோ.கூ சங்கத்தில் இடம் பெற்றுவரும் தொடர்ச்சியான மோசடி நடவடிக்கைகள் மக்களைப் பெரிதும் பாதித்து வருகின்றன. இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததால் மக்களுக்கு அதிகாரிகள் மீது அவநம்பிக்கை ஏற்படும். எனவே உரிய நடவடிக்கை எடுத்து சங்க நிருவாகத்தை கல்முனை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். இவ்வாறு கோரும் மனு ஒன்றை ஜனாதிபதிக்கு மு.போ.வாலிப முன்னணி அனுப்பியுள்ளது.

## கண்டியில் வெசாக் பண்டிகை!

(கண்டி நிருபர்)

நடைபெற்று முடிந்த வெசாக் பண்டிகையை பௌத்த மக்கள் இம்முறை ஆடம்பரமாக கொண்டாடாது போனாலும் கூட நாட்டின் பாதுகாப்பு நிதிக்கு கணிசமான தொகைப் பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. நிதி திரட்டுவதில் இளைஞர் அமைப்புகள் முன்னணி வகித்தன.

வழமையாக கண்டி, மாத்தளை, கேகாலை போன்ற இடங்களில் வெசாக் அலங்கார பந்தல்கள் விரல் விட்டே எண்ணக் கூடியதாக அமைந்திருந்தன. கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் பல சமூக நல அமைப்புகள் டிக்கற்றுகளை அச்சிட்டு அவற்றை பொதுமக்கள் முன்னிலையில் சென்று பாதுகாப்பு நிதிக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்தன.

இதன் மூலம் ஓரளவு நிதி திரட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல இடங்களிலும் பௌத்த கொடிகளையே காணக் கூடியதாகவும் இருந்தன.

## 'உதயன்' தடை நீக்கப்படும்? பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா உறுதி!

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' தினசரி பத்திரிகை அலுவலகம் கடந்த வாரம் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டது தெரிந்ததே. இந்தத் தடையை நீக்கி அப்பத்திரிகை வெளிவருவதற்கு ஆவண செய்ய வேண்டுமென்று தகவல்துறை பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா அவர்களை தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தினர் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர். இத்தடையை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதாக பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இரு மாதங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் மட்டக்களப்பில் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் சில சிங்கள பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடல் விடுதலைப் புலிகளுக்கு சார்பான கருத்தை அடிப்படையாகக் கொண்டது என்று சிங்கள நாளேடு ஒன்று குற்றஞ்சாட்டி எழுதி இருந்தது. இது தவிர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் பூ.சீவகன் அவர்களுக்கும் சில விஷமிகள் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர். இவைபற்றியும் அமைச்சர் ஹிஸ்புல்லாவிடம் குழுவினர் எடுத்துக் கூறினர். இதற்கும் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்திருந்தார்.

## கண்டி புனித பிரதேசத்தில் மது விற்பனை தடுக்கப்படும்?

(கண்டி நிருபர்)

புனித பூமியாகக் கருதப்படும் கண்டி மாநகரில் தலதா மாளிகை அமைந்துள்ள இடத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு இடைப்பட்ட பகுதியில் இயங்கும் சகல மதுபானக் கடைகளும் மூடப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் நிலவுகின்றன.

கடந்த 13ம் திகதி கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அஸ்கிரிய பௌத்த பீடத்தின் புதிய மகாநாயக்கரான எஸ். உடுகம ரத்னபால புத்தரக்கித்தவுக்கு மகா நாயக்கராக தெரிவு செய்யப்பட்டமை குறித்து உத்தியோக பூர்வதராதரப் பத்திரம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் பிரஸ்தாப மதுபானசாலைகளை மூடும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

புனித தலத்தில் மதுபானசாலைகள் இயங்குவதை எவராலும் ஏற்க இயலாது எனக் கூறி அவற்றை மிக விரைவில் மூடிவிட நடவடிக்கை எடுக்கும்படி புதிய மகாநாயக்கர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார். இந்த வேண்டுகோளை அதே இடத்தில் ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டு அதற்கான நடவடிக்கையையும் எடுப்பதாகக் கூறினார்.

கண்டி தலதா மாளிகையைச் சுற்றிவர உள்ள ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இயங்கும் 16 மதுபானசாலைகள் இதன் காரணமாக மூடப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

## முஸ்லிம் மாணவர்களுக்கு அனுமதி தடை நீக்கம்?

(கண்டி நிருபர்)

கண்டியில் இயங்கும் பிரபல பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் முஸ்லிம் மாணவர்களை அனுமதிப்பதில் ஏற்பட்டுள்ள பாரபட்சம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கண்டி முஸ்லிம் அமைப்புக்களின் சம்மேளனம் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து இவ்வாறு இருந்து வரும் தடைகளை நீக்கி விடுமாறு ஆணைக்குழு கல்வி,உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு விதந்துரைத்துள்ளது.

முதலாம் ஆண்டில் இவ்வாறு முஸ்லிம் மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் தடையாக இருந்துவரும் 12.08.1996 திகதிய 14ஆம் இலக்க சுற்று நிருபமும் 1960ஆம் ஆண்டின் 5ஆம் 8ஆம் ஆகிய இலக்க சுற்று நிருபங்களும் அடங்கிய விதிகள் குறித்து பிரஸ்தாப சம்மேளனம் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டிருந்தது.

இவை பற்றி ஆராய்ந்த மனித உரிமை ஆணைக்குழு அனுமதி தொடர்பாக இருந்து வரும் தடைகளை நீக்குமாறும் அல்லது புதுப்பிக்குமாறும் கோரி உடனடியாக 1996/14, 1990/21 இவ்விரு சுற்று நிருபங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கும்படி கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளரைப் பணித்துள்ளதுடன் இது பற்றி பாடசாலை அதிபர்களுக்கு கட்டளையிடுமாறும் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

## குடிநீருக்குத் தட்டுப்பாடு!

(கண்டி நிருபர்)

கலகா புப்புரஸ்ஸ வீதியில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு குடிநீர் கிடைப்பதில்லையாம்.

இவ்வீதியில் வசிக்கும் குடியிருப்பார்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் நீர் விநியோக வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்கள் கழிய முன்னரே நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

குடிநீருக்காக அல்லற்படும் இப்பகுதி மக்கள் தமது சொந்த செலவில் இப்பொழுது பவுஸர் மூலம் நீரை எடுத்து வந்து தாமாகவே விநியோகிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி கலகா வீதியின் 18ஆம் மைல் கல் பிரதேசத்தில் இருந்து விநியோகிக்கப்படும் குழாய் நீரே இவ்வாறு தடைப்பட்டு போயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## திருமலையில் வெசாக் இம்முறை சோபை இழந்தது

கடந்த வருடங்களைப் போலல்லாது இம்முறை திருகோணமலையில் வெசாக் கொண்டாட்டங்கள் சோபையிழந்த நிலையில் நடைபெற்றன.

வழமையாக சந்தைப்பகுதியில் வெசாக் பந்தலும் ஏனைய இடங்களில் சோடனைகளும் இடம் பெறும். திடீர் களியாட்டக் கூடங்கள், கடைகள் என்று நகரமே அமர்க்களப்படும்.

ஆனால் இந்தமுறை சந்தைப்பகுதிப் பந்தல் மட்டுமே சிறப்பாக காணப்பட்டது. கடைத்தெருக்களோ களியாட்டக்கூடங்களோ அமைக்கப்பட்டிருக்கவில்லை.

மக்களும் வெகு குறைவாகவே கலந்து கொண்டனர். தமிழ், முஸ்லிம் மக்கள் இம்முறை மிகவும் அரிதாகவே கலந்து கொண்டனர்.

வீதிகளில் பாதுகாப்புத் தரப்பாரின் கண்காணிப்புகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. அனைவரும் பால் வயது வேறுபாடின்றி கடுமையாகச் சோதனையிடப்பட்ட பின்னரே வெசாக் பந்தல் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வழமையாக இங்கு நடைபெறும் வெசாக்தினக் கொண்டாட்டங்களில் தமிழ் மக்கள் பெருமளவில் கலந்து கொள்வது வழக்கம் என்று இங்கு குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்சனைத் தீர்வில் மலையக மக்களை ஒதுக்கிவிட முடியாது!

இந்த நாட்டில் இனப்பிரச்சனையை தீர்த்துவைத்து அமைதிக்கான ஒரு வழியை ஏற்படுத்தும்போது, வட-கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களை மட்டும் கருத்திற் கொண்டு முடிவுகட்ட முடியாது. மத்திய மலையகத்திலும் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் ஆகியவற்றையும் சீர்தூக்கி பார்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்த நாட்டின் சிறுபான்மையின மக்களை இன்று கணக்கிடும்போது மலையகத்தில் வாழும் 15 இலட்சம் தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் சீர்தூக்கி பார்க்க வேண்டியது அவசியமாகும்.

இத்தகைய கருத்தை வலியுறுத்தும் முகமாக மலையக மக்கள் முன்னணியின் அரசியல் குழுவினர் அண்மையில் பல வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து விளக்கமளித்து வருகின்றனர்.

ரஷ்யா, ஃபிரான்ஸ், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, தாய்லாந்து ஆகிய நாடுகளின் தூதுவர்களை ம.ம.முன்னணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பெ. சந்திரசேகரன் தலைமையில் சென்ற குழுவினர் தமது கருத்தை வலியுறுத்திவந்துள்ளனர்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இந்த நாட்டு பொருளாதாரத்தினை தட்டி எழுப்பி நாட்டின் அபிவிருத்திக்கு முதுகெலும்பாக இருந்த இம்மக்கள் அரசியலில் உரிய பிரதிநிதித்துவம், தாய்மொழி பிரயோகம், மனித உரிமைகள், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், குடியிருப்பு உரிமை இழந்தவர்களாக இருப்பதை புள்ளி விபரங்களோடு வெளிப்படுத்தும் மகஜர் ஒன்றினையும் தூதுக் குழு சம்பந்தப்பட்ட தூதுவர்களிடம் கையளித்தது.

## தகிக்கும் உஷ்ணம்

நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மட்டுமல்லாமல் வேறுபல பகுதிகளிலும் தாங்க முடியாதளவுக்கு அகோர வெப்பம் நிலவி வருகிறது. காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் வெளியில் நடமாட முடியாதபடி தகிக்கும் உஷ்ணம் காணப்படுகிறது.

இரவு வேளையிலும் அதிகளவு வியர்த்துக் கொட்டுகிறது. கொதிக்கும் வெப்பக் கொடுமையினால் பலவித உடற் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன.

கண்நோய், சொறி சிரங்கு, வயிற்று உபாதைகளும் பரவியுள்ளன.

## கிழக்குப் பல்கலைக்கழக திருமலைப் பிரிவு மூடப்படும்

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலைப் பிரிவு இவ்வாண்டு இறுதியுடன் இழுத்து மூடப்படலாம் என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது.

23.05.1993 இணைந்தபல்கலைக்கழகக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவு பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒரு வளாகமாகக் மாற்றப்பட்டது.

பல்கலைக்கழகக் கல்லூரியாக இருந்த காலத்தில் இங்கு கணக்கியலும் நிதி முகாமைத்துவம், ஆங்கிலம் ஆகிய இரு துறைகளில் இரு வருட டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. வளாகமாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து இவ்விரு பயிற்சி நெறிகளும் பட்ட நெறிகளாக மாற்றப்பட்டன.

இங்கே டிப்ளோமா பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்கள் வேறு பல்கலைக் கழகங்களில் சேர்ந்து பட்ட நெறியைப் பூர்த்தி செய்து தொழில் பெற்று விட்டதாகக் கூறும் இதன் மாணவர்கள் வளாகத்தில் பட்ட நெறியைப் பயிலப்போய் ஏழாவது வருடமாகப் படிப்பதாக கூறுகிறார்கள்.

நாற்பதுக்கும் குறைவான எண்ணிக்கையுடைய இம்மாணவர்கள் இவ்வாண்டு பரீட்சையுடன் வெளியேற இருக்கிறார்கள். ஆனால் புதிய மாணவர்கள் எவரும் இதுவரை சேர்த்துக்கொள்ளப்படாததால் இவ்வளாகம் செயலிழக்கலாம் என அஞ்சப்படுகிறது.

திருக்கோணமலை அரசியல் வாதிகள், கல்விமான்கள் இவ்விடயத்தில் உடனடி தலையீடு செய்தாலன்றி இப்பிரிவு மூடப்படுவது சர்வநிச்சயம் என மாணவர் தலைவர்கள் முரசுக்குத் தெரிவித்தனர்.

## கலகா கல்லூரியின் குறைபாடுகள்

(கண்டி நிருபர்)

பெருந்தொகையான தமிழ் மாணவர்கள் கல்வி பயிலும் கலகா இராமகிருஷ்ணா மத்திய கல்லூரியில் பல குறைபாடுகள் நிலவுவதாக அப்பகுதி பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கல்லூரியில் நிரந்தர அதிபர் ஒருவர் இல்லை. வர்த்தகம், புவியியல், சமயம் சமூகக் கல்வி போன்ற பாடங்களை உயர்தர வகுப்பிலும் ஏனைய வகுப்புகளிலும் கற்பிக்க ஆசிரியர்களும் இல்லை என நிலவும் குறைகளை பற்றி கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெற்றோர்கள் சிலரும் நலன் விரும்பிகளும் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் திரு.வே.இராதாகிருஷ்ணனை அவரது அமைச்சில் சென்று சந்தித்து பிரஸ்தாப குறைகள் பற்றி எடுத்துரைத்தும் கூட குறைகள் இற்றைவரை நிவர்த்திக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின்

# 14 நூல்கள் ஒரே மேடையில் வெளியீடு!




புலம் பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களின் 14 தமிழ் நூல்கள் இலண்டன் மாநகரில் வெளியிடப்பட்டன. இச் சாதனைக்குரிய சென்னை மணிமேகலைப் பிரசுராலய அதிபர் ரவி தமிழ்வாணனுக்கு விருது வழங்கப்படும் போது பிடிக்கப்பட்ட படம்.

"புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களை நூல்களாக வெளியிடுவதில் மட்டுமல்ல, அவைகளை தமிழ் நாடு மற்றும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதிலும் சென்னை மணிமேகலைப் பிரசுரம் ஆற்றி வரும் மகத்தான சேவை பாராட்டுதற்குரியது", என்று பிரபல தமிழ் எழுத்தாளர்-நூலாசிரியரும் 'மேகம்' மாதமிருமுறை வெளிவரும் பல்சுவைத் தமிழ்ச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான டாக்டர் க.இந்திரகுமார் குறிப்பிட்டார்.

புலம் பெயர்ந்த 14 தமிழ் எழுத்தாளர்களின் புத்தக வெளியீட்டு விழா சமீபத்தில் இலண்டனில் டிரினிட்டி கம்யூனிட்டி சென்டர் மண்டபத்தில் ஒரே மேடையில் நடைபெற்றது. இந்த உலக சாதனை படைத்த நிகழ்ச்சியில் பேசும்போதே டாக்டர் இந்திரகுமார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விழாவில் வைத்து 14 தமிழ் எழுத்தாளர்கள் சார்பில் 'தேச எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பதிப்பாளர்கள' (PUBLISHERS SANS FRORNTIERS) என்ற விருது மணிமேகலைப் பிரசுரத்திற்கு வழங்கப் பட்டது. விழாவின் தலைமை விருந்தினராக ஜெர்மனியிலிருந்து கலந்து கொண்ட 'உதயன்' பத்திரிகையின் ஐரோப்பியநிர்வாக ஆசிரியரான திரு. சிவனடியான் ஸ்ரீபதி அந்த விருதை தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த மணிமேகலைப் பிரசுரத்தின் நிர்வாக இயக்குநர் திரு.ரவி தமிழ்வாணன் அவர்களுக்கு பலத்த கரகோஷத்தினிடையே வழங்கினார்.

விருது வழங்கப் பட்டதற்கான காரணத்தை 14 தமிழ் எழுத்தாளர்கள் சார்பிலும் விளக்கிப் பேசிய டாக்டர் இந்திரகுமார் மேலும் கூறியதாவது:

"எழுத்தாளனுடைய பணி எழுதுவது-நூல்களைப் படைப்பது; பதிப்பாளனுடைய பணி அவைகளை அச்சேற்றிச் சந்தைப் படுத்துவது ஓர் எழுத்தாளனே பதிப்பாளனாக மாறுவது மிகச் சிரமமான பணி. மணிமேகலைப் பிரசுரத்தினர் புலம் பெயர்ந்த எழுத் தாளர்களைத் தேடி மேற்கு நாடுகளுக்கு வருகிறார்கள்.

பிரபலமான எழுத்தாளர்களின் ஆக்கங்களை மட்டும்ல்ல, இலைமறை காயாக உள்ள நம் எழுத்தாளர்களையும் தேடிக் கண்டுபிடித்து, அவைகளைச் சென்னைக்கு எடுத்துச் சென்று அச்சேற்றுகிறார்கள். 'எழுத்தாளர்-பதிப்பாளர் கூட்டு முதலீட்டுத் திட்டத்தின்' கீழ் இவை வெளியிடப்படுகின்றன. எழுத்தாளனுக்கு 100 அல்லது 150 பவுண்ட்ஸ்களே செலவாகிறது. நூல் வெளிவந்த பின் வருமானமும் கிடைக்கிறது. அவர்கள் நூல்களை தமிழகத்தில் ஆகக் கூடிய விற்பனை உள்ள பத்திரிகைகளின் வாரமலர் சஞ்சிகைகளின் இந்திய ரூபா 35.000 வரை தாமே பணம் செலுத்தி விளம்பரம் செய்கிறார்கள். விற்கிறார்கள். தமிழக நூலகங்களுக்கும் நூல்களை விற்கிறார்கள். அது மட்டுமா?

"பல்வேறு பரிசுத் திட்டங்களுக்கும் நூல்களை அவர்களே அனுப்பி வைக்கிறார்கள். எனது நூலுக்கு கலைஞர் கருணாநிதியிடமிருந்து தமிழக அரசு விருது கிடைத்தது. எனது சக ஈழ எழுத்தாளர்களான ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்துக்கு தமிழக லில்லி தேவசிகாமணி விருதும், அ.முத்துலிங்கத்துக்கு இலங்கை அரசின் சாகித்திய விருதும் கிடைத்தன. விருதுப் போட்டிக்கு எனது நூல்களை அனுப்பி வைத்தது மணிமேகலைப் பிரசுரம் தான்.

எமது நூல்கள் தமிழகத்திலும் விற்கப்படுகின்றன. அங்குள்ள நூலகங்களை அடைகின்றன. அங்கு எமக்குப் பரிசுகளும் கிடைக்கின்றன. இவைகளுக்கும் மேலாக நூல் விற்பனை மூலம் வருமானமும் கிடைக்கிறது. எமது வீடு தேடி வந்து எமது ஆக்கங்களை எடுத்துச் சென்று பதிப்பிக்கும் அவர்கள் ஆற்றும் சேவை மகத்தானது. இத்தகைய சேவையை மணிமேகலைப் பிரசுரத்தைத் தவிர உலகில் வேறு யாருமே வழங்குவதில்லை. புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள் இந்த அரிய வாய்ப்பைத் தவற விடக்கூடாது."


## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

### SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

### வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஓடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

### மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் மே 21 முதல் 28 திகதி வரை**

(கொழும்பு விலாசம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street, No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல்: 072-609388

**கல்முனையில் ஜூன் 03. 04ம் திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் ஜூன் 10,11 திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.**



## விளம்பரப் பகுதி

### அஸ்மா நோய்க்கு வைத்தியம்

- * தொய்வு * இழுப்பு
- * இளைப்பு * மாய்ச்சல்
- * மூச்சுத்தட்டல் * இருமல்
- * சளி * மூக்கடைப்பு
- * தலைவலி * தும்மல்
- *பீனிசம்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

02.05.98 வீரகேசரி பேப்பரில் வெளிவந்தது.

அஸ்மா நோயைக் குணப்படுத்திய டொக்டருக்கு நன்றி

பலவருடங்களாக அஸ்மா நோயினால மிகவும் கஷ்டப்பட்டு மூன்று நேரமும் மருந்துகள் பாவித்தும் நேர காலமின்றி அவஸ்தைப் பட்டுக் கொண்டருந்து நடக்கவும் முடியாத நிலையில் சென்ற என்னை 25, சில்வெஸ்டர் வீதி, மவுண்ட் லேவினியா (கல்கிசை) இல் வைத்தியம் செய்யும் அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்கள் சிகிச்சை அளித்து முழுக்குணமடைய வைத்துள்ளார். பல மாதங்களாக மருந்தே பாவிக்காமல் ஒரு காலத்தில் இப்படியான நோயாளியாக இருந்தேனா என்ற நினைப்புக்கூட இல்லாமல் சந்தோஷமா இருக்கிறேன் என்பதை இந்நோயால் கஷ்டப்படும் பிற நோயாளர்களுக்கு அறிவிப்பதன் மூலம் என் கண் கண்ட தெய்வமான டொக்டருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். சு. மகேஸ்வரி 221/6. நாயக்ககந்த வீதி, ஹெந்தலை, வத்தளை.

டொக்டர்
**சுறாஜ் சோமசுந்தரம்**
அஸ்மா சிகிச்சை நிபுணர்

Ph.DH(Ind); M.B.B.SCH (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)

தொலைபேசி 074-201582 -- 728767

இவ்விடத்தில் பழைய நோயாளர் களும் மற்றும் பதிவு செய்த புதிய நோயாளர்களும் செவ்வாய் - வியாழன்-சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும், தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00 மணி வரையும் பார்வையிடப்படுவர்.

சகல புதிய நோயாளர்களும் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் நான்கு நாட்களுக்கு முன்பு பதிவு செய்து வரவும். தூர மாவட்டத்திலுள்ள நோயாளர்கள் காலை நேரங்களிலும் பார்வையிடப்படுவர்.



## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்





நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மாந்திரீக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மாந்திரீக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மாந்திரீக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTD.ஐ உருவாக்கியது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

தீறும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த ஆட்ருக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகளாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே! 33 மாந்திரீகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ , தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பி. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: 466271, 466571, 431137, 470615, 342463, 342464, 344831, 344832 இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
**Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk
இன்னும் தமது சேவைகளை அறிய எமது இணையத்தள வெப் தளத்தை நாடவும்
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

**வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:**
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.



உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

- * காய்ச்சல் * தலைவலி
- * தலைச்சுற்று * தலைப்பாரம்
- * ஜலதோஷம்
- * இருமல்
- * மூக்கடைப்பு
- * பல்வலி
- * காதுவலி
- * வயிற்றுவலி
- * வாதத்தால் வரும் வலிகள்
- * உணர்ச்சியற்ற பாகங்கள்
- * சுளுக்கு
- * தசை வலிகள்
- * பூச்சிக் கடிகள்
- * பிரயாணக் களைப்பு
- * மதுவால் ஏற்படும் பிரச்சினை




ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.

ஏக விநியோகஸ்தர் :

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
Tel : 888214 Fax : 682984








ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
மூன்றே மாத காலத்தில்
தபால் மூலமாக
கற்றுத்தரப்படும்

எம்மிடம் கல்விகற்கும் மாணவ/ மாணவிகளின் கருத்தே எமது கல்வி நெறியின் சிறப்புத் தன்மையாகும்

*நீங்களும் பயமின்றி ஆங்கிலம் பேச வேண்டுமாயின் மேலதிக விபரங்களுக்கு 3.50 முத்திரையொட்டிய சுயவிலாச மிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க...*

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, First Floor, P.O. BOX 162.
Colombo Central Super Market
Complex Colombo-11. T.P. 434770.
BRIGHT FUTURE IN YOUR HAND



தங்களின் வாழ்க்கையின் கஸ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாண தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன் மனைவி கருத்துவேறுபாடு, ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும் பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம் காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :
**MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.**
தொலைபேசி-0142552036



## ஹோமியோபதி லண்டன்

தமிழகத்தின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர் Dr.R.தியாகராஜன் DHMS, AMRSH (Lon) ஜுன் மாதம் லண்டன் விஜயம் செய்கிறார். ஆஸ்மா, நீரிழிவு, மூட்டுவாதம், தோல்வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கு சிறந்த முறையில் ஆலோசனை பெற தொடர்பு கொள்க. T.P..... 181 - 5735427 திரு. நமோ /0091-9843051099/009477602513/Email homoeocare @usa.net& 9843051099 @bplmobile. com/www,homoeocare.com.



## நவசித்தர் மருத்துவம்



வாதம், நீரழிவு, பீனிசம், தீராததலைவலி, வெள்ளைபடுதல், கிரந்திநோய், சுவாதம், முடியுதிர்தல் தாது நஷ்டம் இன்னும் அனேக நோய்களுக்கு வைத்தியம் செய்வதோடு, கிரகதோஷங்கள், ஆவிகளின் தொல்லை, எதிரிதொல்லை, விரும்பியவரை வசப்படுத்த, வேண்டாதவரை விலக்க, கல்வி, தொழில் முன்னேற்றமடைய, வீடு வளவு காவல் செய்ய, குடும்பப்பிரச்சனை தீர சக்திவாய்ந்த மூலிகைகளின் மூலம் பராசக்தியின் அருளால் மாந்திரீக மருத்துவமும் செய்யப்படும். மட்டக்களப்பு, சித்த, ஆயுள்வேத பரம்பரை மருத்துவர்.

T.M.PILLAI, "YOHANANTHA VAITHIYASALAI"
118/B, MAIN STREET, PANDIRUPPU - 01, KALMUNAI. SRI LANKA.



## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல்,கல்வி, தொழில், விவாகம், வெளி நாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன் -மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இலங்கைத் தமிழர் நெருக்கடியில் கலைஞர் ஆடும் அரசியல் நாடகம்

தமிழ்நாட்டு அரசியல் இலங்கைத் தமிழ் பிரச்சனையில் ஆரம்பம் தொடக்கமே பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வந்ததொன்று. கருணாநிதி அவ்வரசியல் நீரோட்டத்தில் படகு செலுத்தும் நெழிவு சுழிவு தெரிந்த அனுபவம் வாய்ந்த மாலுமி. அந்த அரசியலுக்காக அவர் படகோட்டுகிறாரேயன்றி இலங்கைத் தமிழரின் அரசியலுக்காக அல்ல. இதைத் தெளிவாகப் புரியாதுவிட்டால் நாம் ஏமாளிகளாகத்தான் இறுதியில் ஆகிவிடுவோம்.

எம்மில் பலர் கருணாநிதி கூறும் மாறுபட்ட கூற்றுக்களைக் கேட்டு, உணர்ச்சிகரமான பேச்சுக்களைக் கேட்டு மகிழ்ந்துவருவதுண்டு. பலரும் ஏதோ பெரும் பக்கபலம் கிடைத்துள்ளதாகவும் இக்கட்டு நேரத்தில் உதவிக்கரம் தேடிவருமெனவும் நம்பியதுண்டு. 'தானாடாவிட்டாலும் தசையாடும்' என்று, இரத்த உறவு பாராட்டி, எண்ணயிருந்ததுமுண்டு. இவ்வாறு மகிழவும், நம்பவும், எண்ணவும் எம்மை எம் மூத்த அரசியல்வாதிகள் பழக்கி விட்டிருந்தனர்.

ஆரம்பகாலம் முதலே தமிழரசுக் கட்சியும் அதன் பின் வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும், இத் தமிழக அரசியல் மீதும், அரசியல் வாதிகள் மீதும் அதீத நம்பிக்கையை ஊட்டி, எமக்கான ஆபத்சகாயர்களாகவும், இரட்சகர்களாகவும், மானசீகத் தலைவர்களாகவும் கற்பிதங்களை ஊட்டி வளர்த்து வந்தனர். அது அவர்களின் அரசியலுக்குத் தேவையாகவும் இருந்தது. தம்மை ஒரு பலமான சக்தியாகவும், வெறும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் காட்டிக்கொள்ள இத் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுடன் தம்மை இனங்காட்டிக்கொள்ள அவர்கள் முற்பட்டனர்.

அதனால் தமிழ்நாட்டு அரசியலுக்கும் இலங்கைத் தமிழரின் அரசியலுக்கும் இருந்த பெரிய வேறுபாடுகளை எம் மக்களுக்கு உணர்த்தி, அறிவூட்டி, அளவுகடந்த நம்பிக்கையில் வீழ்ந்துவிடாது தடுக்கத் தவறிவிட்டனர். மாறாக, இரு அரசியலும் ஒன்றுபட்டதுபோன்ற ஒரு சித்தரிப்பையே இவர்கள் ஏற்படுத்தி வைத்திருந்தனர்.

அரசியல் மட்டுமின்றி, கலை கலாசாரம், மதம், ஆலயங்கள், ஆன்மீகத்தலைவர்கள், பழம் பெருமைகள், கீர்த்திகள், வீரபுருஷர்கள், இலட்சியங்கள், மாமன்னர்கள் முதல் இன்றைய சினிமா நாயகர்கள் வரை யாவற்றுக்கும் தமிழ்நாட்டையே கனமாகக் கொண்டு வார்க்கப்பட்ட எம் மனவார்ப்பில் மிகச் சுலபமாகவே தமிழ்நாட்டு அரசியல் பற்றிய அதீத நம்பிக்கை பற்றிக் கொண்டது.

இந்தப் பின்னணியில்தான் இன்று மாறுபடும் கருணாநிதியின் பேச்சுக்களை எம்மில் பலரால் புரிந்துகொள்ள முடியாமலும் இருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றி இந்தியத் தலைவர்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள், எடுத்த நிலைப்பாடுகள் முற்றுமுழுதாக இலங்கைத் தமிழரின் நிலை கருதியல்ல.

இந்தியத் தமிழரின் நிலையில் நின்றும், இந்தியத் தேசிய உணர்விற்கு முரண்படாமலும் நின்றுகொண்டே அவர்கள் இலங்கைத் தமிழரின் பிரச்சனையை நோக்கினர். அதிலும் இலங்கைத் தமிழர் பிரச்சனையைக் கையாண்டு தமிழ்நாட்டு அரசியலில் தமது நிலையை உயர்த்திக் கொள்ளலாமா என்ற ஒரு நோக்கத்தோடுதான் இதிலும் ஈடுபட்டனர்.

இப்போது கருணாநிதி பேசியுள்ள மாறுபட்ட பேச்சுக்கள் இதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

இலங்கையில் இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி குறித்து கருணாநிதி என்ன கூறப்போகிறார் என்பது மிக முக்கியமான அரசியல் எதிர்பார்ப்பாக இருந்த தருணத்தில், முதலில் கருணாநிதி எதையுமே கூறவில்லை. இந்திய மத்திய அரசாங்கம் என்ன கூறப் போகிறது என்று பார்த்துவிட்டு அதற்கேற்ப தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதே அவரின் நோக்கமாக இருந்தது.

இந்திய மத்திய அரசாங்கமோ, இலங்கை பிரச்சனையில் இராணுவ ரீதியில் தலையீடு செய்யப்போவதில்லையெனவும் மனிதாபிமான ரீதியிலான உதவிகளைச் செய்யத் தயாரெனவும் தெரிவித்ததைத் தொடர்ந்து கருணாநிதி மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சட்டசபையில் வரவேற்றார். ஆக, தனது நிலைப்பாடு எதையும் தெரிவிக்காது தவிர்த்துக் கொண்டார்.

அதேவேளை தேசிய நலனையே தான் இந்நெருக்கடியான நிலையில் பிரதானமாகக் கருதுவதாகவும் இவ்வாறு பின்னர் தெரிவித்திருந்தார் இவ்வாறு நழுவிக்கொண்ட பின், தமிழ்நாட்டில் இதர தீவிரக் கட்சிகளின் கையில் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கான பிடி சென்றுவிடக்கூடுமெனக் கண்டு மீண்டும் சட்டசபையில் வேறுவிதமாகப் பேசினார். போராடியோ, பேச்சுவார்த்தை மூலமாகவோ தமிழீழம் பெற்றால் தனக்கு மகிழ்ச்சியேயென்றும் விடுதலைப்புலிகள் தனது மனதில் இடம்பெற்றிருக்கிறார்கள் என்றும் கூறினார். அதேவேளை விடுதலைப் புலிகள் இந்தியாவில் ஒரு தடைசெய்யப்பட்ட இயக்கமென்றும், அதனால் அவர்கள் தமிழ் நாட்டில் இயங்க அனுமதிக்கப் படமாட்டார்களென்றும் கூறி தனக்கு வேறு கருத்து நிலைக்கு மாறக்கூடிய பக்க வழியொன்றையும் அமைத்துக் கொண்டார்.

இவ்வாறு கூறி ஓரிருநாட்களுள் அதற்கு முற்றிலும் எதிர்மாறாகப் பேசினார். இப்போது என்றுமே பேசியிருக்காதவாறு மிக அவதூறான வார்த்தைகளால் விடுதலைப் புலிகளை நிந்தித்தார்

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்குத் தலைமைதாங்க லாயக்கற்றவர்களென்றும், அவர்கள் அமிர்தலிங்கம், சிறிசபாரட்ணம், பத்மநாபா, உமாமகேஸ்வரன் முதலிய தமிழ்த் தலைவர்களைக் கொண்றிருக்கிறார்களென்றும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். இதில் உமாமகேஸ்வரனின் கொலையோடு புலிகளுக்குத் தொடர்பு இருக்கவில்லை. இந்த உண்மை கூடத் தெரியாமல் பழி சுமத்தும் பாங்கில் அவர் பெயரையும் இப் பட்டியலில் சேர்த்துக் கொண்டார்.


அத்தோடு, தான் முன்னர் டெலோ அமைப்பைத் தான் ஆதரித்ததாகவும், சிறிசபாரட்ணத்தின் கொலையையிட்டு மிக வருந்தியதாகவும், அத்தோடு புலிகள் மீதான அபிமானம் மறைந்துவிட்டதென்றும் இப் போது தெரிவித்திருக்கிறார். இன்னும் மேலே சென்று, முன்னர் தான் தமிழ் நாட்டில் நிதி திரட்டி சகல போராளி இயக்கங்களுக்கும் வழங்கியபோது புலிகள் அதனை நிராகரித்து விட்டார்கள் என்ற பழைய விடயத்தையும் ஞாபகப்படுத்தினார்.

இவை எல்லாம் இப்போது திடீரென ஏன் கூறுகிறார் என்பதே ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வாறான எண்ணம் அவரிடம் இருந்திருந்தால் ஏன் அவர் அவற்றை முன்னர் வெளியிடவில்லை. அப்படியானால் இந்திய மத்திய அரசாங்கம் எடுக்க உத்தேசிக்கும் ஏதாவதொரு நடவடிக்கைக்கு சாதகமான சூழ்நிலையைத் தமிழ்நாட்டில் உருவாக்க முற்படுகிறாரா? அல்லது வை.கோ, ராமதாஸ், நெடுமாறன் போன்ற புலிகள் சார்பான தமிழ்நாட்டு அரசியல் வாதிகளின் கருத்துக்கள் மேலோங்கிவிட்டதைத் தடுக்க முற்படுகிறாரா? தமிழ்நாட்டில் புலிகளின் போராட்டம் தொடர்பான உணர்வலைகளைத் தணிக்க முற்படுகிறாரா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

கருணாநிதியின் இந்த மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கும்போது ஒருபோதும் ஒரு தெளிவான பதிலைப் பெறமுயாத தன்மை அங்கு வெளிப்படும். இவ்வாறு விலாங்கு மீன் போன்று பிடிகொடுக்காமல் பேசுகின்ற வல்லமை அவருக்கு உண்டு மிக உணர்ச்சிகரமாகப் பேசினாலும், அப் பேச்சில் எம்மை வெகுவாகக் கவர்ந்து மகிழ்சியில் ஆழ்த்தினாலும் அதில் பிடிமானமான உறுதியான விடயங்கள் எதுவும் இருக்காது என்பதை நுணுகி ஆராய்ந்தால் கண்டு கொள்ளலாம்.

என்றபோதிலும்இப்போது கூறியுள்ளதில் அவரது உள்ளக் கிடக்கைகள் சற்று அதிகமாக வெளிப்பட்டுத்தான் உள்ளன. அவரது அடிமனதில் பழைய ஏமாற்றங்களின் வஞ்சம் செறிந்துள்ளதென்பதையும் அதை சாமர்த்தியமாக இதுவரை மறைத்துவைத்துள்ளார் என்பதையும் நாம் உணரக்கூடிய தாக உள்ளது. குறிப்பாக, தான் சேர்த்துக் கொடுத்த நிதியைப் புலிகள் நிராகரித்த அவமானம் இன்னும் அவரிடம் ஒட்டிக் கிடக்கிறது என்பதை அவர் தானாகவே வெளிப்படுத்தி விட்டார்.

அதேவேளை அவர் தான் ரெலோவைத் தான் ஆதரித்ததாக வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். அப்படியானால் புலிகள் எம்.ஜி.ஆரை நாடிச் சென்றது இயல்பானதையும் எம்.ஜி.ஆரை மகிழ்விக்கவே கருணாநிதியின் நிதியுதவியை நிராகரித்தனரென்பதையும் யாவரும் புரிந்து கொள்ளலாம். எனினும் கருணாநிதிக்கு அரசியல் எதிரியாக விளங்கிய எம்.ஜி. ஆரின் பக்கம் புலிகள் சென்றது பெருத்த மனக்கசப்பை தோற்றுவித்திருந்தது



அத்தோடு கருணாநிதி ஆதரித்த டெலோ அமைப்பை புலிகள் தடைசெய்ததும், டெலோ தலைவர் சிறிசபாரட்ணத்தைக் கொலைசெய்ததும் கருணாநிதி இலங்கைத் தமிழர் விடயத்தில் செல்வாக்குச் செலுத்த மேற்கொண்டிருந்த ஏற்பாடுகளைச் சிதைத்து எம்.ஜி.ஆரின் கரத்தை வலுப்படுத்தின.

அவ் வாதங்கங்கள் சிறிசபாரட்டணத்தின் மரணத்துக்கு கருணாநிதி எழுதிய பகிரங்கக் கடிதத்தில் தொனித்தன.

ஆனாலும் கருணாநிதி இவ் வுணர்ச்சிகளுடனும் ஆதங்கங்களுடனும் நின்றுவிட முடியாதவராக இருந்தார். தனது அரசியலை முன்னெடுத்துச் செல்ல இலங்கைப் பிரச்சனையில் வேறு மார்க்கங்களைத் தேட வேண்டியவராக இருந்தார்.

இலங்கைப் பிரச்சனையை தமிழக அரசியல்வாதிகள் எவ்வாறு கையாள நினைத்திருந்தாலும் தமிழக மக்களிடையே அது ஆரம்பத்தில் மிகுந்த அனுதாபத்தை ஈட்டியிருந்தது. அதனால் அந்த உணர்வுக்கு ஊடாகவே தமிழக அரசியல் வாதிகளும் தங்கள் நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் வகுக்கவேண்டியவர்களாக இருந்தனர். அதனால் கருணாநிதிக்கு புலிகள் மீது உள்ளூர இருந்த கோபதாபங்களை வெளிப்படையாக வெளிக்காட்டிக் கொள்ள முடியாதிருந்தது.

இத்தருணத்தில் எம்.ஜி.ஆர். மரணித்ததானது, கருணாநிதிக்கு ஓர் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. அந்நிலையில் எம்.ஜி.ஆர். வகித்த பாத்திரத்தைத் தான் வகிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பாழாக்கிக்கொள்ள கருணாநிதி விரும்பவில்லை.

அதனால் புலிகள் மீதான தனது அபிப்பிராயத்தை நீறுபூத்த நெருப்பாக உள்ளே வைத்துக்கொண்டு பகிரங்க அரசியலில் தன்னை ஒரு பொது மகனாகவும், தமிழ் மக்களின் பாதுகாவலனாகவும் வெளிப்படுத்த விழைந்தார்.

புலிகளைப் பொறுத்தவரை எம்.ஜி. ஆரின் இழப்பு வலதுகையை இழந்ததற்கு ஒப்பான பாரிய இழப்பாக இருந்தாலும் அவர்கள் இருக்கும் அரசியல் நிலையை ஈடுகட்டக் கூடியவாறு தம்மை மாற்றிக்கொண்டார்கள்.

இந்தியாவில் தேசிய நலன் என்பது பிரதானப்படும் நிலையில் மாநில அரசுகளின் கருத்துக்கள் இரண்டாம்பட்சமாகி விடும். இது அந் நாட்டின் குணாம்சம்.

இந்தவகையில் எம்.ஜி.ஆர். கூட மத்திய அரசாங்கத்துக்கு ஒத்துப்போகவேண்டிய நிலைக்கே ஆளானார். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்போது புலிகளை இணங்கவைக்க மத்திய அரசாங்கத்தின் சார்பில் நிர்ப்பந்தம் செலுத்த வேண்டியவரானார். அதனால் பின்னர் அவ்வொப்பந்தத்துக்கு கட்டுப்படாமல் புலிகள் இந்தியப் படைகளுடன் மோதலில் இறங்கினர்.

இத்தருணத்தை கருணாநிதி தனது அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டார். அவர் இந்தியப் படைகள் இலங்கையில் புலிகளுடன் மோதுவதை எதிர்த்துக் கோஷமெழுப்பினார். இந்நிலையில் புலிகளுடன் உள்ளூற இருந்த கோபதாபங்களை வெளிக்காட்டாது தனது அரசியல் முன்னெடுப்புகளுக்குச் சாதகமாகப் புலிகளைப் பயன்படுத்த விழைந்தார். புலிகள்சார்பாக, வட-கிழக்கு மாகாணசபையைக் கலைக்கும்படி வலியுறுத்தினார். அப்போதய மத்திய அரசாங்கமான காங்கிரஸ் அரசாங்கத்துடன் கருணாநிதி முரண்பட்டிருந்தார். எதிர்க் கட்சியான ஜனதா கட்சி தலைமையில் கூட்டமைத்திருந்தார்.

இந்த காங்கிரஸ் எதிர்ப்பு அரசியல் நிலைப்பாட்டுக்கு புலிகள் சார்பு பக்கத்தைத் தான் அவர் எடுக்கவேண்டியிருந்தது. அத்தோடு தமிழ்நாட்டு உணர்வலைகளும் அவ்வாறே இருப்பதாக அவர் நம்பினார்.

இந் நிலையில் அவர் மேலும் ஒருபடி சென்று இலங்கையிலிருந்து திரும்பிய இந்தியப் படைகளை வரவேற்கக்கூட முதலமைச்சரென்ற வகையில் செல்ல மறுத்து ஒரு 'ஸ்ட்டண்டை' மேற்கொண்டார்.

இதன்மூலம் 'தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பவன்' என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் நிலைநாட்ட முனைந்தார்.

**-நரன்-**

ஆனால் அதே கருணாநிதிதான் பாக்கிஸ்தான் ஊடுருவல்காரருடன் நிகழ்ந்த 'கார்க்கில் மோதலில்' அதே இந்தியப் படைகளுக்காக நிதிசேர்க்கவும் பின்னர் முன்வந்தார். முன்னர் தன்னை தமிழனாக முன்னிலைப்படுத்தியவர் இப்போது தேசியவாதியாக முன்னிலைப் படுத்த விழைகிறார்.

இப்போது அவரால் தான் தேசிய நலனையே பிரதானமாகக் கருதுவாரெனக் கூற முடியுமென்றால் அப்போது எப்படி இந்தியப் படைகளை வரவேற்க மறுத்தார் என்ற கேள்வி எழுகிறதல்லவா? அப்படியானால் 'தமிழன்' என்ற அவரது ஒரு நிலைக்கும் 'தேசியவாதி' என்ற மற்றைய நிலைக்கும் முரண்பாடு வருகிறபோது எதைத் தேர்ந்தெடுப்பார் என்ற சந்தேகமும் தலைதூக்குகிறதல்லவா?

அவர் எந்த அரசியலுக்கு எது சாதகமாகப் படுகிறதோ அதைத்தான் தேர்ந்தெடுப்பார் என்பதே அனுபவ உண்மை.

மத்திய அரசாங்கமாக காங்கிரஸ் இருந்த போது அதற்கு எதிரான அரசியலை முன்னெடுத்த கருணாநிதி 'தமிழனாக' நின்றார்.

மத்திய அரசாங்கமாக இப்போது அவரது கட்சி கூட்டாட்சி அமைத்துள்ள பாரதிய ஜனதா கட்சி இருக்கும்போது 'தேசிய வாதியாக' நிற்கிறார். இதில் புலிகளையோ, இலங்கைத் தமிழர் பிரச்சினையையோ எங்கு நிறுத்துவார் என்பது அவர் அவ்வப்போது வகிக்கும் அரசியல் பாத்திரத்தைப் பொறுத்தது.

கருணாநிதிக்கு மிகவும் அக்கறைதரும் மற்றெரு விடையம் யாதெனில் தனக்குப் பிறகு கட்சித் தலைமையை அவரது வழித்தோன்றல் ஸ்டாலினிடம் எப்படி பத்திரமாக ஒப்படைப்பது என்பது.

இதற்குச் சவாலாக எழுந்தவர்தான் வை.கோபாலசாமி. அவர் தி.மு.க. கட்சியின் துணைத்தலைவர் என்ற இரண்டாவது ஸ்தானத்துக்கு உயர்ந்து விட்டிருந்தார். அத்தோடு கருணாநிதி தனது அரசியலுக்காக சில இலங்கைத் தமிழர் பற்றி உணர்ச்சிகரமாக பேசவிழைந்தபோது வை.கோ. அதை முந்திக் கொண்டு மிக ஆவேசமாகப் பேசலாயினார். அதைவிட ஒருபடி மேலே சென்று இலங்கைக்குப் படகில் சென்று காட்டில் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து விட்டு வந்து விட்டார்.

இதனால் அவர் பெரும் பாரபரப்பாகப் பேசப்பட்டு துணிச்சலான தலைவராகச் செல்வாக்கைப் பெற்றுக் கொண்டார்.

இந்நிலையில் கட்சித் தலைமை தனக்குப் பின் தனது குடும்பத்திடமிருந்து பறிபோய் விடுமென்ற ஆபத்தை கருணாநிதி உணர்ந்தார்.

இதேவேளை ராஜிவ் கொலையால் இந்தியாவில் புலிகளுக்கு எதிரான உணர்வலைகள் எழலாயிற்று. இதனைச் சரியான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி வை.கோ. மீது ஒரு பாரிய பழியை சுமத்தினார் கருணாநிதி.

அதாவது வை.கோ. புலிகளைக் கொண்டு தன்னைக் கொலைசெய்யத் திட்டமிட்டார் என்ற பெரும் பழியைச் சுமத்தி வை.கோ.வை கட்சியை விட்டு நீக்கினார்.

புலிகளை ராஜிவ் ஆட்சிக்காலத்தில் சந்தர்ப்பத்துக்காக ஆதரித்த கருணாநிதி, சந்தர்ப்பம் மாறியதும் தன்னைக் கொலை செய்ய முயல்வதாகவே குற்றம் சாட்டுமளவு தலைகீழாக மாறக்கூடியவர் என்பதை ஏற்கெனவே நிருபித்துக் காட்டியுள்ளார்.

இந்நிலையில் 'புலிகள் தனது மனதில் நினைத்துள்ளார்கள்' என்று அண்மையில் சட்டசபையில் பேசிய பேச்சு எவ்வளவு போலியானது என்பதை அரசியல் அவதானிகள் புரிந்துகொள்வர்.

அதே வாயால்தான் தற்போது அவர்களைத் தூற்றியும் உள்ளார்.

கருணாநிதியின் எண்ணக்கிடக்கை என்னவென்பது புலிகளுக்கும் நன்கு தெரியும். அதனால் அவர்கள் கருணாநிதியை நம்பவில்லை. அதேவேளை கருணாநிதியிடம் எந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி வேலை வாங்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிந்திருந்தார்கள். மாகாணசபை ஆட்சிக் காலத்தில் மாகாணசபையைக் கலைக்கவும், இந்தியப் படைகளை வாபஸ் பெறவும் நிர்ப்பந்தம் செலுத்த அவர்கள் கருணாநிதியைக் கையாண்டார்கள்.

தற்போது கருணாநிதி என்ன செய்ய விழைகிறார் என்பதே சகலரதும் கவனத்துக்குரியதாகியுள்ளது.

அவர் இப்போது கூறியுள்ள கருத்துகள் மத்திய அரசாங்கத்துக்கு இசைவாகவே கூறப்பட்டுள்ளதாக அனுமானிக்க முடிகிறது. புலிகள் தொடர்பான ஒரு எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்துவது மத்திய அரசுக்கு ஒரு மறைமுகத் தேவையாக அமைந்துள்ளது. ஏனெனில் எக்கட்டத்திலாவது அது இலங்கை நெருக்கடியில் தலையிட நேரிட்டால் அதற்கு பாரிய எதிர்ப்பு இல்லாதிருக்கும் சூழ்நிலை அதற்கு அவசியப்படுகிறது.

அதற்காக கருணாநிதி இப்போது தனது புதிய அரசியல் வேடத்துடன் களத்தில் கால்வைத்துள்ளார். ■

## செய்திச் சிதறல்

★ இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியாளர்களின் மோதல்களை முறியடிப்பதில் வெற்றி கண்டவரான முன்னாள் பஞ்சாப் போலீஸ் அதிகாரி கே.பி.எஸ்.கில் இலங்கைக்கு வரவிருக்கின்றார். இலங்கை வெளி நாட்டமைச்சரின் கோரிக்கையை அடுத்தே இங்கு நடைபெறும் மோதல்களை தவிர்ப்பதற்கு ஆலோசனைகள் கூறுவதற்காகவே 'கில்' இங்கு வரவிருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

★ கடந்த 17ம் திகதி மட்டக்களப்பில் புதன்கிழமை மாலை வெசாக் தினத்தன்று அங்குள்ள மங்களராமய புத்த விகாரைக்கு அண்மையிலுள்ள ஒரு கடையின் அருகே குண்டு ஒன்று வெடித்தது. இதில் 29பேர் மரணமடைந்தனர். 74 பேர் படுகாயமடைந்தனர். வெசாக் விழாவைமுன்னிட்டு, அப்பகுதியில் ஏராளமான பொதுமக்கள் கூடியிருந்தனர். இவ்விபத்தில் இறந்தவர்களில் 24 பேர் அப்பாவிப் பொது மக்கள். காயமடைந்தவர்களிலும் 54 பேர் பொது மக்களாவர். மட்டக்களப்பு வாவிக்கப்பால் இருந்த ஓர் அனாதை விடுதியிலிருந்து 15 பிள்ளைகளுடன் அருட்தந்தை ஜெயச்சந்திரா அவர்களும் வெசாக் பார்ப்பதற்காக வந்திருந்தனர். இதில் 9 பிள்ளைகள் இக்குண்டு வெடிப் பால் மரணமடைந்தனர். அருட்தந்தை ஜெயச்சந்திரா படுகாயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

★ வட இலங்கையில் அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் மோதல்களுக்கு விரைவில் ஒரு முடிவு ஏற்படவேண்டும். இது தொடருமானால் ஏராளமான மக்கள் பலியாக வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே காலம் தாழ்த்தாது தீர்வொன்றினை எட்ட வேண்டும் என்று அமெரிக்காவில் தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி இராஜாங்க அமைச்சர் கார்ல் எம் இண்டர்பேர்த் வாஷிங்டனில் தெரிவித்துள்ளார். எல்.ரி.ரி.ஈ.யினரின் தமிழ் ஈழக்கோரிக்கையை அமெரிக்கா ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஐக்கிய இலங்கை என்னும் அடிப்படையிலே இன நெருக்கடியைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று அமெரிக்கா நினைக் கின்றது, இவ்வாறு கூறியுள்ள பிரதி யமைச்சர், இலங்கையரசு இராணுவ உதவி கோரினால் அமெரிக்கா அதனை பரிசீலனை செய்யவும் ஆயத்தமாகமிருக்கின்றது என்று கூறினார்.

★ யாழ் நகரிலிருந்து வெளிவரும் நாளேடான 'உதயன்' பத்திரிகையாலயம் வெள்ளிக்கிழமை அன்று மூடி சீல் வைக்கப்பட்டது. யாழ் குடா நாட்டில் நடைபெற்று வரும் யுத்தம் தொடர்பான செய்திகளை தணிக்கை செய்யாமல் பிரசுரித்து வந்தமையால் தான் 'உதயன்' காரியாலயம் மூடி சீல் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி பிரதேசத்தில் இரு தரப்பினருக்குமிடையில் இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் இருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக சிறப்புத் தகவல் மையம் அறிவித்தது. இவ்விருவரும் முரளி, வசந்தா என்ற பெயர்களையுடையவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

★ இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அந்நாட்டில் மேலும் இரண்டு வருடம் தடைசெய்திருப்பதாக அறிவித்திருக்கிறது. இந்தத் தடையை ஆளும் பாரதீய ஜனதாகட்சியின் ஓரங்கமான சிவசேனாவின் தலைவர் தக்கரே கடந்த திங்கட்கிழமை எதிர்த்தார். பின்னர் தடைவிதிக்கப்பட்டது சரியான செயலே என்று ஆதரிக்க முற்பட்டார்.

# அண்டை மண்டலத்தில்....


**சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு தமிழ்நாட்டின் மேட்டூர் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் வீரப்பனின் மகள் எழுதிய உருக்கமான கடிதம்.**

## அப்பா வீரப்பனுக்கு....

*அன்புள்ள அப்பாவுக்கு...*

நான்தாம்பா... உங்க மக வித்யாராணி! இப்ப நான் மேட்டூர் சென் மேரீஸ் ஸ்கூல்ல செகண்ட் ஸ்டேண்ட்டர்டு படிக்கிறேன்! எங்க ஸ்கூல்ல விழா நடந்தபோது எல்லா பசங்களோட அப்பாவும் அம்மாவும் வந்திருந்தாங்க! அவங்களோட புள்ளைகளுக்கு அவங்க சந்தோஷமா சாக்லேட் ஊட்டி விட்டதைப் பார்த்ததும் எனக்கு கஷ்டமா இருந்துச்சுப்பா! 'வித்யாராணி முன்னமாதிரி இல்லை! ஓடியாடி கலகலப்பா விளையாடாம உம்முன்னு இருக்கா!'னு எங்க 'சிஸ்டர்' கூட அம்மாகிட்ட சொன்னாங்க! முன்னாடி எனக்கு விபரம் தெரியாது! இப்ப விபரம் வரவர 'அப்பா மொகத்த பார்க்கணும்'னு ஆச வந்திருச்சுப்பா! நீ என்னய பாத்ததே கெடையாது! நானும் உம்முகத்த டி.வி.யிலயும், பேப்பர்லயும் தானப்பா பாத்துருக்கேன்! ரொம்ப அழுகயா வருதுப்பா! அப்பா... 'நீ இப்ப எங்க இருக்க?'னு தெரியாது! ஆனாலும் உன்னைய எப்படியாவது பாக்கணும்னு அம்மாகிட்ட மட்டும் சொல்லுவேன்!

நீ ஏன் காட்டுக்குள்ளேயே இருக்க? ஏன் வீட்டுக்கு வரமாட்டேங்கிற? எனக்கு சரியா புரியமாட்டேங்குதுப்பா! 'வீரப்பன் கொலகாரன் கொள்ளைக்காரன்னெல்லாம் சொல்றாங்க! நீ நல்ல அப்பாவா? கெட்ட அப்பாவா?'ன்னெல்லாம் கவலையா இருக்கும்! ஆனா நீ ரொம்ப நல்லவருப்பா! கஷ்டப்படுற குடும்பத்துக்கெல்லாம் நெறையா பண உதவி செஞ்சிருக்கியாம்... ஊர்ல பல பேர் இப்படி சொல்றாங்க! அதுனால நீ நல்லவருப்பா!



வீரப்பன்

போலீஸைப் பார்க்கிறபோது நல்லவங்களாத் தான் தெரியிறாங்க! ஆனா... உன்னைய புடிக்கிறதுக்காக அலையுறாங்களாம்! அதையெல்லாம் கேட்குறப்ப பயமா இருக்கு! எங்க ஸ்கூல்ல சிஸ்டரெல்லாம் அன்பா பழகுறாங்க! 'எம்.பி.பி.எஸ். படிச்சு டாக்டராகணும்னு' என்கிட்ட செல்லுவாங்க! 'உங்கப்பாவ நீ பாத்தா அவருக்கு 'அட்வைஸ் பண்ணுனு சொல்லிருக்காங்க! ஆனா உன்னைய நான் எப்டி பாக்குறது?

என் கூட ஹாஸ்டல்ல தங்கிருக்க பொண்ணுகளுக்கு 'நான் வீரப்பன் மக'ன்னு தெரியும்! ஸ்கூல் பொண்ணுங்கள்லாம் 'உனக்கென்ன... உங்க அப்பா பெரிய பணக்காரர்'னு சொல்லிக்காட்டுங்க! அஸ்மிதா, ஜீவிதா ரெண்டு பேரும் எங்கிட்ட நல்லா பேசுவாங்க! மத்த பொண்ணுங்க என்னைப் பார்த்தா விலகிப் போமிடுவாங்க! எனக்கு கஷ்டமாகத்தான் இருக்கு!

ஸ்கூல்ல நான் பென்சில், பேனா திருடுறேன்னு மணி அண்ணன் அம்மா கிட்ட சொல்லிஅடிவாங்கவிட்டாங்க! ஆனா நான் எதையுமே திருடலை! அந்த வருத்தத்தில வேலியில இருந்த ஊஞ்சலையை புடுங்கி தின்னுபுட்டேன்! இதெல்லாம் ஒனக்கு தெரியுமாப்பா? முன்னமெல்லாம் ஸ்கூல் புள்ளைங்க வம்பு பண்ணினா 'எங்கப்பா வீரப்பன்! அவர்ட்ட சொல்லி சுட்டுப்புடுவேன்'னு மிரட்டுவேன்! இப்ப வெவரம் தெரிஞ்ச பிறகு அப்படியெல்லாம் மிரட்றது இல்ல!

ஸ்கூல்ல இருந்து சிஸ்டர்ஸ் எங்களை டூர் கூட்டிப்போனாங்கப்பா! கோபிநத்தம்-செங்கப்பாடியிக்கெல்லாம் போனோம். செங்கப்பாட்டியில ஒரு ஆள்கிட்ட சிஸ்டர் விபரம் கேட்டு நம்மளோட காட்டை காட்டுனாங்க! நம்ம காடு முள்ளு மூடி கெடக்குதுப்பா! தென்ன மரத்துல தேங்காயெல்லாம் இத்தினிச் சூடு இத்தினிச்சூடுதான் இருக்கு! நம்ம காடு 'வேஸ்ட்'டா போகுதுன்னு வருத்தமா இருந்திச்சுப்பா!

செங்கம்பாடி ஊருக்குள்ள போனப்ப... அங்க இருக்கிற இலக்கியா அக்கா 'வீரப்பன் பொண்ணு வந்திருக்கா'னு சொல்லிட்டாங்கப்பா! என்னய வளச்சுக்கட்டி எல்லாரும் வேடிக்க பாத்தாங்க! 'கண்ண பாரு அப்படியே வீரப்பனாட்டம்'னு சொன்னாங்க! எனக்கு பெருமையா இருந்திச்சு! கூட்டம் கூடி போலீஸ் வந்து ஏதாவது ஆயிடுமோனு பயந்து 'ஏன் வீரப்பன் பொண்ணுனு நீ சொன்ன?'னு சிஸ்டர் திட்டினாங்க! இலக்கியா அக்கா தான் சொன்னாங்க. நான் சொல்லவே இல்லப்பா!

அம்மா ரொம்ப கஷ்டப்படுறாங்க! ஆனா எல்லாரும் 'நீங்க பணக்காரங்க'னு சொல்றாங்கப்பா! அது வருத்தமா இருக்குப்பா!

இப்ப நான் இங்கிலீஷ் மீடியம் படிக்கிறேன்ப்பா! மொதல்ல நெருப்பூர்ல தாத்தா படிக்க வச்சார்! நெருப்பூர்ல படிக்கும் போது... நான் கடக்காரங்களையெல்லாம் மிரட்டி பிஸ்கட்டு-காசு கேட்டதா பத்திரிகையில போட்டாங்கப்பா! நான் யாரையும் மெரட்டலப்பா! கடைக்காரங்களே விருப்பப்பட்டு பிஸ்கட் பாக்கெட் குடுப்பாங்க! இது தான்ப்பா உண்மை!

நான் உன்னய நேர்ல பாத்து நெறைய பேசணும்ப்பா! பணம் வேணும்ப்பா! அம்மா ரொம்ப கஷ்டப்படுறாங்க!

எனக்கு எம்.பி.பி.எஸ் படிக்கணும்னு ஆச! அதுக்கு பணம் இல்ல! நீ என்னயப் பாக்கிறதுக்கு உடனே வாப்பா!

அப்புறம்... சந்தனக்கட்ட கடத்தக் கூடாது! யானையை சுடக்கூடாது! தந்தம் கடத்தக்கூடாது! கொல செய்யக்கூடாது!

நீ சரண்டர் ஆகணும்ப்பா! போலீஸ் ஒன்னைய விட்டப்புறம் நாம குடும்பம் சேந்துக்கலாம்!

அப்பா எனக்கு பிடிச்ச சாமி வெங்கடாசலபதி! தினமும் வெங்கடாசலபதி கிட்ட.. அப்பா, அம்மா, நான், தாத்தா... எங்க குடும்பம் ஒண்ணா சேரணும்னு வேண்டிக்கிட்டிருக்கேன்ப்பா!

'வீரப்பன் நெறைய பேர கொன்னுட்டான்'னு சொல்லுறாங்கப்பா! ஆனா.. வீரப்பன் பொண்ணு நல்லவனு எல்லாரும் சொல்றபடி நடந்துக்குவேன்! உசுருக்குப் போராடுற நோயாளிகளை நான் டாக்டராகி பல உயிர்களை காப்பாத்துவேன்!



வித்யாராணி

உன்னய பாக்கணும்னு ரொம்ப ஆசயா இருக்குப்பா! நீ வாரவரைக்கும் நான் தெகிரியமா இருப்பேன்! நம்ம குடும்பம் ஒண்ணு கூடணும்ப்பா!

எப்பப்பா வருவே?

**நன்றி: நக்கீரன்**

---

# பார்வையற்றவர்களுக்கான கம்பியூட்டர் சாப்ட்வேர்

தமிழ் உட்பட பல்வேறு இந்திய மொழிகளிலும் செயல்படக் கூடிய கம்பியூட்டர் சாப்ட்வேரை சென்னை ஐ.ஐ.டி. உருவாக்கியுள்ளது. இந்த சாப்ட்வேரைப் பயன்படுத்திப் பார்வையற்ற மாணவர்களும் கம்ப்யூட்டரைப் பயன்படுத்த முடியும் என்பது இதன் சிறப்பு அம்சமாகும்.

சென்னை ஐ.ஐ.டி. கம்ப்யூட்டர் அறிவியல் துறைப் பேராசிரியர் கல்யாணகிருஷ்ணனும் (54) அவரது மாணவர்களும் கடந்த பத்தாண்டு உழைப்பால் இதனை உருவாக்கிச் சாதனை புரிந்துள்ளனர்.

இந்த சாப்ட்வேரைக் கொண்டு ஒரு வார காலப் பயிற்சியில் பார்வையற்றவர்கள் கம்ப்யூட்டரை நன்கு இயக்க முடியும். இன்டர்நெட்டில் வரும் தமிழ் இதழ்களை இந்த சாப்ட்வேர் மூலம் பார்வையற்றவர்கள் ஒலி வடிவில் கேட்டு தெரிந்து கொள்ள முடியும். பார்வையற்றவர்கள் தட்டச்சு செய்வது போலவே, கம்ப்யூட்டரில் டைப் செய்து ப்ரெய்ல் எழுத்து வடிவில் பிரிண்ட் அவுட் எடுக்கவும் வாய்ப்புகள் உள்ளன. 'வித்யா விருட்சா' என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் பார்வையற்றவர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'கம்ப்யூட்டரில் இந்திய மொழிகளில் பார்வையற்றவர்கள் பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்குமா என்பது கனவாக இருந்தது. தற்போது நனவாகி உள்ளது' என்கிறார் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரியும் பார்வையற்றவரான மணி. இந்த சாப்ட்வேர் மூலம் குறுகிய காலத்திலேயே கம்ப்யூட்டரை இயக்கப் பழகிக் கொண்டுவிட்டார் அவர்.



பேராசிரியர் கல்யாணகிருஷ்னன் அவருக்கு உதவிய மாணவர்களுடன்

தமிழ், சம்ஸ்கிருதம், ஹிந்தி, குஜராத்தி, பெங்காலி, குருமுஹி (பஞ்சாபி), ஒரியா, தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது, ஆங்கிலம், ஹீப்ரு, கிரேக்கம், சிங்களம் மற்றும் யப்பானிய மொழி ஆகியவற்றில் இயங்கும்படியாக இந்த சாப்ட்வேர் வடிவமைக்கப் பட்டுள்ளது. இந்த மொழிகளில் டிரான்ஸ்லிட்டரேஷன் (வரிவடிவ மொழி பெயர்ப்பு), வெப்பேஜ்களை அமைத்தல் போன்றவற்றையும் எளிதாகச் செய்ய முடியும்.

தமிழில் இயங்கக் கூடிய சர்ச் என்ஜினையும் உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் நாம் உருவாக்கியுள்ள தமிழ் தகவல் தளத்தில் தேவையான தகவல்கள் எங்குள்ளன என்பதை விரைவில் கண்டறிய முடியும். திருக்குறளில் எந்த வார்த்தை எந்தெந்தக் குறள்களில் இடம் பெற்றுள்ளது என்பது போன்ற விவரங்களையெல்லாம் கண்டு பிடிக்கும் வகையில் 'டெக்ஸ்ட் அனாலிசிஸ்' செய்யும் வசதிகளும் இதில் உள்ளன.

யாருக்கு ஈ-மெயில் அனுப்புகிறமோ அவரிடம் அதற்குரிய பாண்ட் மற்றும் அதற்குரிய சாப்ட்வேர் இருக்கிறதா என்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

தமிழ் உள்பட இந்திய மொழிகளில் ஈ-மெயில் அனுப்ப முடியும். பல்வேறு இடங்களில் இருப்பவர்கள் இன்டர்நெட்டில் தமிழ் மொழி மூலம் உரையாடவும் பழங்காலச் சுவடி எழுத்துக்களை அப்படியே கம்ப்யூட்டரில் கொண்டு வரவும் இதில் சிறப்பு வசதிகள் இருக்கின்றன. தமிழ் நெட்-99 தரத்துடன் இந்த சாப்ட்வேர் பொருந்தியுள்ளது. தேவைக்கேற்றபடி சாப்ட்வேரில் மாறுதல்களைச் செய்து கொள்ளவும் முடியும்.

பத்தாண்டுகளுக்கு முன் சென்னை ஐ.ஐ.டி.யில் தமிழ் உள்பட இந்திய மொழிகளைக் கம்ப்யூட்டரில் பயன்படுத்துவதற்கான சாப்ட்வேரை உருவாக்கும் பணியைப் பேராசிரியர் கல்யாணகிருஷ்ணன் தொடங்கினார். அவருக்கு உறுதுணையாக ஒவ்வொரு ஆண்டும் ஐந்தாறு மாணவர்கள் வீதம் 35 பேர் தொடர்ச்சியாக இத்திட்டத்துக்காகப் பணியாற்றியுள்ளனர்.

இத்திட்டத்தின் பலன்கள் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்க வேண்டும் என்பதே எங்களது நோக்கம். இந்த சாப்ட்வேரின் புதிய பதிப்பை ஒரு மாதத்தில் இன்டர் நெட் மூலம் டவுன்லோடு செய்து கொள்ளலாம்' என்கிறார் கல்யாணகிருஷ்ணன்.

---




கிரிக்கெட் ஊழல் பத்தின 'ஃபைல்'னு நினைக்கிறேன்!

## அலசுவது -இராஜதந்திரி

# சர்வதேச, பிராந்திய ஒத்தாசையுடன் நோர்வேயின் புதிய சமரச முயற்சி

இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் நோர்வே மீளவும் கவனஞ் செலுத்த ஆரம்பித்துள்ளது.

நோர்வேயின் பிரதி வெளிநாட்டமைச்சர் ரேமன்ட் ஜொஹன்சன், மற்றும் இலங்கை விவகாரத்துக்கான விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் கொழும்பு வந்திருந்தனர்.

இலங்கைப் பிரச்சனைத்தீர்வு தொடர்பாக சந்திரிகா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் நோர்வே சமரசம் செய்வதை விரும்பியிருந்தன. இதனையடுத்தே இலங்கைப் பிரச்சனையைக் கையாள நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நெட் வெல்லபெக் முன்வந்திருந்தார்.

சிக்கலான சர்வதேச பிரச்சனைகள் பலவற்றைத் தீர்த்துவைப்பதில் சாதுரியமாகச் செயலாற்றியவரே திரு.நெட் வெல்லபெக். ஆயினும் அவர் இலங்கை விவகாரத்தில் தலையிட்டிருந்த சமயம் நோர்வேயில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு அவர் அங்கம் வகித்த ஆளுங்கட்சி பதவி கவிழ்ந்திருந்தது. இதனையடுத்து நோர்வே தரப்பிலிருந்து இலங்கை விவகாரம் சம்பந்தமாக காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

அதேசமயம் இலங்கையில் நோர்வேயின் சமரச முயற்சிகளுக்கெதிராக சிங்கள, பௌத்த தீவிரவாதிகள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் முன்பாக நோர்வேயின் தேசியக் கொடியும் எரிக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் குறித்து இலங்கையிலுள்ள நோர்வே இராஜதந்திர வட்டாரத்தினர் மிகுந்த கவலை கொண்டிருந்ததுடன், இவ்வாறு தமது நாட்டின் கொடி எரிக்கப்பட்ட சம்பவம் உலகில் இலங்கையிலேயே முதல் தடவையாக இடம்பெற்றது எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

இருந்தபோதிலும் இலங்கை பிரச்சனைத்தீர்வு விடயத்தில் நோர்வே தனது பங்களிப்பை வழங்க மீண்டும் முன்வந்துள்ளது. இதன் மூலம் இலங்கையில் இடம்பெற்ற தனக்கெதிரான ஆர்ப்பாட்டத்தை அந்நாடு பெருந்தன்மையோடு பொறுத்துக் கொண்டுள்ளதையே அவதானிக்கமுடிகின்றது.

நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் திரு. நெட் வெல்லபெக் இலங்கை நிலவரத்தை கையாளத் தொடங்கியபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரை நேரில் சந்தித்திருந்தார்.

இச் சந்திப்புகளின் பின்னர் அவர் அறிக்கையொன்றையும் வெளியிட்டார். 'அதில், இலங்கைப் பிரச்சனை மிகவும் சிக்கலானது. விரைவில் அதனைத் தீர்க்க முடியாது. நீண்ட கால அடிப்படையிலேயே தீர்வுக்கு வழிவகுக்கலாம்' என்று அவர் கூறியிருந்தார்.

இதனையே தற்போது நோர்வே தரப்பிலிருந்து இலங்கை விவகாரத்தைக் கையாளும் திரு.எரிக் சொல்ஹெய்மும் கூறியுள்ளார்.

இலங்கை விவகாரத்தில் நோர்வே ஆர்வங்காட்ட முன்வந்த சமயத்தில் அந்நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அதேசமயம் இலங்கையில் வடபுலத்தே ஆயுதப்படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் மோதலும் வெடித்திருந்தது.

இந்நிலையில் 'வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறியது' போன்ற சூழ்நிலையே ஏற்பட்டது. அரசும், புலிகளும் சமரச முயற்சிகளில் குதிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், ஏமாற்றமளிக்கும் விதத்தில் மோதல் மூர்க்கமடையலாயிற்று.

இக் கட்டத்திலேயே இலங்கையில் ஒரு சாரார் இந்தியாவின் உதவியை நாடியிருந்தனர். இலங்கை அரசும் இராணுவரீதியான உதவிகளைப் பெறும் விதத்தில் பல்வேறு நாடுகளையும் நாடியிருந்தது.

ஆயினும் நோர்வே முன்வைத்தகாலைப் பின்வைக்காது தொடர்ந்து இலங்கைப்பிரச்சனைக்குச் சமரசம் செய்யும் முயற்சியில் மீளவும் இறங்கியுள்ளது.

திரு.வெல்ல பெக் தமது சமரச முயற்சிகளை ஆரம்பித்த சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதி அன்ரன் பாலசிங்கத்தையும், ஜனாதிபதி சந்திரிக்காவையும் மட்டுமே சந்தித்திருந்தார்.

ஆனால் தற்சமயம் இலங்கை விவகாரத்தில் தலையிட்டுள்ள நோர்வே பிரதிநிதிகள் முன்னெச்சரிக்கையோடு நடந்து கொண்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த சில வாரங்களாக இலங்கையின் அரசியல், இராணுவ வட்டாரங்களில் தோன்றிய நிகழ்வுகளை நோர்வே உன்னிப்பாக அவதானித்துள்ளதையும் அறிய முடிகின்றது.

இலங்கையில் மட்டுமல்ல. பிராந்திய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இலங்கையின் இன்றைய நிலவரம் தொடர்பாக எத்தகைய அரசியல் நிலைப் பாடுகள் தோன்றுகின்றன என்பதையும் நோர்வே கவனத்தில் கொண்டிருந்தது.

இதன்காரணமாக இலங்கை விவகாரத்தைக் கையாளும் நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இந்தியாவுக்குக் கடந்த வாரங்களில் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நோர்வே இலங்கைப் பிரச்சனைத் தீர்வில் ஆர்வங்காட்டலாம். ஆனால் இந்தியாவே இலங்கையின் அயல் நாடாக இருக்கின்றது. அத்துடன் இலங்கை விவகாரத்தை ஏற்கனவே கையாண்ட அனுபவமும் இந்தியாவுக்கு உண்டு.

இத்தடவை ஆனையிறவு மோதலையடுத்து ஏற்பட்டநெருக்கடி நிலையைத்தொடர்ந்து இந்திய அரசாங்கமும் இலங்கை விவகாரம் குறித்து அதிக அக்கறை காட்டியிருந்தது.

இந்தியாவில் இருந்து கிடைக்கும் தகவல்களில் இந்தியப்படைகள் இலங்கை நிலவரம் தொடர்பாக உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீளவும் இத்தடவை தனது சமரச முயற்சிகளை ஆரம்பித்தபோது இந்தியாவின் நிலைப்பாட்டையும் இலங்கை தொடர்பாக நோர்வே அறிந்தே வைத்திருந்தது.

ஏது எப்படியிருந்தபோதிலும் இந்தியா உலகில் நான்காவது ஸ்தானத்தில் இராணுவ வல்லமையைக் கொண்டுள்ளது.

சர்வதேச அரங்குகள் பலவற்றிலும் இந்தியா செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்துடன் இலங்கைப் பிரச்சனையின் தாக்கம் இந்தியாவையும் பாதித்தே இருக்கின்றது.

இந்நிலையில் இந்தியாவையும் மீறி, அல்லது இந்தியாவின் விருப்பு, வெறுப்புகளுக்கு மாறான விதத்தில் எந்தவொரு வெளிச்சக்தியாலும் இலங்கை விடயத்தை யதார்த்த பூர்வமாக அணுக முடியாது.

இதை உணர்ந்த நிலையிலேயே நோர்வே பிரதிநிதி எரிக் சொல் ஹெய்ம் இந்தியா சென்று அங்குள்ள தலைவர்களைச் சந்தித்து உரையாடிய பின்னர் இலங்கையின் பக்கம் தமது கவனத்தைச் செலுத்தியிருந்தார்.

திரு.எரிக் சொல் ஹெய்ம் இலங்கை தொடர்பான தனது நாட்டின் பங்களிப்புப்பற்றி இந்தியாவிடம் மட்டுமல்ல, அமெரிக்காவுக்கும் விளக்கமளித்திருந்தார்.



அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் கார்ல் இன்டர்போர்த்

இதனையடுத்து இலங்கை விவகாரத்தில் நோர்வேயின் தலையீட்டை அமெரிக்கா வரவேற்றதுடன், திரு.எரிக் சொல் ஹெய்மின் பங்களிப்புக் குறித்தும் திருப்தி வெளியிட்டிருந்தது.

அமெரிக்க கிளின்ரன் நிர்வாகத்தின் பிரதி இராஜாங்க அமைச்சர் கார்ல் இன்டர்போர்த் நோர்வேயின் சமரச முயற்சிகள் குறித்து இந்தியாவின் இந்து பத்திரிகைக்கு விரிவான பேட்டியொன்றையும் வழங்கியிருந்தார்.

அப்பேட்டியிலேயே நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகளை அமெரிக்கா வரவேற்பதையும் அதேசமயம் யுத்தம் நீடிப்பதனால் மனிதாபிமானப் பிரச்சனைகள் பூதகரமாகத் தோற்றம் பெறுவதை இலங்கையில் அனைத்துத் தரப்பினருமே தவிர்க்க முன்வரவேண்டுமெனவும் திரு. கார்ல் இன்டர்போர்த் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் தற்போது இலங்கை விவகாரத்தை அணுகவந்துள்ள நோர்வே, அரசியல் தீர்வுக்கான வழிவகைகளைத் தேடும் அதேசமயம், யுத்தப் பிரதேசங்களில் அப்பாவிப் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளையும் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

எதுவுமறியாத அநாதரவான நிலையில் கைதடி வயோதிபர் இல்லத்தில் இருந்த பதினைந்து முதியோர்கள், அங்கே விழுந்த ஷெல் வெடிகாரணமாக உயிரிழந்துள்ளனர். மேலும் முப்பது முதியோர்கள் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இத்துயரச்சம்பவம் வடக்கே யுத்த நிலவரம் எவ்வளவுதூரம் மோசமடைந்துள்ளதென்பதையே புலப்படுத்துகின்றது.

இதுதவிர கடந்த சில வாரங்களாகவே யுத்தம் சூடுபிடித்த நிலையில் யாழ்ப்பாண மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் அரசியல் பிரச்சனை மட்டுமல்ல. மனிதாபிமானப் பிரச்சனையும் வெகுவாகவே சிக்கலடைந்துள்ளதையே அறிய முடிகின்றது.

இலங்கை தொடர்பாக தமது நிலைப்பாடுகளை வெளியிட்டுள்ள அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்புக் குறித்தும் தமது கரிசனையைப் பெரிதும் வெளியிட்டுள்ளன.

அரசியல் பிரச்சனை சிக்கலானது.

அத்துடன் இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நீண்ட காலம் தேவைப்படுமென்பதையும் அவை உணர்ந்துள்ளன.

இந்நிலையில் தீர்வைத் தேடிச் செல்லும் நாட்கள் நீண்டுகொண்டு செல்கையில் மறுபுறத்தே மனித அவலங்களும் தொடர்ந்து கொண்டிருப்பதை அனுமதிக்கலாகாது.

கொழும்பில் கூடிய எட்டுத் தமிழ் அரசியல் கட்சிகள் கூட வடக்கு-கிழக்கில் எவ்விதத்திலும் மனிதாபிமானப் பிரச்சனைகள் பூதகரமாக மாற்றமடையலாகாது என்பதனையும் சுட்டிக் காட்டியுள்ளன.

எனவே நோர்வே தற்போதைய சூழ்நிலையில் சமரச முயற்சிகளில் ஈடுபட வந்துள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கதாகவே இருக்கின்றது.

பிராந்தியரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் தனது பங்களிப்புக்கு ஆதரவைத்தேடிய நிலையில் இலங்கையின் பிரதான அரசியல்கட்சிகள், மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சம்மதத்துடனேயே நோர்வே தனது சமரச முயற்சியை ஆரம்பித்திருக்கின்றது.

நோர்வேயின் இம் மீள் பிரவேசம் இலங்கையின் பேரினவாதிகளுக்கு ஒரு பலத்த அடியாகவும் இருக்கின்றதென்றே கருதமுடியும்.

ஏனெனில் நோர்வேக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடாத்தியதன் மூலமும், அந்நாட்டின் கொடியை எரித்ததன் மூலமும் தமது கரங்கள் ஓங்கியுள்ளன என்று அப்பேரினவாதிகள் கருதியிருக்கலாம்.

ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாகவே பிராந்திய, மற்றும் சர்வதேச ரீதியான ஒத்துழைப்போடு இலங்கைப் பிரச்சனையை அணுக நோர்வே முன்வந்துள்ளது.

இதன்மூலம் அந்நாடு நேர்மையான, அதேசமயம் தனது அப்பழுக்கற்ற அணுகுமுறையையே இலங்கை விடயத்தில் வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சனை குறித்த அரசியல் பொறுத்தவரை ஏராளமான விடயங்கள் கவனத்திலெடுக்கப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டியவையாக உள்ளன.

பிரச்சனைக்குரிய விடயங்களில் உடன்பாடுகளை எட்டுவதற்கு நிறையவே பொறுமையும், காலஅவகாசமும் தேவைப்படுகின்றன.

இந்நிலையில் இலங்கையைப் பொறுத்தவரை யுத்தநிறுத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டு வடக்கு-கிழக்கில் இருப்போரின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படவேண்டியதே உடனடித் தேவையாக இருக்கின்றது.

அதேசமயம் தற்போதுள்ள நெருக்கடியான சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு அனைத்து அரசியல் சக்திகள், பொது அமைப்புகள் என்பவை மிகுந்த நிதானத்தையும், பொறுமையையும் ஒற்றுமையையும் சமரச நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் வெளிப்படுத்த வேண்டியது அவசியமானதாகின்றது.


இதுவிடயத்தில் கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் நல்லதோர் முன்மாதிரியை வெளிப்படுத்தியுள்ளன. சுமார் எட்டுத் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து யுத்த நிறுத்தம் ஏற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதுடன், சமரச முயற்சிகளுக்கும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

நோர்வே, இந்தியா ஆகிய நாடுகளை அரசியல் தீர்வு முயற்சிகளில் முழுஅளவில் குதிக்குமாறும் தமிழ் அரசியல் கட்சிகள் கோரியுள்ளன.

இதையொத்த நிலைப்பாடே நாட்டின் ஏனைய அரசியல் சக்திகளிடையேயும், அமைப்புக்களிடையேயும் தோன்றவேண்டியது அவசியமானதாகின்றது.

இதன் மூலமே அரசியல் தீர்வு நடவடிக்கைகளை பலப்படுத்தவும், துரிதப்படுத்தவும் முடியும்.

## அதிரடி அய்யாத்துரை



**கொழும்பு கனத்தை** பொதுமயானத்தில் இந்துக் களைத் தகனஞ் செய்யும் பிரிவில் புதிய மண்டபம் கட்டப்படுகிறது திராவிடசிற்பக்கலையம்சத்தோடு இந்த மண்டபம் உரு வாகிறது வாசல் கிழக்கில் பிறந்தாலென்ன அண்மைக்காலங்களில் கொழும்பிலிருந்தே அநேகர் வைகுண்டம் போகவேண்டியிருக்குது. இதனால இந்துக்களுக கென்றே கோயில் மண்டபம் போல பிரத்தியேகக் கட்டடம் கனத்தையில் போடப்படுகிறது.

**பிரதம தளபதி தலுவத்த** இந்தியா போயிருந்தார். இலங்கை அரச பல்வேறுநாடுகளிடமும் உதவி கேட்டிருக்குது. ஆனால் தளபதி தலுவத்த உண்மையை உணர்ந்துள்ளார். இலங்கைப் பிரச்சனையை கடவுளால்தான் தீர்க்கமுடியுமென்றும் நம்பியிருக்கிறார். இதனால் அவர் ஆன்மீக உதவி கேட்டு புட்டபர்த்திக்கு சாயிபாபாவிடம் போயிருக்கிறார்.

**இந்திய விமானப்படைத் தளபதி** இலங்கை வந்திருந்தார். கட்டுநாயக்கா விமானப்படைத்தளத்துக்கும் அவர் போயிருந்தார். அங்கே நின்ற ஒரு படை வீரரின் துப்பாக்கிபற்றிக் கேட்டுள்ளார். அதுவோர் இஸ்ரேலியத் தயாரிப்பு எனக் கூறி அத்துப்பாக்கி இந்திய தளபதி டிப்னிஸிடம் கொடுக்கப்பட்டது. அதைவாங்கி குறிபார்த்துச் சுடும் இடத்தை நோக்கி அவர் சுட்டார். வேட்டுக்கள் குறிதவறாது இலக்கை அடைந்தன. நம்ம நாட்டுவீரர்கள் வியப்புத் தாங்காது நின்றிருக்கினம்.

**வெசாக் பண்டிகை** நடந்திருந்தது. விதம் விதமான வடிவங்களில் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. யுத்த டாங்கி, ஆட்டிலறித் துப்பாக்கி போன்ற வடிவங்களிலும் அலங்காரங்கள் இருந்தன. காருண்ய புத்தரின் நினைவுக்கு அஞ்சலியாக அவை வைக்கப்பட்டிருந்தன.

**வெசாக் தண்ணீர்ப்பந்தல்களுக்கு** விடு, விடாகத் தலைநகரில் காசுசேர்த்துத் திரிந்தவை. இதில் 'குடுக்காரர்'தான் மும்முரம். பண்டிகையைப் பாவித்து தமது தேவைக்காக அவையளும் தண்ணீர்ப்பந்தல் என்று காசு சேர்த்திருக்கினம். சில பந்தல்களுக்குப் பின்புறமாக குடுக்காரர் கொண்டாட்டமாக இருந்திருக்கினம்.

**என்னதான் உயிர்போகிறமாதிரி** இறுக்கிப் பிடிச்சாலும் எங்கடை ஆட்களுக்குச்சூடு சொரணை இல்லை. வவுனியாவில் இப்பொழுது பாஸ் பெறுவதற்கு 'பிணை ஒப்பம்' வைப்போர் பாடு படு ஜோர். ஒரு ஆளுக்கு வவுனியாவை விட்டு வெளியே போவதற்கு சைன் பண்ண வவுனியாவிலிருந்து பதினைஞ்சு ஆயிரம் வரை அதிகரிச்சுப் போட்டினமாம். காசு இல்லாவிட்டாலும் வவுனியாவில் 'பாஸ்' இல்லாமல் நடமாடமுடியாது.

# இருவாரத் தொடர்

# இர்விங் வாலஸின் சகலமும் நானே!

தமிழில்: நரேந்திரன்

தந்தையின் சடலத்தை ஒரு குரோதத்துடன் பார்க்கிறார் எட்வர்ட் ஆர்ம்ஸ்டட்.

'ஐம்பத்தியாறு வயதான என்னை, வளர விடாமல் செய்த பாவி! தன் நிழலிலேயே என்னை ஒடுக்கி, எனக்கென்று ஒரு பெயரோ முகமோ இல்லாமல் செய்து என்னைத் தலைதூக்க விடாமல் செய்த சர்வாதிகாரி, ஒழிந்தான். இனி நான்தான் அவனது கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு ஒரே வாரிசு. குறிப்பாக 'நியூயார்க் ரிகார்ட்' என்னும் செய்திப்பத்திரிகை என் வசம். சர்வ அதிகாரமும் சக்தியும் இனி, என் கையில்! ஒழிந்தான் கிராதகன்: தடை அகன்றது!....'

மனத்தின் மகிழ்ச்சி, வெளியே தெரியாமல், துக்கித்தவர் மாதிரி நிற்கிறார் ஆர்ம்ஸ்டட், அருகே சக்கர நாற்காலியில், நோயாளி மனைவி ஹன்னா, நோயால் மெலிந்து தளர்ந்து போனவள்; பார்த்தாலே அலுப்படையச் செய்கிறவள்!....

தந்தையின் காதலி, கிம் நெஸ்பெட் வந்திருக்கிறாளா என்று பார்க்கிறார். யார் யாரோ வந்து வந்து போகிறார்கள். கிம் நெஸ்பெட் வரவில்லை. அவளால் வர முடியாது-என்பது தெரிகிறது. அவள் சட்ட பூர்வமான மனைவியா என்ன? வெறும் ஆசை நாயகிதானே!

தந்தையின் உடல் சவப் பெட்டியி



னுள் வைக்கப்பட்டு பூமியினுள் புதைக்கப்படுவதை ஒரு குரூர திருப்தியுடன் பார்க்கிறார், எட்வர்ட் ஆர்ம்ஸ்டட்.

"நீங்கள் கூறுவதெல்லாம் உண்மையா?"

-நம்ப முடியாத அதிர்ச்சியுடன் கேட்கிறார் ஆர்ம்ஸ்டட்.

"நான் கூறுவதெல்லாம் உண்மை. உண்மையன்றி வேறில்லை...!" என்கிறார் குடும்ப வக்கீல் லிடிங்க்டன். "உங்கள் தந்தையின் உயில்படி அநேகமாக எல்லாச் சொத்துக்களும் உங்கள் வசம்தான். நீங்கள் பெரிதும் விரும்பும் பத்திரிகையின் 'நியூயார்க் ரிகார்ட்' - உரிமை ஓராண்டுக்கு உங்களிடம் இருக்கும். அந்த ஓர் ஆண்டுக்குள் அதன் விற்பனையை ஒரு முறையாவது நியூயார்க் டைம்ஸ் விற்பனையை விட விஞ்ச வைக்க வேண்டும். அப்படிக் காட்டாவிட்டால், ஓராண்டு கழித்து, பத்திரிகை உங்கள் கையைவிட்டுப் போய்விடும்...."

அப்பாவின் மீது ஆத்திரம் பொங்குகிறது. 'செத்தும் கெடுத்த பாவி, தாசி மகன்' என்றெல்லாம் திட்டி நொறுக்குகிறார். நியூயார்க் டைம்ஸின் விற்பனையை விஞ்சுவதாவது? 1954ம் ஆண்டிலிருந்து அந்தப் பத்திரிகை முதலிடம் வகிக்கிறது. இவ்வளவு ஆண்டுகள் நிர்வகித்த இவரால், முடியவில்லை. ஓராண்டுக்குள் நான் விஞ்ச வைக்க வேண்டுமாம்... துரோகி! வஞ்சகன்...!

"அந்தப் பத்திரிகை என் வாழ்வின் ஏக்கம், வெறி. அதனை நடத்தி மகிழ வேண்டும் என்று கனாக் கண்டேன். என் கனவை அழித்தான், பாவி.... என் தந்தையா அவன்? என் விரோதி...."

எட்வர்ட் ஆர்ம்ஸ்டட்டின் தந்தை விரும்பியவை, இரண்டு விஷயங்கள்! ஒன்று, நியூயார்க் ரிக்கார்ட், இரண்டாவது ஆசை நாயகி, கிம்நெஸ்பெட் என்னும் பேரழகி.

பாட்டுப் பாடி நடனமாடி, ஆண்களைக் கொள்ளை கொண்டவள். அவர் தந்தையை விட, மூன்று மடங்கு, வயதில் சிறியவள். அந்தக் காலத்திலேயே எட்வர்டின் மனத்தைக் கிறங்கச் செய்தவள். அவள் சிநேகிதத்தை இவர் பெறும் முன்னரே, தனது செல்வத்தாலும், செல்வாக்காலும் அவளை ஆட்கொண்டார், அவரது தந்தை. வீடு, கார், பணம் என்று அவளைப் போஷித்தார்.

தந்தை போய்விட்டார். இனி கிம்நெஸ்பெட், என்ன செய்வாள்? அவள் அழகு வசீகரிக்க, அவள் வீட்டுக்குப் போகிறார், எட்வர்ட் ஆர்ம்ஸ்டட். தன்னந்தனியாய், விஸ்கி, பிராந்தியுடன் இளமைப்பூரிப்புடன் மகோன்னதத்தில் அவளைப் பார்த்ததும், பழைய காதலுணர்ச்சி பொங்குகிறது. தனியாளாய் இருந்த அவளுக்கும் ஆண் துணை தேவைப்படுகிறது. இருவரும் இணைகிறார்கள். அவளது அழகும், அவள் தரும் சுகமும் அவரை, இன்பலாகிரியில் ஆழ்த்துகின்றன.

தந்தையின் காதலியை அடைந்த இறுமாப்பு, தந்தையையே வென்ற போதையை அளிக்கிறது.

'இனி, பத்திரிகையை அடைந்து வெற்றியை நிரூபிக்க வேண்டும். பத்திரிகையை நம்முடையதாக்கிக் கொள்ள வேண்டும். எப்பாடுபட்டாவது, விற்பனையை உயர்த்த வேண்டும்' என்ற வெறி எழுகிறது.

தனது பத்திரிகை, நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையை விட, மூன்று லட்சம் பிரதிகள் குறைவாக விற்பதை உணர்கிறார், ஆர்ம்ஸ்டட். விற்பனையை அதிகரிக்கும் பரபரப்புச் செய்திகளைத் தேடத் தொடங்குகிறார்கள். அதற்காகப் புது செய்தியாளர்களை வேலைக்கு நியமிக்கிறார். அப்படி நியமிக்கப்பட்டவள்தான், குமாரி விக்டோரியா வெஸ்டன் என்னும் இளம் பெண், அழகி. ஜர்னலிஸம் படித்துப் பரிசுகள் வாங்கியவள். அவளது தந்தை, இவரது சிநேகிதர். வெள்ளை மாளிகையில் பதவி வகிப்பவர்.

உற்சாகமாய் வேலையில் சேருகிறாள், விக்டோரியா. 'எதையாவது சாதிக்க வேண்டும்' என்கிற துடிப்புப் பொங்குகிறது. அங்கே, ஏற்கனவே செய்திப்பிரிவில் பணியாற்றும், நிக்ராம்ஸே என்னும் புத்திசாலி இளம் பத்திரிகையாளனுடன், இணைந்து பணியாற்றப் பணிக்கப்படுகிறாள் விக்டோரியா.

தனது பத்திரிகைக்குச் செய்திகளும் தகவல்களும் அளிக்கப் பலரை நியமிக்கிறார் ஆர்ம்ஸ்டட். அவர்கள் ஊழிய ப்ட்டியலில் இடம் பெற மாட்டார்கள். மாதா மாதம் சம்பளம் பெறுவார்கள். செய்திகளை, இரகசியச் செய்திகளை அளிப்பார்கள். அவர்களில் ஒருவன் தான், கஸ்பனாகோ, கொலைக்குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் இருந்தவன். சாட்சிகள் சரிவரக் கிடைக்காததால் விடுதலையானவன். பயங்கரவாதத்தில் கைதேர்ந்தவன்.

அவன் மூலம் ஒரு செய்தி கிடைக்கிறது விக்டோரியாவுக்கு. மறுநாள் தூக்கிலிடப்படும் கைதியைப் பற்றி, விபரங்கள் கூறிய கஸ்பனாகோ ஒரு இரகசியத்தை யாரும் அறியாத இரகசியத்தை அவளிடம் கூறுகிறான். அந்தக் கைதி இருக்கும் அறையில் தான், அவனும் இருந்தானாம். அவனுக்கு முன் இருந்தவர்கள், அந்த அறையிலிருந்து ஒரு சுரங்கப்பாதையைத் தோண்டினார்களாம். இறுதிப் பகுதியைத் தோண்டி முடித்தது, கஸ்பனாகோதானாம். அவனைத்தவிர, வேறு யாருக்கும் தெரியாதாம்.

இந்த விபரத்தை, ஆர்ம்ஸ்டட்டிடம் கூறுகிறாள் விக்டோரியா. அந்தக் கைதியைப் பேட்டி கண்டு, மரணமடையும் முன், ஒரு கைதியின் மன நிலையை அளந்து வருமாறு அவளை அனுப்பிய ஆர்ம்ஸ்டட்டின் மூளை, துரிதமாக வேலை செய்கிறது. அந்தக் கைதியின் வக்கீலை, இரகசியமாகப் பார்க்கிறார். சுரங்கப்பாதை பற்றிக் கூறுகிறார்.

அந்தக் கைதியைப் பேட்டி கண்டு, அவன் மனநிலை பற்றிப் பல விபரங்களைப் பெற்று, ஒரு கட்டுரை தயாரிக்கிறாள் விக்டோரியா. தனது முதல் கட்டுரையை அளிக்க, அலுவலகம் போகிறாள். போகிற பாதையிலேயே 'நியூயார்க் ரிகார்ட்' பரபரப்பாய் விற்கப்படு வதைப் பார்க்கிறாள். மற்றப் பத்திரிகையில் வராத செய்தி அப்பத்திரிகையில் வந்திருக்கிறது.

'மறுநாள் தூக்கிலிடப்பட வேண்டிய கைதி சிறையிலிருந்து தப்பி ஓட்டம்' என்ற செய்திதான் அது.

'சுரங்கப்பாதை இரகசியம் தனக்கும் ஆர்ம்ஸ்டட்டுக்கும்தானே தெரியும்? அந்தக் கைதிக்கு எப்படித் தெரிய வந்தது? கஸ்பனாகோ கூட யாரிடமும் கூறவில்லை என்றானே?'

வியப்படைகிறாள், விக்டோரியா. தன் முதல் கட்டுரை வெளிவராததில் ஏமாற்றம் அவளுக்கு. கைதி தப்பிச் சென்றது சுவாரசியமா?

ஒரே நாளில் 'நியூயார்க் ரிகார்டி'ன் விற்பனை அனைத்துப் பத்திரிகைகளையும், குறிப்பாக 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையை, விஞ்சி விடுகிறது. அமெரிக்கப் பத்திரிகை உலகமே பிரமிக்கிறது. மகிழ்ந்து போகிறார் எட்வர்ட் ஆர்ம்ஸ்டட். பத்திரிகை அவருடைய சொந்தமாகிவிடுகிறது. யாரும் வெளியிடாத செய்திகளை, தாம் வெளியிட்டால் விற்பனை அதிகரிக்கிறது என்கிற உண்மையைப் புரிந்து கொள்கிறார்.

'மற்றவர்கள் செய்திகளை வெளியிடுவார்கள்; தான் செய்திகளை உருவாக்குகிறவன்' என்கிற பெருமிதம் எழுகிறது.

மேலும் மேலும், செய்திகளை உருவாக்க முயல்கிறார்.

சிறையிலிருந்து கைதியைத் தப்புவிக்கச் செய்த தனது முயற்சியைச் செய்தியாக்கி, மற்றவர்களுக்குத் தெரியும் முன் பத்திரிகையில் வெளியிட்டு, செய்தி உலகையே ஒரு கலக்குக் கலக்கிய பெருமிதம் முகத்தில் தெரிய, அடுத்த திட்டம் தயாரிக்கிறார் ஆர்ம்ஸ்டட் உதவி கஸ்பனானோ.

கஸ்பனாகோவின் துணையுடன், ஒரு பயங்கரவாதக் கும்பலின் உதவியை நாடுகிறார். அவர்கள் மூலம் பயங்கரங்களை நடத்துவது, உடனேயே தனது பத்திரிகையில் வெளியிடுவது. மற்ற பத்திரிகைகளுக்குச் செய்தி, நிகழ்ந்த பின்தான் தெரியும்; வெளியிட முடியும். ஆனால், இவர் செய்திகளை நிகழ்த்துபவரல்லவா? இவருடைய பத்திரிகையில்தானே, முதலில் வெளிவரும்? பரபரப்பாய் பேசப்படும் அல்லவா? அதன் மூலம் விற்பனை எண்ணிக்கை உயரும். செல் வாக்கும், வலிமையும் அதிகமாகும். பத்திரிகை உலகை ஆட்டிப் படைக்கலாம். தான் சர்வ வல்லமை படைத்தவராக விளங்க முடியும் என்கிற வெறி, அவரை ஆக்கிரமிக்கிறது.

கஸ்பனாகோவின் உதவியுடன் பயங்கரவாதிகளைத் தொடர்பு கொள்கிறார். முதல் திட்டம் உருவாகிறது. ஸ்பெயின் நாட்டு மன்னரைக் கடத்துவது. கடத்திய வினாடிகளுக்குள்ளேயே பத்திரிகையில் வெளியிடுவது. திட்டம் உருவாயிற்று.

ஸ்பெயின் நாட்டு மன்னரின் பயணத் திட்டமும், அந்த ஊரின் வரைபடம் முதலியனவும் வேண்டுமே? விக்டோரியாவையும், நிக்ராம்ஸேவையும் அங்கே அனுப்புகிறார்.

''ஸ்பெயின் மன்னரின் விஜயத்தை, நீங்கள் நம் பத்திரிகையில் எழுத வேண்டும். விபரங்களைச் சேகரித்துக் கட்டுரையாக்கி எனக்கு அனுப்புங்கள்" என்று கூறி அவர்களை அனுப்புகிறார். (அடுத்தவாரமும் தொடரும்)

## "அம்மாடி வேண்டாம் அமெரிக்க வாழ்க்கை"



இந்திப்பட உலக ராணித்தேனீ மாதுரி டிக்ஸித் கல்யாணம் கட்டிக் கொண்டு அமெரிக்கா சென்றார். இப்போது என்னடா வென்றால் அமெரிக்கா வாழ்க்கை வேண்டாம் என்று மறுபடி இந்தியாவிலேயே குடியேறிவிட்டார்.

அமெரிக்கா என்றால் தமிழ் நடிகைகளுக்கு (அம்பிகா, நதியா) மட்டுமல்ல இந்தி நடிகைகளுக்குக் கூட பிடிக்கவில்லைபோல் தெரிகிறது.

அமெரிக்காவிலிருந்து வந்தவுடன் 'இமாமி' என்ற அழகுசாதனப் பொருட்களுக்கு மொடலாகப் போஸ் கொடுத்துள்ளார் மாதுரி. விரையில் இவர் பளீர் சிரிப்புடன் ரீ.வியில் தோன்றவுள்ளார்.

கல்யாணமாகி விட்டதால் ஒப்புக்கொண்ட படங்களில் நடித்துவிட்டு, நடிப்புக்கு முழுக்குப் போடுவார் என்று எதிர்பார்த்த நிலையில், சின்னத் தயாரிப்பாளர்களுக்கு இவரது வரவு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளதாம்.

இப்போதே இவரைத் தமது படங்களில் நடிக்க வைப்பதற்காக மாதுரியின் பின்னால் அலைகிறார்கள் அந்தத்தயாரிப்பாளர்கள்.

## சிக்கலில் மாட்டிய புத்தகம்

பெண்களின் நிர்வாணப்படங்களைப் போட்டுக் பணம் பண்ணும் 'பிளேபோய்' புத்தகம் ஒரு சிக்கலில் மாட்டியிருக்கிறது.

ஏன் புதிதாக ஏதாவது நிர்வாணப்படம் போட்டதால் சிக்கலா? என்று நினைப்பீர்கள் சிக்கலுக்குக் காரணம் அதுவல்ல.

'பிளேபோய்' புத்தகம் புதிதாகத் தனது பதிப்பை ருமேனியா நாட்டில் ஆரம்பித்தது. அப்பதிப்பில் "காயம் வெளியில் தெரியாமல் மனைவியை அடிப்பது எப்படி?" என்று ஒரு கட்டுரை எழுதப்போய் மாட்டிக் கொண்டுள்ளது.

ஏற்கனவே ருமேனிய நாட்டு ஆண்கள், பெண்களைக் கொடுமைப்படுத்துவதில் மோசம். இப்படி ஒரு கட்டுரை வந்தால் விடுவார்களா?

உடனே அந்த நாட்டுப் பெண்கள் இதற்கு எதிராகப் போராட்டம் நடத்த, அடுத்த இதழிலேயே மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாம் 'பிளேபோய்' புத்தகம்.

அத்துடன் பெண்களின் சிறப்பைப் பற்றியும் பெண்களை ஆண்கள் எப்படி நன்றாக வைத்திருக்க வேண்டும் என்றும் எழுதப் போகிறதாம்.

## உரிமை கோரும் வாரிசு

"மறைந்த ஹொலிவூட் கவர்ச்சித் தாரகை மாலின் மன்றோவிற்கும் மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப் கெனடிக்கும் பிறந்த மகன் நான் தான்" என்று சொல்லிக் கொண்டு மர்லின் மன்றோவின் சொத்துக்களுக்கு உரிமை கேட்டுக் கிளம்பியிருக்கிறார் ஜோசப் எஃப் கெனடி என்பவர்.

ஒரு மோசமான கார் விபத்தில் சிக்கி கொண்டதால் தனக்குப் பழைய நினைவுகள் ஒன்றும் சரியாக ஞாபகத்தில் இல்லை, என்று சொல்லியுள்ளார் அவர்.

மர்லின் மன்றோ நினைவாக அவரது தலைமுடியை வாங்கி வைத்திருந்த ஒரு இரசிகரிடமிருந்து அந்த முடியைப் பெற்றிருக்கும் ஜோசப், அதை டீ.என்.ஏ. பரிசோதனைக்கு அனுப்பப் போவதாகச் சொல்லியுள்ளார்.



மர்லின் மன்றோ இருக்கும் போதும் பரபரப்பு. இறந்த போதும் பரபரப்புத் தான்.

## நெஞ்சத்தைக் கிள்ளியவர்

உலகின் எங்கேயாவது ஓர் அதிசயம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. மனதைக் கிள்ளும் இந்த அதிசயத்தைப் படித்துப் பாருங்கள்.

இலண்டனில் ஏஞ்சலா மூன் என்ற 31 வயது பெண்மணி நிறைமாதக் கர்ப்பிணி. குழந்தை பிறப்பதற்கு 2 வாரம் இருந்தது. இந்த நிலையில் அவரது கணவர் கெவின் புற்றுநோயால் மரணப்படுக்கையில் இருந்தார்.

அவர் இன்னும் ஒரு வாரத்தில் இறந்து விடுவார் என்று மருந்துவர்கள் கூறி விட்டார்கள். அந்தப் பெண்மணி பிறக்கும் குழந்தையைத் தன் கணவர் பார்க்க வேண்டும் என்ற காரணத்திற்காக மருத்துவர்ரிடம் தன் விருப்பத்தைச் சொல்லி இரண்டு வாரம் இருக்கும் போதே, வயிற்றில் உள்ள குழந்தையை அறுவைச்சிகிச்சை மூலம் எடுத்துக் குழந்தையைக் கணவரின் கையில் கொடுத்து சந்தோஷமடைந்தார். கணவரும் குழந்தையைப் பார்த்துப் பெரும் பூரிப்படைந்தார்.

"நான், கணவர், குழந்தை மூவரும் கட்டிப்பிடித்து மகிழ்ந்த ஒரு நிகழ்ச்சி என் வாழ்நாள் முழுவதும் நினைவை விட்டுப் பிரியாது. அதை நினைத்து நினைத்தே வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து விடுவேன்!" என்று கூறியுள்ளார் அந்தப் பெண்.

## வாஜ்பாயால் பிரபலமான பாடகி



மும்பையைச் சேர்ந்த பிரபல பாடகி பத்மஜா ஜக்லேக்கர். இவர் கடந்த 20 ஆண்டுகளாகப் பாடி வருகின்றார். என்றாலும் இவர் உலகப் புகழ் பெறுவதற்குக் காரணம் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தான்.

என்ன வியப்பாக இருக்கிறதா?

இவர் பிரதமர் வாஜ்பாயின் கவிதைகளை பாடலாக மாற்றிப் பாடி' ஆல்பம் தயாரித்துள்ளார்.

இவரது விடாமுயற்சிதான் வாஜ்பாயி கவிதைகளை ஆல்பமாகத் தயாரிக்க முடிந்தது. சில வருடங்களுக்கு முன் வாஜ்பாயிடம் அவரது கவிதைகளை ஆல்பமாகத் தயாரிக்க அனுமதி கேட்டார். ஆனால் வாஜ்பாயி, "அவை எல்லாம் சாதாரண வரிகள் கொண்டவை. ஏதோ என் திருப்திக்காக எழுதியவை!" என்று கூறி மறுத்துவிட்டார்.

ஆனால் பத்மஜா தன் முயற்சியை விடவில்லை. மீண்டும் மீண்டும் கேட்டார் பத்மஜா.

"சரி இவ்வளவு சிரமப்படுகிறீர்கள். செய்யுங்கள்!" என்று அனுமதி அளித்துவிட்டார் வாஜ்பாய்.


இப்போது வாஜ்பாயின் கவிதை வரிகள் கொண்ட ஆல்பம் விற்பனையில் சக்கை போடுபோடுகிறது. இதனால் பிரபலமான பத்மஜா இன்னொரு ஆல்பத்தை தயாரிக்கப் போகிறார்.

அது யாருடைய கவிதைகளைக் கொண்டு தெரியுமா?

இந்திய முன்னாள் பிரதமர் வி.பி.சிங் கவிதைகளைத்தான் ஆல்பமாகத் தயாரிக்கப் போகிறார்.

வி.பி.சிங் தனது கவிதைகளை ஆல்பத்தில் சேர்த்துக்கொள்ள பத்மஜாவுக்கு அனுமதி அளித்துவிட்டாரா என்று தெரியவில்லை.

## சின்னஞ் சிறிய பைபிள்



↑ பூதக் கண்ணாடியின் உதவியால் மட்டுமே பார்க்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சின்னஞ் சிறிய பைபிள் 20ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சேர்ந்ததாகும்.

இலண்டனில் உள்ள ரெனி வின்டர்ஸ்டெய்ன் கலெக்ஷன் சென்டர், உலகில் உள்ள மிகச்சிறிய அபூர்வமான புத்தகங்களைச் சேகரித்து வைத்திருக்கிறது. அங்குள்ள சிறிய புத்தகங்களிலே இந்த பைபிள் தான் சின்னஞ்சிறியதாம்.


இந்த பைபிளை ஏலத்தில் விட்டால் 3 இலட்சத்து 28 ஆயிரம் டொலர்களுக்கு (சுமார் 2 கோடியே 42 இலட்சத்து 72 ஆயிரம் ரூபா) விலை போகுமென்று அந் நிறுவனம் எதிர்பார்க்கிறது.

## பிரிக்கப்பட்ட இரட்டையர்கள்

↓ கடந்த 3 மாதத்திற்கு முன் இப்படி ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தையை அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்துள்ளார்கள்.

அன்ட்றியா, லூஸியா என்ற பெயர் கொண்ட இந்த இரட்டைக் குழந்தைகள் பிறந்தது சுலோவாக்கியா நாட்டில். ஜரோஸ்லவ் சிமான் என்ற மருத்துவர் தலைமையில் 9 பேர் கொண்ட மருத்துவர்கள் குழு இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்தது.

11 மணி நேர அறுவைச் சிகிச்சைக்குப் பின் வெற்றிகரமாக இந்த இரட்டையர்கள் பிரிக்கப்பட்டனர். 50 ஆயிரம் பிரசவங்களில் ஒரு பிரசவம் இப்படி ஏறுக்குமாறாக அமைந்து விடுவதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.



## குண்டழகி

→ உலகில் அழகிப் போட்டிகளுக்குக் குறைவே இல்லை. உடை அழகிப் போட்டி, புகைப்பட அழகிப் போட்டி, மொடல் அழகிப் போட்டி என்று பல்வேறு அழகிப் போட்டிகள்.

அண்மையில் தாய்லாந்து நாட்டின் பாங்கொக் நகரில் குண்டழகிப் போட்டி நடைபெற்றது. இதில் 28 வயதான சுபாவதே சிறந்த குண்டழகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.



## மரம் 1 கூடுகள் 45



↑ ஆயுள்வேத மருத்துவத்தில் மிகவும் இன்றியமையாததொன்று தேன். அது மட்டுமல்லாமல் தேனில் பல மருத்துவகுணங்கள் உள்ளன.

தேனீக்கள் கூடு கட்டி கொஞ்சம் கொஞ்சமாகத் தேனைச் சேகரிக்கின்றன. தேனீக்கள் ஆளரவம் குறைந்த இடங்களிலும், தேனைச் சேகரிக்க இலகுவான இடங்களிலும் கூடுகளை அமைக்கின்றன.

மரமொன்றில் ஆகக் கூடுதலாக இரண்டு மூன்று தேன் கூடுகள் தான் காணப்படும். ஆனால் படத்தில் இருக்கும் மரத்தில் 45 தேன்கூடுகள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அருகில் உள்ள நாயக்கான் கோட்டை கிராமத்தில் உள்ள அரசமரமொன்றில் இக்கூடுகள் கட்டப்பட்டுள்ளன.





## வியக்க வைத்த ரொபோ


← ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் கிழக்குப் பகுதி நகரமான மாக்குஹாரியில் அண்மையில் 'மாக்வேர்ல்ட் எக்ஸ்போ' என்ற ரொபோ கண்காட்சி நடைபெற்றது.

இக் கண்காட்சியில் 4 கால்கள், ஒரு வால் கொண்ட இந்த 'அனிமல் ரொபோ' பார்வையாளர்களைப் பெரிதும் வியப்புறச் செய்து விட்டது. இதன் முழுமையான தொழில்நுட்பங்களையும், செயற்பாடுகளையும் கண்டறிய இந்த ரொபோவைத் திறந்த மேனியாக்கி விளக்குகிறார் ஒரு பெண்.

## வறட்சியின் கோரப்பிடி

↑ படத்தைப் பார்த்தால் சோமாலியா போன்ற வறிய நாடொன்றில் எடுக்கப்பட்ட புகைப்படம் என்று எண்ணத் தோன்றும். எமது அண்டை நாடான இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் எடுக்கப்பட்ட படம் தான் இது.

வறட்சியின் கோரப்பிடியால் ராஜஸ்தான் கொடூரமாகச் சிக்கியுள்ளது. இறந்த கால் நடைகளின் எலும்புக் குவியலைத் தாண்டிச் செல்கிறது ஒரு நாய்.



# சினிவிசிட்

## முரளி—நெப்போலியன் இணைந்து நடிக்கும் 'மனுநீதி'

ஸ்ரீ ஆர்.கோல்ட் ஃபிலிம்ஸ் என்ற புதிய பட நிறுவனம் பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் மனுநீதி.

இப்படத்தில் முரளி கதாநாயகனாக நடிக்கிறார். இதுவரை ஏற்றிராத வித்தியாசமான வேடத்தில் நெப்போலியன் நடிக்கிறார். கதாநாயகியாக புதுமுகம் ஒருவர் நடிக்கிறார்.

மற்றும் ராசி, வடிவேலு, ஆகாஷ், நம்பிராஜன், பானுப்பிரியா, கோவைசரளா ஆகியோருடன் இன்னும் பலரும் நடிக்கிறார்கள்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இப்படத்தை இயக்குகிறார் ஜேதம்பி இராஜாமா என்னும் புதியவர். இவர் மணிவாசகம், பி.வாசு போன்றவர்களிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர்.

தேவா இசையமைப்பில் உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் முழுக்க முழுக்க தமிழ் நாட்டிலேயே படமாக உள்ளது.

## தமிழுக்கு

## அழகிக்கு அடி

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய் தான் நடித்த 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படம் வெற்றிகரமாக ஓடுவதை சந்தோஷமாக அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்.

காரணம் இவர் இந்திப் படம் ஒன்றில் பாடல் காட்சி ஒன்றில் நடித்துக் கொண்டிருந்த போது கீழே விழுந்து காலில் அடிபட்டுக் கொண்டதால் ஓய்வில் இருக்கிறார்.



## டி.வீக்குப் போன நடிகை

பி.வாசு இயக்கத்தில் பிரபு நாயகனாக நடித்த 'கட்டுமரக்காரன்' படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் சுர்னா. படத்தில் இவர் பெயர் அஞ்சலி.

'கட்டுமரக்காரன்' படுதோல்வியைத் தழுவியதால் அதன் பின் இவருக்கு வாய்ப்புக்கள் வரவில்லை. இப்போது இவர் சின்னத்திரை நடிகையாகவும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் ஆகிவிட்டார்.

மும்பை சின்னத்திரையில் இவர் தொகுத்து வழங்கும் 'ஹங்காமா அன்ட் லிமிட்டெட்' என்ற நிகழ்ச்சி அங்கு படு பிரபலம்.

அப்பாஸ்-ஐஸ்வர்யா ராய்

படம் : கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

முகப்பில்



கார்த்திக்-கௌசல்யா
படம்: சந்தித்த வேளை



## அதிஷ்டக்கார இயக்குநர்

அஜித்குமாரை வைத்துப் படங்களை இயக்கும் இயக்குநர்கள் உண்மையிலேயே அதிஷ்டக்காரர்கள்தான்.

மோதிரம், சங்கிலி, டி.வி.டெக்மோட்டார் சைக்கிள், கார் எனத் தன்னை இயக்கிய இயக்குநர்களுக்குப் பரிசளித்துள்ளார் அஜித்.

இப்போது இவை எல்லாவற்றிற்கும் ஒரு படி மேலேயே போய் விட்டார் அஜித். தன்னை வைத்து 'உன்னைக் கொடு என்னைத் தருவேன்' படத்தை இயக்கி வரும் கவி காளிதாஸ் என்ற புதிய இயக்குநருக்கு ஒரு வீடு வாங்கிக் கொடுக்கவுள்ளார்.

'உன்னைக் கொடு என்னைத் தருவேன்' படம் சிறப்பாக வந்திருப்பதால் தான் இந்தப் பரிசாம். உண்மையில் அதிஷ்டக்கார இயக்குநர்தான்.

## பாலாஜியின் 'அழகு'

இயக்குநர் ஷங்கரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய பாலாஜி என்பவர் தனியாக வந்து படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்திற்கு 'அழகு' என்று பெயரிட்டுள்ளார்.

மணிரத்னத்துடன் இணைந்து 'திருடா திருடா', 'பம்பாய்'போன்ற படங்களைத் தயாரித்த ஸ்ரீராம் (ஒளிப்பதிவாளர் ஸ்ரீராம் அல்ல) இப்படத்தைத் தயாரிக்கப் போகிறார். இதில் நாயகனாக 'சேது' விக்ரம் நடிக்கவுள்ளார்.

## கரண் நடிக்கும் 'ராஜராஜேஸ்வரி'

சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரித்த 'கண்ணாத்தாள்' என்ற பக்திப் படத்தை இயக்கிய பாரதிமோகன் மீண்டும் அதே நிறுவனத்திற்காக இயக்கும் பக்திப் படம் தான் 'ராஜராஜேஸ்வரி'.

இப்படத்திலும் நாயகனாக நடிக்கிறார் கரண். இதில் இவருக்கு ஜோடியாக ரோஜா, சங்கவி நடிக்கிறார்கள்.

கே.ஆர்.விஜயா 'நிழல்கள்' ரவி முக்கிய வேடங்களில் நடிக்கும் இப்படத்தில் விவேக், அலெக்ஸ், வையாபுரி, மயில்சாமி, சாப்ளின் பாலு, அல்வா வாசு, தாமு, மதன் பாப், மற்றும் பலர் நடிக்கின்றனர்.

எம்புகழேந்தி வசனம் எழுத, கதை, திரைக்கதை, அமைத்துப் படத்தை இயக்குகிறார் பாரதி மோகன்.

நவீன கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் யுக்திகளைப் பயன்படுத்தி இப்படத்தை உருவாக்கவுள்ளார்கள்.


## ...ம் 'தம்முடு'

...முன்னணி நாயகனான ... நடித்த 'தம்முடு' என்ற ... ருடியுள்ளது. ...'தம்முடு'வை தமிழில் ... இன்னமும் ...

## தமிழுக்கு குட்பை

விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியின் இரண்டாவது வாரிசு ப்ரீதா தெலுங்கில் அறிமுகமாகி அதன் பின் தமிழுக்கு வந்தார். ஆனால் இவர் தமிழில் நடித்த படங்கள் ஒன்று கூட ஓடவில்லை. வசூலில் சாதனைபடைத்த 'படையப்பா'வில் இவர் நடித்திருந்தாலும் நாயகி இவரல்ல. சமீபத்தில் வெளியான 'காக்கைச் சிறகினிலே' படமும் ப்ரீதாவுக்குக் கைகொடுக்கவில்லை. தமிழில் தொடர்ந்து வாய்ப்புகள் வராததால் தமிழுக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டு தெலுங்கில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டார் ப்ரீதா.





ரோஜா
படம்: ...

## திரையுலக மறுபக்கம் (149) பூ நடிகையை வளைய வரும் நடன நடிகர்

தமிழ்நாட்டிலிருந்து மயன்

இரண்டெழுத்துப் பூ நடிகை இரண்டு சொந்தப்படங்களை எடுத்துக் கையைச் சுட்டுக் கொண்டவர். இதனால் பலரிடம் கடன் வாங்கி, கடனை அடைக்க முடியாமல் நீதிமன்றம் சென்று வருகிறார்.

பட்ட கடனை அடைக்க எந்த வேடத்திலும் எப்படியும் நடிக்கத் தயார் என்ற ரீதியில் இருந்தார் நடிகை. நடிகை தாராளமாக நடந்து கொள்வதை அவரது காதலரான இயக்குநர் கண்டும் காணாததுபோல் இருந்து வருகிறார்.

கார் நடிகருடன் நெருக்கமாக இருந்து அவர் மூலம் படவாய்ப்புகளைப் பெற்று வந்தார் நடிகை.

இந்நேரத்தில் நடனத்தில் புயலைக் கிளப்பும் நடிகருடன் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது நடிகைக்கு. கூட நடிக்கும்போது நடிகைக்குத் தன் ஆசையை தெரியப்படுத்தினார் நடிகர்.

மறுத்தால் இவருக்கு சரியாக டான்ஸ் ஆடத் தெரியவில்லை என்றும் தயாரிப்பாளர், இயக்குநரிடம் கூறி படத்தில் இருந்தே நடிகர் தூக்கி விடுவார். எனவே நடிகை அந்த நடிகரிடம் உங்களுக்குத் திருமணமாகி குழந்தையும் இருக்கிறதே என்று கூறி மெதுவாக நழுவினார்.


ஏற்கனவே மனைவியுடன் மனக்கசப்புடன் வாழ்க்கை நடத்தி வந்த நடிகர் மனைவி இருந்தாலென்ன இல்லாவிட்டால் என்ன என்ற நிலையில் மனைவியைப் பிரிந்தார். அதற்காக காதல் மனைவிக்கு ஒரு பெரிய தொகையையும் கொடுத்துவிட்டார்.

நடிகரின் வற்புறுத்தலில் இருந்து தப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நடிகை சொன்ன சொல்லை வேதவாக்காக எடுத்துக் கொண்டு நடிகர் இப்படிச் செய்வார் என நடிகை சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

அத்துடன் தனது சிபாரிசால் நடிகைக்குத் தனது படங்களில் கதாநாயகி வாய்ப்புக்களும் வாங்கிக் கொடுத்தார்.

நடிகரின் இந்த நடவடிக்கைகள் நடிகைக்குப் பயத்தைக் கொடுத்தன. அவரிடம் இருந்து தப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சற்றுத் தூரத்தில் இருந்த தனது காதலருடன் பழையபடி நெருக்கமாக இருப்பது போல் காட்டிக்கொண்டார்.

இருந்தாலும் நடிகர் அந்த நடிகையிடம் தனது ஆசையை வெளியிட்டபடி வளைய வந்து கொண்டுதான் இருக்கிறார்.





ரம்யா கிருஷ்ணன்
படம்: கதாநாயகி

## ...தோடு சொல்லுகிறோம்

...கதாநாயகியாக அறிமுகமான அந்தப்படம் பாதியிலேயே நின்று விட்டதால் கவர்ச்சி ... 'அல்' நடிகை பாடல் ... தோன்றி கவர்ச்சி நடனமாடும் ...ராம். விஷயம் விடிந்ததும் ... நடிகையின் அப்பா கொதித்துப் ...

... படங்களில் நடித்து வரும் ... நடிகர் நடிக்க பிரமாண்டமான ... பின் பல படங்கள் வந்து ... எதிர்பார்த்தாராம். அதன் பின் ... வந்தது. அதுவும் படு ... விட்டது. இப்போது ஏழு ... கொண்ட ஒரு படத்தில் ... நடித்து வருகிறார்.

கலைச் சேவை செய்யும் நட்சத்திர குடும்பத்தின் வீட்டுக்கு நடுச்சாம வேளையில் சென்றுவிட்டு மின் நடிகையும் அவரது தாய்க்குலமும் நிறை போதையோடு வீடு திரும்பியிருக்கிறார்கள். போதையின் காரை ஓட்டிய தாய்க்குலம் பாதையோரக் கடையொன்றுடன் மோதி விட, சிலர் காரை மடக்கினார்களாம். நல்லவேளையாக அருகில் இருந்தவர்கள் அங்கிருந்தவர்களைச் சமாதானப்படுத்தி இவர்களை அனுப்பி வைத்தார்களாம்.

துணிச்சலான தடை என்று பொருள்படும் படத்தில் நடித்த நகைச்சுவை மணி நடிகர் தனக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்திற்காக படத்தை வெளியிட முடியாதபடி தடை போட்டார். இனிமேல் அந்த நடிகரை படங்களில் நடிக்க வைக்கவேண்டாம் என்று தனக்கு வேண்டிய இயக்குநர்களிடம் கூறி வருகிறாராம் அப்படத்தின் முன்றெழுத்து பெயர்கொண்ட இயக்குநர்.

மறைந்த இளவரசியின் பெயரைக் கொண்ட அந்த நடிகை நடித்து ஒரு படம் கூட உருப்படியாக வெளியாகவில்லை. அதற்குள் பல இலட்ச ரூபா செலவில் பங்களா கட்டியிருக்கிறார். எப்படி என்று கேட்டால் எல்லாம் தொழில் இரகசியம் என்கிறார்கள்.

## மினி சினி

★ மம்முட்டிக்கு ஜோடியாக 'டெய்லி தாப்பா' என்ற மலையாளப் படத்தில் நடித்த சிம்ரன் மறுபடியும் ஒரு மலையாளப்படத்தில் நடிக்கவுள்ளார். இதில் ஜெயராம் கதாநாயகனாக நடிக்கிறார்.

★ அருண்குமார் கதாநாயகனாக நடித்த 'கங்கா கௌரி' படத்தில் நடித்த பட்டிமன்றப் பேச்சாளர் திண்டுக்கல் லியோனி இப்போது தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

★ பிரசாந்த் ஜோடியாக 'என்ன விலை அழகே' படத்தில் நடித்து வரும் அமிஷா பட்டேல் தெலுங்குப் படம் ஒன்றிலும் நாயகியாக நடிக்கிறார். அதில் அவருக்கு ஜோடி பவன் கல்யாண்.

★ விஜய்யின் சித்தி மகன் விக்ராந்த் கதாநாயகனாக அறிமுகமாகவுள்ளார். இப்படத்தை 'என்றும் அன்புடன்' படத்தை இயக்கிய பாக்யநாதன் இயக்கவுள்ளார்.

★ 'அலைபாயுதே' மாதவன் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் ஒன்றில் அவருக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் உலக அழகி யுக்தா முகி.

★ ஆர். சுந்தர்ராஜனிடம் உதவி இயக்குனராகப் பணியாற்றிய ராம் என்ற புதியவர் 'நிஜமாகவே நேசிக்கிறேன்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இதில் கதாநாயகனாக ஆகாஷ் நடிக்கிறார்.

★ ஏ.எம்.ரத்னம் தயாரித்த 'குஷி' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடியிருக்கும் ஷில்பா ஷெட்டிக்கு அதில் நடனமாடுவதற்காக 25 இலட்ச இந்திய ரூபாய் கொடுக்கப்பட்டது.

## பேருந்துப் பயணம்

பேருந்தின்
படிக்கட்டில்
கால் பதிக்கையில்
நரகத்தின்
வாயிலில்
கால் வைப்பதைப்
போன்றதொரு
உணர்வு!
***
இருக்கையில்
அமர்ந்தாலும்
இருதலைக்
கொள்ளியின்
தவிப்பு!
***
நின்று தான்
பயணமென்றால்
நிலை கொள்ளாத
அவஸ்தை!
***
அடையாளவட்டை
பரிசோதிப்பு
அத்துடன்
அக்கு வேறு
ஆணி வேறாய்
அடிக்கடி
அலசல்!
***
சோதனைச் சாவடியில்
இறங்கி ஏறுகையில்
தலைவிதியை
நொந்தபடி
கொளுத்தும்
வெயிலில்
பயணம்.!
***
பெண்கள்–நாம்
தங்கங்களாவென
உரசிப் பார்க்கும்
கயவர்களின்
கூட்டம்!
***
இடை நடுவே
என்ன நடக்கும்
ஏது நிகழுமென்று
இனம்புரியாத
திகில்!
***
செல்லுமிடம்
சேருகையில்
என்ன
'வாழ்க்கையிது
ஏனிந்த பிறப்பு'
என்று திருமிந்த
அவலமென்ற
நிலை தோன்றும்!

எஸ்.தேவகி-வவுனியா.

## விட்டில் பூச்சி

நானும் ஒரு விட்டில் பூச்சிதான்
உன் கண்களை நம்பி வந்து
காதலில் வீழ்ந்து அமிழ்ந்துபோன
நானும் ஒரு விட்டில் பூச்சிதான்!
••
தீ கூட
விட்டில் பூச்சியை தன்னுள்ளே
சங்கமமாக்கிக் கொள்ளும்....
ஏன் பெண்ணே.....?
இந்த மனிதப் பூச்சியை
தவிர்த்துவிட்டாய்.....?
நீயே எரித்துவிடு
உனக்குள்ளே.....
••
உன்பார்வைகள்
விளைவித்த காதல் விதை என்னுள்
விருட்சமாய்....
அதுவே எனக்கு
போதி மரமென்றிருந்தேன்
நாளை அதுவே எனக்கு
சிலுவையாகப் போகின்றது....
••
நான் அழிந்தாலும்
உன் கல் மனத்திலிருந்து
கற்களைப் பெயர்த்து அனுப்பு
என் கல்லறைக்கு
அதிலே தீ மூட்டி
வளரும் என் காதலை
அங்கே
விட்டில் பூச்சியாக்கிக்
கொள்கிறேன்....!

பி.சி.அன்ரன், மட்டுநகர்.

## விரைவில் அமைதி

இரவு வேளைகளில்......
இங்கே வெளிச்சம்....
இருக்கின்றதென்றால்....
சூரியனால் தான்
என்று சொல்!
***
போதி மரத்தின் கீழ்
போய் அமர்ந்தேன்...;
எனக்கு ஞானம்....
கிடைத்தது....
என்று சொல்...!
***
தெருவில் ஒருத்தன்
காதால் பேசுகிறான்....
கண்களால் கேட்கிறான்....
வாயால் பார்க்கின்றான்.....
என்று சொல்!
***
பூமியைப் பிளந்து...
இன்று தான்...
பிறந்து வந்தேன்;
என சொல்கிறாயோ...!
அதுவும் உண்மைதான்...!

கானகத்தில்
கழுதைக்கு இருகால்....
குதிரைக்கு கொம்பு....
குரங்குக்கு குழந்தை....
என்பாயோ....
அதுவும் சரிதான்....
***
விரைவில்
அமைதி வரும்;
வார்த்தைகளை
ஏணடா.... வீணடிக்கிறாய்....
நானுமில்லாத.....
நீயுமில்லாத....
ஒரு அமைதிவரும்....
***
அப்போ...
நானொரு....
மையவாடியிலும்....
நீ யொரு....
மயானத்திலும்....
தூங்கிக்கிட்டிருப்போம்.....

என்.சஹாப்தீன், ஒட்டமாவடி.





## வாதங்கள்

அப்பாவோ பாரிச வாதம்.
அம்மாவோ பக்கவாதம்.
ஆண்மக்களோ வாக்குவாதம்.
பெண்பிள்ளையோ பிடிவாதம்
பேசப்படுவதோ ஜாதிவாதம்.
இனங்களுக்குள் பேரினவாதம்.
நாடாளுமன்றத்தில் பிரதிவாதம்.
நாட்டினிலோ பயங்கரவாதம்.

'பாலமுனை வாஹிட்'

## தேன் கிண்ணம்

## ஏன் வந்தாய்

கறள் பட்ட நெஞ்சை
துடைக்க வந்தவனா....?
துன்பத்துக்குள் அழைத்துச்
செல்ல வந்தவனா....?
கண்களிலிருந்து வடியும்
கண்ணீரை நிறுத்த வந்தவனா...?
சோகத்தை சொந்தமாக
தந்துவிட வந்தவனா...?
என் வாழ்வில் வசந்தம்
தூவ வந்தவனா....?
இல்லையெனக்கு – விஷம்
பருக்க வந்தவனா...?
ஈரமில்லா இரும்பிதயம் கொண்டவனே...!
உண்மையைச் சொல்லி விடு!
நீ எதற்காய் வந்தாய்...?

கிஷ்ஜனா நந்தக்குமார்- ஆரையம்பதி 02.

## மலையக இரத்தம்

குருதியும் வியர்வையும்
பேதம் மறந்து
இணைந்தொழுகுவதால்
உழைப்பில் களைப்பென்பது
எமக்கில்லை!
***
தேயிலைத் தூளிட்ட
செந்தண்ணீர் பானம்
சுவை தருவது
எங்கள்
செங்குருதி துணிக்கைகளே...!
***
நெஞ்சினில் உயர்வுக்கு
உரமிட்டு
வளர்த்தெடுத்ததெல்லாம்
ஏமாற்றங்களே.....

செழித்தோரெல்லாம்
முதலாளிகளே...!
***
கூனல் குன்றில்
மட்டுமல்ல;
குடிகளிலும் கூட...!
***
ஆண்டு இரண்டாயிரம்
கரைந்தாலும்
இன்னுமெங்கள்
தோட்டம் மட்டும்
இருளுக்குள்....!
***
சுவையுங்கள்
தேநீர் பானம்
இதுவெங்கள்
இரத்ததானம்!

ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்.

# நெற்றி ஜோதிடம்

நெற்றியைப் பார்த்து ஒருவர் எப்படிப்பட்டவர் என்று கண்டுபிடிக்க முடியுமாம். (எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியாது) நெற்றியை நான்கு விதமாகப் பிரிக்கலாம். அகல நெற்றி, குறுகலான நெற்றி, சாதாரண நெற்றி, முட்டை மாதிரியான நெற்றி.



**அகல நெற்றி:**

இவர்கள் எதை ஆரம்பித்தாலும் ஒரு நிச்சயமுடிவுடன் ஆரம்பிப்பார்கள். தங்களுக்கு வாழ்க்கையில் எந்தவிதமான கஷ்டங்கள் வந்தாலும் தைரியமாக அதை எதிர்ப்பார்கள். அவர்களிடம் தன்னம்பிக்கை மிகவும் அதிகம். எது ஆனாலும் சமாளித்து விடுவார்கள். கற்பனை வளம் மிகவும் அதிகம். இவர்கள் தங்களது கற்பனை சக்தியிலேயே முழு நம்பிக்கை வைத்திருப்பர். தன்னுடன் பேசிக் கொண்டிருப்பவர்களின் எண்ணத்தை அறிய ஆவலாக உள்ளவர். தாராள மனப்பான்மை உள்ளவர். இதனால், அலட்சியமாக இருந்து சில சமயம் வாழ்க்கையில் நிறைய பிரச்சனைகளை சந்திக்க நேரிடும்.



**குறுகிய நெற்றி:**

இவர்களுக்கு தன்னம்பிக்கை மிகக் குறைவு. குறுகிய மனப்பான்மையும், குறைவாகப் பேசுபவராகவும் இருப்பார். தைரியமில்லாதவர். ரொம்பவும் பயப்படுபவர். எந்த ஒரு வேலையும் முடிவதற்கு முன்பே நிராசையாகி ரொம்ப பின் வாங்கும் யோசனையிலிருப்பார். வாழ்க்கையில் ஏதோ சுமாராகத்தான் ஜெயமடைவார். மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன எண்ணுவார்களோ, என்று சதா யோசிப்பார். எதுவும் தானே முடிவு செய்யமாட்டார். எப்பொழுதும் துக்கமாகவும், தன்னைப் பற்றியே சிந்தித்துக் கொண்டும் இருப்பார். யாராவது ஒருவர் அவருக்கு நல்ல நம்பிக்கையை ஊட்டி, தைரியமளித்து ஊக்கமளித்தால் முன்னுக்கு வர வாய்ப்புண்டாம்.



**சாதாரண நெற்றி:**

சாதாரண நெற்றி உள்ளவர்கள் நல்ல இலட்சியவாதிகளாக இருப்பார்கள். இவர்கள் கூர்மையான புத்தி உள்ளவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு வேலையையும் பார்த்துப் பார்த்து பண்ணுவதில் சமர்த்தர்.



**முட்டை வடிவமுள்ள நெற்றி:**

இவரும் அநேகமாக குறுகிய மனம் படைத்தவராகத் தான் இருப்பார். மற்றப்படி சாதுர்யமாகவும், சமயத்திற்கேற்றவாறு சாமர்த்தியமாகவும் இருப்பார்.



**நெற்றியில் நடுவில் பள்ளம் இருந்தால்:**

இவர்கள் சுயநலக்காரர்களாகவும், தந்திரமானவர்களாகவும், ஏமாற்றுபவர்களாகவும் இருப்பார்கள். தங்களது பிரச்சனைகளை தங்களுக்குள்ளேயே ரகசியமாக வைத்திருப்பதில் சமர்த்தர். இந்த மாதிரி நெற்றி உள்ளவர்கள் தனக்குக் காரியமாக எப்படி வேண்டுமானாலும்,யாரை வேண்டுமானாலும், சினேகிதம் செய்து கொண்டு காரியம் ஆனவுடன் அவர்களைத் தூக்கி வீசி விடுவார்கள்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். துவான் நஜீம்.
வயது: 17
முகவரி: இல. 12, கணேஷ் லேன், திருகோணமலை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: ஏ. மேரி,
வயது: 19
முகவரி: 53, ஈ.எஸ். பெர்னாந்து மாவத்தை, கொழும்பு-06.
பொழுது போக்கு: வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

28.05.2000 முதல் 03.06.2000வரை

ஜோதிடர் 'கார்னர்'



**மேடம் :**
கிரகச்சேர்க்கை பயன். தொழில் நிலை மாற்றம். காரிய மந்த கதி. தாய் தந்தையாருடன் ஒற்றுமைச் செயற்பாடு. வார இறுதியில் பயண வெற்றியும் கல்வியால் ஒரு சில நன்மையும் கிடைக்கும். பூச நட்சத்திரர் உதவ முன்வருவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 28,30.



**இடபம் :**
உறவினருடன் கலகம். உடல் நிலை மாற்றம் தடையும் தாமதமும் கொடுக்கும். இறைவழிபாடும் பணச் செலவும். வாகனத்தால் நன்மைகள் ஏற்படும். தொழில்நிலை சற்று சிக்கலாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 30, 02.



**மிதுனம் :**
தொழில் பல விருத்தி. தூர தேசக்காரரால் நன்மைகள். விருந்து வைபவங்களுக்கு சென்று வருதல். துக்க நிவர்த்தி. கிடைக்க வேண்டிய பண, பொருள் அமைப்புக்கள் வந்து சேரும். திருவாதிரைக்காரர் நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் : 28, 01.



**கடகம் :**
அலைச்சல் மனதிற்கு கஷ்டமான விடயங்கள் வந்து போகுதல். எடுத்த முயற்சிகள் சிரமத்துடன் தாமதமடைதல். இரும்பு சம்பந்தப்பட்ட தொழில் செய்வோருக்கு ஏதேனும் இலாபம் கிடைத்தல், பெண்களுக்கு சுமாரானநேரம்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 29, 03.



**சிம்மம் :**
தொழில் நிலை சிறப்பைக் கொடுக்கும். தடுமாறிய விடயங்கள் யாவும் சீர்நிலை பெறும். திருமணவாய்ப்புக்கள், காதல் விவகாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் தீரக்கூடிய பலன் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்:வெள்ளை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 01, 03.



**கன்னி :**
மனதில் தடுமாற்ற நிலை நீங்கும். உத்தேசித்த பிரயாணம் வெற்றி பெறும். உடல்வள நோய்துன்பம் நிவர்த்தி பெறும். பெரியோர்களின் ஆசிர்வாதமும் தொழில் நிலையுடன் கல்விப்பலன் சீராக செல்லும். அத்தபெண்களுக்கு, கஷ்டநிலை நீங்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 30, 03.



**துலாம் :**
பெண்களுக்கு ஏற்றமானவாரமாகும். பண, ஆடை, ஆபரணச்சேர்க்கை வந்து சேரும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். அதிஷ்ட வாய்ப்புக்கள் சுவாதிப்பெண்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது. கல்வி தொழில் சீரான நிலை தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : றோஸ் வர்ணம்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 01, 28.



**விருட்சகம் :**
தடைகளாக உள்ள நிலைமாறி, எடுத்த விடயங்கள் யாவும் வெற்றியாக அமையும். பணப்பிரச்சனை கொடுக்கல் வாங்கல் நிலை மாற்றத்தை கொடுக்கும். ஊக்கமான செயற்பாடுகள் தொடங்கும். கல்வியால் பல நன்மை உண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன் வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ் வர்ணம்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 31, 03.



**தனுசு :**
கல்விநிலை நன்றாக அமையும். தொழில் அதிஷ்ட சம்பந்தப்பட்ட வாய்ப்புகள் கூடும் நிலை உள்ளது. ஆலயதரிசனமும் விவசாயத்துறை சம்பந்தப்பட்டோருக்கு கடன் உதவிகள் கிடைக்கும். குடும்பப் பெண்களுக்கு சிறப்பான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் : 29, 02.



**மகரம் :**
பணக் கொடுக்கல்வாங்கல் சிக்கல் நிலை நிவர்த்தி பெறும். எடுத்த முயற்சி, பயணத்தொடர்பு நிலை என்பன நன்றாகத் தொடரும். சுபகரும நிகழ்வுகள் கொடுக்கும் அவிட்டக்காரர் நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம்:வெள்ளை;எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 31, 02.



**கும்பம் :**
தொழில் நிலைச்சிக்கல்கள், குடும்பத்தில் பிரச்சனைகள் வந்து போதல். தடுமாற்ற நிலை சீர் பெறுதல். கைவிட்டுப்போன காரிய நஷ்டம் வெளிப் பிரயாணங்கள், உறவினர் சம்பந்தப்பட்ட விடயங்கள் தீரல். சதயக்காரர் ஓரளவு நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : சனி, வியாழன்.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 31, 01.



**மீனம் :**
புதிய உறவுநிலை. தளப்பமான நிலைமாறுதல் போன விடயங்கள் நன்றாக சீர் பெறுவதால் குடும்பத்தில் கஷ்டமான பண பொருளாதார நிலை மாறி உயர்வு பெறும். தூர இடத்துச் செய்திகள் வந்து சேரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : செம்மஞ்சள்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 28, 03.

# நில்– கவனி – முன்னேறு

★ பொய்யானவைகளை உண்மை என்று மயங்கும் சகஜ நிலையிலிருந்து விழிப்புணர்ந்து உண்மையை புரிந்து கொள்ளும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.

★ பிரமாண்டங்களில் மனதை இழக்காமல் யதார்த்தத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

★ சந்தர்ப்ப சூழ்நிலைகளை சரியாக எடைபோட்டு செயல்படும் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.

★ கனவுகளை வளர்த்துக் கொள்ளுங்கள் வளர்ச்சிக்கு உதவிகரமானது. ஆனால் கற்பனைகளிலேயே வாழ்க்கையின் பெரும் பான்மையை கழித்துவிடும் தவறுக்கு அடிமையாய் இராதீர்கள்.

★ உண்மையை உணர்ந்து செயல்படுபவர்கள்தான் விரும்பியதை விரும்பியவண்ணம் விரும்பிய பொழுது அடைகிறார்கள்.

★ நீங்களாகவே எந்தவொரு மாயைக்குள்ளும் உங்களை அடைத்துக் கொள்ளாதிருங்கள். உள்ளுக்குள் உங்களை நீங்களே கேள்வி கேட்டுக்கொண்டு விடை காண முயலுங்கள்.

★ உங்களை கேலி செய்பவர்கள், பழிப்பவர்கள் மீது கோபம் கொள்வதைத் தவிர்த்து கேலிக்கான காரணத்தை சரியாக கண்டுணர்ந்து திருத்திக் கொள்ளுங்கள்.

★ மாற்றங்களில் நம்பிக்கை கொண்டு செயல்படுங்கள். அதே நேரத்தில் மாற்றத்திற்குத் தேவையான கால அவகாசத்தில் அவசரப்படாமல் பொறுமை காத்திருங்கள்.

★ எத்துணை பெரிய காரியமாயினும் துவக்கம் எளிமையாய்த்தான் இருக்கும். உங்கள் கண்களில் படும் மிகப் பெரிய விருட்சம் ஒன்றின் துவக்கம் கூட மிகச் சிறியதான ஓரிலையுடனான தளிரிலிருந்துதான் என்பதிலே உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம்.

★ தெளிவாய் புரிந்து கொள்வதன் அடிப்படையில் தொடங்கும் நட்புத்தான் நீடித்து நன்மை பயக்கும்; இல்லையேல் சங்கடமும், மனவருத்தமும்தான் மிஞ்சும்.

★ ஒரு நாணயத்தின் இரண்டு பக்கமும் போல ஒவ்வொரு செயலுக்கும் அதன் விளைவு எதிர்விளைவுகளை சரியாக கணக்கிட்டு செயல்படுங்கள்.

★ சுய நன்மையை மனதில் கொண்டு உண்மைக்கும் மாறான காரியத்தை செய்வதோ அல்லது கருத்தை சொல்வதையே முற்றிலுமாக தவிருங்கள்.


★ உங்கள் திறனை வளர்ப்பதென்பது பாறையில் வேர் பிடிப்பதுபோல கடினமானதாயிருந்தாலும் வேர் பிடித்தபின் பாறையை பிளப்பதுபோல தடை தகர்த்து உயரலாம்.



# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ்
லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்
லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சரும நோய்களைத் தவிர்க்க...



**வேர்க்குரு:**

அறுகம்புல் சாற்றைத் தடவலாம். சீரகத்தை அம்மியில் அரைத்து தேங்காய்ப் பாலில் கூட்டிச் சந்தனத்தில் கரைத்து கொப்புளத்தின் மேல் தடவலாம்.

**முகப்பரு:**

பப்பாளி இலைச் சாறு தடவக் குணமாகும்.

**முகத்தில் கரும்புள்ளிகள்:**

வெங்காயத்தை உரித்து, சிறு சிறு துண்டுகளாக்கி முகத்தில் தேய்த்தால் மறையும். அகத்திக் கீரைச் சாறு தடவினாலும் குணமாகும்.

**கால் ஆணி:**

மருதோன்றி இலைச்சாற்றில் சூடம் கலந்து தடவ குணமாகும்.

பொதுவாக சரும நோயுள்ளவர்கள் உணவில் நன்னாரி நீர், ஆவாரம்பூ நீர் மிளகு, பசலைக்கீரை, சுண்டைக்காய் கூட்டு போன்றவற்றைச் சேர்த்துக் கொண்டால் நல்லது.

## திருமணமானால் உடல் நலத்தை மறந்து விட வேண்டுமா?



திருமணமாகிவிட்டால் பெரும்பாலான பெண்கள் தங்கள் உடல்நிலையைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. இஷ்டத்திற்குச் சாப்பிட்டுக் குண்டாகி விடுவார்கள்.

திருமணத்திற்கு முன் கொடி இடையுடன் பார்த்த பெண் இவள்தானா என்று நினைத்து, பல கணவர்கள் இதைப்பற்றி வெளியே சொல்ல முடியாமல் நொந்து கொள்கின்றனர்.

இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டால், அவ்வளவுதான் மாலை வேளைகளில் முகம் கழுவிப் பொட்டுவைக்கக் கூட நேரம் இருப்பதில்லை.

கணவர்களும் தங்கள் இஷ்டத்திற்குச் சாப்பிட்டுக் கொண்டு கதிரையில் உட்கார்ந்தபடி ரீ.வி. பார்த்தபடி சொகுசுவாசிகளாகி விடுகின்றனர். அதனால் அவர்களது தொப்பை பெருத்து நடக்கவே சிரமப்படும் அளவிற்கு வந்து விடுகிறது.

மனங்கள் ஒத்துப் போனால் போதும், உடல் அமைப்போ, அழகோ ஒரு பொருட்டே அல்ல என்று கூறப்பட்டாலும் தம்பதிகளுக்குள் உடல் கவர்ச்சி என்பதும் அவர்களைப் பிணைத்து வைத்து, மனமொத்து வாழ ஒரு சிறந்த அம்சமாக அமைகிறது என்பதை மறுக்க முடியாது.

முன்பெல்லாம் பெண்களுக்கு வீட்டு வேலைகள் அதிகம். ஆட்டுக்கல், அம்மி போன்றவற்றில் தினமும் அரைப்பது, தரையில் அமர்ந்து சாப்பிடுவது வழக்கம், அப்படிச் சாப்பிடுபவர்களுக்குக் குனிந்து, நிமிர்ந்து, பரிமாறுவது என்று பல வேலைகள். அதற்கு ஏற்ற வகையில் அவர்கள் சாப்பிடவும் செய்வார்கள். அதனால் அவர்களது உடல் நிலை இயற்கையாகவே அளவான எடையைப் பெற்று வந்தது.

மேலும் எடை கூடாமல் பார்த்துக் கொள்பவர்களுக்கு இருதய நோய், இரத்த அழுத்தம், வாயு கோளாறுகள் போன்றவை வரும் வாய்ப்பும் குறைவு.

இன்றைய சூழலில் ஆண், பெண் இருபாலாருக்கும் பெரும்பாலும் அமர்ந்த நிலையிலேயே வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

வீட்டிற்கு வந்தாலும் மிக்ஸி, கிரைண்டர், வோஷிங் மெஷின், என அனைத்து அலுவல்களுக்கும் மெஷின்கள் வந்து விட்டன. இதனால் உடலுக்குப் போதுமான உடற்பயிற்சிகள் கிடைப்பதில்லை.

உடல் நலத்தைப் பேணிக்காக்க வேண்டும் என்ற மன உறுதி வேண்டும். நேரமில்லை என்றெல்லாம் கூறாமல் சிறிதளவு நேரத்தை யாவது இதற்கென ஒதுக்குவது நல்லது.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HP

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03.06.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# வழங்குவது புவனா 39

# மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரன் மோனிக்கா விவகாரத்தை பூதகரமாக்கி உலகமனைத்தும்அறியத் தக்கதாக செய்தவள் தான் லிண்டா ட்ரிப். வெள்ளை மாளிகையிலிருந்து பெண்டகனுக்கு-மோனிக்காவைப் போல் லிண்டாவும் அனுப்பப்பட்டவள்.

பெண்டகனில் மிக அந்தரங்கமான கோப்புகள் மற்றும் இரகசிய-அரசியல் சம்பந்தமான உரையாடல்களின் பதிவுகள் ஆகியவற்றை கையாளுவதில் கைதேர்ந்தவளாக லிண்டா விளங்கினாள். தொழில்துறையில் இந்த நிலையிலிருந்த லிண்டா தன்னோடு தொடர்புடைய ஏனைய பலருடைய அந்தரங்கங்களை அலசி ஆராய்வதிலும்அதிக ஆர்வம் கொண்டவள்.

மோனிக்காவை விட லிண்டா பத்து வயது மூத்தவள். பெண்டகனில் அவளுக்கு வருடாந்தம் 80 ஆயிரம் டொலர் சம்பளம் வழங்கப்பட்டது. கணவனை விவாகரத்து செய்து விட்டு இரண்டு குழந்தைகளுடன் வாழும் அவளுக்கு இந்தச் சம்பளமே போதுமானதல்ல என்று குறைபட்டுக் கொள்ளுவாள்.

லிண்டா தனது வீட்டில் பழங்காலப் பொருட்கள் பலவற்றையும் சேர்த்து வைத்து அவ்வப்போது ஏலத்தில் விற்பதிலும் நியாயமானளவு வருமானம் பெற்றாள்.

## கிளின்ரன் மீண்டும் ஜனாதிபதியானார்



ஆரம்பத்தில் ஜோர்ஜ் புஷ் ஜனாதிபதியாக இருந்தபோது வெள்ளை மாளிகையில் பணி புரிந்த லிண்டா கிளின்ரன் நிர்வாகத்தின் போது பெண்டகனில் பணியேற்க வேண்டியதாயிற்று. கிளின்ரன் நிர்வாகத்தை அவள் பகிரங்கமாகவே மோசமாக விமர்சிப்பாள். அதே வேளையில் தன்னுடைய அலுவலகத்தில் பெரிய அளவிலான கிளின்ரனுடைய புகைப் படத்தை மாட்டி வைத்திருந்தாள். இவள் பணி புரிந்த பிரிவில் வேறு எப்பகுதியிலும் வைக்கப் பட்டிருந்த கிளின்ரனின் படத்தை விட லிண் டாவின் அறையில் வைக்கப்பட்டிருந்த படம் பெரிதாகவும் அழகாகவும் இருந்தது.

ஒரே பள்ளிக் கூடத்தில்-நியூ ஜெர்ஸியில் படித்தவர்கள் என்பதனால் ஒரே அலுவலகத்தில் வேலை செய்ய வாய்ப்புக் கிடைத்தமையினால் இருவருக்கும் நெருங்கிப் பழகும் வாய்ப்புகளும் கிட்டியது. இந்த நிலையில்தான்-எந்த உண்மைகளையும் எவரிடமும் மறைக்காமல் கூறிவிடும் திறந்த மனம் கொண்ட மோனிக்கா, தனக்கும் கிளின்ரனுக்குமிடையில் உள்ள அந்தரங்க உறவுகளைப் பற்றி கூறுவதற்கு முற்பட்டாள்.

லிண்டா ஏற்கனவே கிளின்ரனுடன் நெருங்கி உறவாடுவதற்கு திட்டமிட்டிருந்தாள். ஆனால் அது சாத்தியப்படவில்லை. ஹிலாரி கிளின்ரன் எப்படியோ இதனை அறிந்து லிண்டாவை கிளின்ரன் அணுகாமல் கத்தரித்து கொண்டாள். இதனால் லிண்டாவுக்கு எப்போதும் ஹிலாரி கிளின்ரன் மீது பொறாமை இருந்து வந்தது. மோனிக்கா லிண்டாவிடம் தனக்கும் கிளின்ரனுக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கம் பற்றி

முதன் முதலில் கூறிய அன்றைய தினமே. லிண்டா மோனிக்காவைப் பார்த்து, "உண்மையில் எனக்கு நிச்சயமாகத் தெரியும் கிளின்ரன் உன்மீது பைத்தியம் பிடித்து அலைவார்," என்று கூறினாள்.

கடந்த சில காலமாக கிளின்ரனைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த மோனிக்காவுக்கு லிண்டாவின் இந்த வார்த்தைகள் தேவாமிர்தம் போல இனித்தன.

இதன் பின்னரே லிண்டா மீது மோனிக்காவும்அதிக பற்று கொண்டவளானாள். மோனிக்காவிடம் இருந்து முழு உண்மைகளை கறந்தெடுத்துவிட வேண்டும் என்று லிண்டா மேன்மேலும் ஆசை வார்த்தைகளை மோனிக்காவிடம் கூறினாள்.

லூஸியாணி கோல்ட்பேர்க் என்பவர் நியூயோர்க் நகரைச் சேர்ந்த எழுத்தாளர். 1972ம் ஆண்டு றிச்சார்ட் நிக்ஸன் ஜனாதிபதியாக இருந்தபோது அவருடைய தேர்தல் கால பிரசாரங்களில் ஓர் அரசியல் ஒற்றராக பணி புரிந்தவர்.

### சந்திப்பு

லிண்டா ட்ரிப் வாஸிங்டனில் லூஸியாணியைச் சந்தித்தாள். ஜனாதிபதி கிளின்ரனுடைய அந்தரங்கங்கள் தன்னிடம் இருப்பதாகவும் அவற்றைத் தொகுத்து புத்தகமாக வெளியிடதிட்டமிட்டிருப்பதாகவும் அதற்கு உதவுமாறும் கேட்டுக் கொண்டாள்.

பிறிதொரு தடவை சந்தித்து, முழு விபரங்களையும் தருவதாக லூஸியாணியிடம் தெரிவித்தாள். ஆனால் பின்னர் இத்திட்டத்தை கைவிட்டுவிட்டாள். இதற்குக் காரணம் ஜனாதிபதி கிளின்ரனின் சகல விபரங்களையும் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும் என்று லிண்டா விரும்பினாள்.

அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலிலும் கிளின்ரனே ஜனாதிபதியாக வர முடியும் என்ற நம்பிக்கை பரவலாக இருந்தமையினால், அவர் மீண்டும் பதவிக்கு வந்த பிறகு மேலும் பல சுவையான சம்பவங்கள் நடைபெற வாய்ப்புண்டு.

மோனிக்காவும் மீண்டும் வெள்ளை மாளிகையில் பணியேற்கச் சென்றுவிடுவாள். அப்போது மேலும் எவ்வளவோ தகவல்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்று கருதியமையினால் அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுக்காமலிருப்பதே நல்லதென்று லிண்டா கருதினாள்.

ஆரம்பத்தில் மோனிக்கா, லிண்டாவிடம் தனது காதலனின் பெயரை வெளியிடவில்லை. இருப்பினும் விடயங்களைத் துருவித்துருவி ஆராய்ந்தறியும் அனுபவசாலியான லிண்டா, மோனிக்காவின் காதலன் கிளின்ரன் தான் என்பதை அறிந்து கொண்டாள். தனது முக்கியமான நண்பரின் 50வது பிறந்தநாள் விழாவுக்கு நியூயோர்க் செல்லவிருப்பதாக லிண்டாவிடம் மோனிக்கா ஒரு தடவை கூறியதிலிருந்தே உண்மையைக் கண்டு கொண்டாள்.

1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மோனிக்காவுக்கு மனப்போராட்டம் நிரம்பியதாக இருந்தது. தேர்தல் நெருங்க நெருங்க அவளுடைய ஆர்வமும் அதிகரித்தது. உணவு உறக்கம் எல்லாவற்றையும் மறந்தவளாக, எப்போதும் பதற்றத்துடன் காணப்பட்டாள். ஒக்டோபர் முடிந்து நவம்பரும் பிறந்தது.

### வரவேற்பு

1996 நவம்பர் 5ம் திகதி வில்லியம் ஜெ.ப் பர்சன் கிளின்ரன் மீண்டும் அமெரிக்காவின் ஜனாதிபதியானார். அடுத்தநாள் பகலில் கிளின்ரன் மீண்டும் ஜனாதிபதியாக ஆர்ப்பாட்டமான முறையில் வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்தார். பாராட்டுவோரும், பங்காளரும், வெற்றிக்காகப் பாடுபட்டோரும், வெள்ளைமாளிகை ஊழியர்களும் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரமுகர்களும் ஆயிரக் கணக்கில் சூழ்ந்து நின்று தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்து கிளின்ரன் தம்பதியினைர வர வேற்றனர்.

அந்தப் பெரும் மக்கள் வெள்ளத்தில் ஒருமூலையில் மோனிக்கா நின்றிருந்தாள். மோனிக்கா அணியும் கறுப்பு நிற உடையிலேயே அவளுடைய தோற்றம் அழகாக இருக்கிறது என்று கிளின்ரன் அடிக்கடி பாராட்டியுள்ளார். அன்றைய தினமும் அதே. கறுப்பு உடையையே மோனிக்கா அணிந்திருந்தாள்.

எப்படியாவது கிளின்ரன் அந்த மக்கள் வெள்ளத்தில் தன்னைத் தேடிக் கண்டு பிடித்துவிடுவார் என்று எண்ணியவளாக நின்றிருந்தாள். அவள் எண்ணம் வீண்போகவில்லை. ஒரேயொருதடவை அவருடைய பார்வை அவள் மீது பட்டு உடனடியாகவே விலகியது.

அதற்குமேல் அச்சந்தர்ப்பத்தில் மோனிக்காவால் வேறு அதிகமாக எதிர்பார்க்க முடியவில்லை. 'அன்றிரவே எப்படியும் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வார்' என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டு வீடு திரும்பினாள்.



### எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

இரவு உணவை விரைவாக முடித்துக் கொண்டு தனது அறைக்குள் போய்த்தஞ்சமடைந்தாள். தொலைபேசி அழைப்பு வரும் என்று காத்திருந்தாள். படுக்கையில் படுத்தால் எங்கே கண்கள் தூக்கத்தில் மூடிக் கொண்டுவிடுமோ என்பதனால் இருக்கையில் அமர்ந்த வண்ணம் தொலைபேசியையே பார்த்துக் கொண்டி ருந்தாள்.

விடிந்தும் விட்டது. ஆனால் தொலைபேசிதான் அமைதியைக் கடைப்பிடித்தது. ஏமாற்றம்தான் மிஞ்சியது. காலைக் கடன்களை முடிக்கவோ வெளியே போகவோ எண்ணம் இல்லாமல் அறையிலேயே கிடந்தாள். (வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## சிலாபம் வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

**அக்ஷயா ராமச்சந்திரன்**
108/41, 3வது, ஒழுங்கை, மெல்புர, சிலாபம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பாப்பா முரசு சிறுகதை

## என்ன வாழ்க்கை இது?

சில்லென்ற குளிர்காற்று வீசும் அடர்ந்த பசுமையான காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அதற்கு ரொம்ப நாளாகவே ஒரு கவலை மனதை அரித்துக் கொண்டிருந்தது.

என்ன கவலை தெரியுமா? அதி காலையில் சேவல் கூவுகிற சத்தத்தைக் கேட்டவுடனே நடுங்க ஆரம்பிக்கும். 'தடக்' என்று ஒரு பயம் சிங்கத்தை சூழ்ந்து கொள்ளும். சட்டென்று கண்விழித்து விடும். அதன் பிறகு சிங்கத்துக்கு தூக்கமே வராது.



'சே! என்ன வாழ்க்கை இது! காட்டுக்கே அரசன் நான். எனனுடைய பலத்துக்கு ஈடு இணை எதுவும் இல்லை. இருப்பினும், இந்த அற்ப ஜீவன் கூவும போது எனக்கு பயமாக இருக்கே. இப்படி பயந்து பயந்து எத்தனை நாட்கள் வாழ்வது? இதெல்லாம் ஒரு வாழ்க்கையா?' என்று நினைத்து கவலைப்பட்டது.

இப்படியே கவலையுடன் தன்னுடைய இராஜநடை தளர்ந்து போக, சோக சோகமாக நடந்து வந்தது.

அதன் எதிரில் யானை ஒன்று தன் முகத்தை மிகவும் சோகமாக வைத்துக் கொண்டு தன் காதுகளை முன்னும், பின்னும் அடித்துக் கொண்டே வந்தது.

அதைப் பார்த்த சிங்கம், "என்னப்பா சோகமா இருப்பது போல தெரியுது? உனக்கு என்ன கவலை?. உன்னோட உடல் பலத்தை பார்த்தாலே பிராணிகள் கிடுகிடுவென நடுங்குமே? ஏன் இப்படி முகத்தைப் பயந்தது மாதிரி வச்சிக்கிட்டு இருக்க?" என்றது.

"என்னத்த நான் சொல்றது. இவ்வளவு உடல் பலம் இருந்தும், இதோ என் காது பக்கத்துல பறக்குதே குளவி! இதைப் பார்த்து நான் எப்படி பயப்படுறேன் தெரியுமா? இது மட்டும் என் காதுக்குள்ள போய் கொட்டி விட்டால் போதும். என் உயிரே போயிடும்.


இந்த மாதிரி குட்டி குட்டி ஜந்துகள் என் காதுக்குள்ள போகாமல் இருக்கத்தான் இப்படி என் காதுகளை ஓயாமல் ஆட்டி கிட்டே இருக்கேன்.

"சில நேரங்களில் சலிப்பா தோணுது. என்ன வாழ்க்கை இது? என்ன செய்ய? நம்ப படைப்பு அப்படி!" என்று சொல்லி விட்டு பெருமூச்சு விட்டது யானை.


யோசித்து பார்த்தது சிங்கம். "இந்த உலகில் பிறந்த எல்லாருக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கத்தான் செய்கிறது. இதையே யோசித்துக் கொண்டிருந்தால், நம் மனம்தான் பாதிக்கப்படுது. நம்ப பலம் எல்லாம் போய் வாழ்க்கையே சூனிய மானது போல் தோணும்.

இனி தேவை இல்லாத இந்த கவலையை மறந்துட்டு, நல்ல விஷயங்களையே யோசிக்கப்போறேன். அப்போதான் உடம்பும், மனசும் தெம்பா இருக்கும்.

இந்தக் கவலை என்பது ஒரு எலும் புருக்கி நோய் போல. இது நம்மை கொஞ்சம் கொஞ்சமாக அரிச்சிடும்,' என்ற உண்மையை உணர்ந்து கொண்டு நிம்மதியடைந்த சிங்கம், இராஜ நடை நடந்து இரை தேடச் சென்றது.



# கண்டு பிடியுங்கள்



பூனையிடமிருந்து தப்பிச் சென்றுவிட்டது எலி. எந்த வழியால் பூனையிடமிருந்து எலி தப்பிச் சென்றது என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **03.06.2000.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 344**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 343

**பரிசுக்குரியவர்:**
முஷம்மில் முஹம்மது ஹஷாம்,
விபுலானந்தா கல்லூரி, திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சிவலிங்கம் லயனி, இறம்பைக்குளம் மகளிர் ம.வி. வவுனியா. | எம். சர்பான், ஒக்ஸ்.்.போர்ட் தேசிய பாடசாலை, பலாங்கொடை. |
| ஐ. தேவன், கமு/கோ/வி.ம.வித்தியாலயம், அக்கரைப்பற்று. | பர்வின் முபாரக், முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| ரி. செந்தூரன், சென். தோமஸ் ஆரம்ப பாடசாலை, கொழும்பு-13. | எம்.ஏ.ஏ. நில்ஷாத், மாற/ மின்ஹாத் த.வி., திக்குவெல்ல. |
| பே. தினேஸ்குமார், கோளாவில் விநாயகர் மகா வி.,அக்கரைப்பற்று. | சிவதனுஷன் சிவநாதன், ஸ்ரீ இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி, கலஹா. |
| எஸ். ஜீவானந்தன், நு/த.ம.வித்தியாலயம், தலவாக்கலை. | ஜே. பிரஷாஞ்சலி நு/சரஸ்வதி தமிழ் மகா வித்., லிந்துல. |


# அணுவின் அளவு

எல்லாவற்றிலும் மிகச் சிறியது அணுதான். ஆனால் எல்லா அணுக்களும் ஒரே அளவில் தான் இருக்குமா?

நிறையைப் பொறுத்த அளவில் அணுக்கள் வித்தியாசப்படும். உருவத்தில் பெரிய அளவு வித்தியாசம் கிடையாது.

மிகச்சிறிய நிறை குறைவான அணு ஹைட்ரஜன் அணுதான். அதில் ஒரு புரோத்திரன் மற்றும் ஒரு எலகட்ரோன் இருக்கும்.

இயற்கைகளில் கிடைக்கும் பெரிய நிறை கூடிய அணு புளுட்டோனியம் அணுதான். அதில் 94 எலக்ட்ரோன்களும் 150 நியூட்ரோன்களும் இருக்கும்.



# நாமாகூவா




படத்தில் புறா போல் இருக்கும் பறவைகளின் பெயர் நாமாகூவா. இவற்றின் மார்புப் பகுதியில் பஞ்சு போன்ற சிறகுகள் இருக்கும். இவை தண்ணீரை அப்படியே உறிஞ்சி தண்ணீரை வைத்துக் கொள்ளும் தன்மை உடையவை.

தண்ணீர் கிடைக்கும் இடங்களைத் தேடி அலைந்து தனது சிறகுகளை விட்டு உறிஞ்சி வைத்துக் கொள்ளும். அவற்றைத் தண்ணீர்த் தாகத்தால் துடித்துக் கொண்டு கூட்டில் இருக்கும் பறவைகளுக்கு ஆண் பறவைகள் குடிக்கக் கொடுக்கும்.

ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள வறட்சியான பகுதிகளிலும், நமீப் பாலை வனத்திலும் தண்ணீர் கிடைப்பது மிகமிக அரிது. நீரூற்றுக்கள் எங்காவது ஓரிடத்தில் தான் இருக்கும்.

# செய்து பாருங்கள்



## ஒட்டகச்சிவிங்கி

**தேவையானவை**

நடுத்தர அளவுள்ள உருளைக்கிழங்கு, கறுப்பு ஸ்கெட்ச் பேனா, ஒட்டுவதற்கு கம், கடினமான கடதாசி மட்டை, ஐஸ்கிறீம் குச்சி 5, கயிறு போன்ற திரித்த நூல் ஒன்று.

**செய்முறை**

கடினமான கடதாசி மட்டையில் ஒட்டகச் சிவிங்கியின் முகத்தை வரைந்து வெட்டி ஐஸ்கிறீம் குச்சி ஒன்றின் ஒரு முனையில் சிறிது கம் தடவி ஒட்டுங்கள்.

மறுமுனையை உருளைக்கிழங்கினுள் செருகவும். மீதியுள்ள 4 குச்சிகளையும் கால்களைப்போல் வைத்து விடவும். கயிறு போன்று திரித்த நூலை வால் போன்று பின்புறம் ஒட்டி விடவும்.

இப்போது உருளைக்கிழங்கின் மேல் கறுப்பு ஸ்கெட்ச் பேனாவால் படத்தில் உள்ளது போல் வரைந்தால் சிவிங்கியார் ரெடி.



# திக் திக் தொடர்

## 27

# சிகப்பு வணக்கம்

### கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"அப்படீன்னா பங்கஜ்ஜை பிருந்தாவோட தற்கொலை விவகாரத்திலிருந்து காப்பாத்தறதுக்காக, கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா, காப்டன் நரேஷ் டெல்லிக்குப் போய் ஒரு மத்திய மந்திரியைப் பார்த்ததா நீங்க சொன்னது....?"

"ஸார்...! பிருந்தா தற்கொலை பண்ணிக்கிட்ட நேரத்துல ஆச்சார்யா, நரேஷ், பங்கஜ் மூணு பேருமே டெல்லிக்குப் புறப்பட்டு போனது உண்மை. ஆனா எதுக்காக புறப்பட்டு போனாங்கன்னு நிச்சயமா எனக்குத் தெரியாது....அப்படி இருக்கலாமோன்னு ஒரு காஸிப்தான். இந்த சந்தேகத்தை நீங்க நரேஷ் கிட்டேயே கேட்டு க்ளீயர் பண்ணிக்கலாம் ஸார்...."

"உங்களை வீட்ல விட்டுட்டு இப்போ நரேஷைப் பார்க்கத்தான் கிளம்பிட்டிருக்கேன்....."

விவேக் காருக்குள் நுழைந்தான்.

சர்க்யூட் ஹவுஸ்.

சி.ஆர்.எஃப். போலீஸ், ஏ.கே.47 துப்பாக்கிகளைக் கக்கங்களில் இடுக்கிக் கொண்டு பத்தடிக்கு ஒருவராய் சர்க்யூட் ஹவுஸைச் சுற்றிலும் பரவியிருக்க, விவேக் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டுக் கொண்டே உள்ளே போனான். கமாண்டோ ஆபீஸர் ஒருவர் எதிர்ப்பட்டு சல்யூட் வைக்க, விவேக் கேட்டான்.



"பாதுகாப்பு ஏற்பாடுகளில் எந்தக் குளறுபடியும் கிடையாதே?"

"இல்லை ஸார்....! கிட்டத்தட்ட இது ஒரு எஸ்.ஜி.ப்ரொடக்ஷன் மாதிரியே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் உள்ளுக்குள் ஒரு பயம் உதைத்துக் கொண்டேயிருக்கிறது ஸார்...."

"எதற்காக பயம்....?"

"ஒரு ஐந்து நிமிஷங்களுக்கு முன்பு கூட ஒரு மிரட்டல் ஃபோன் வந்தது ஸார். கிரிக்கெட் காப்டன் நரேஷை விடிவதற்குள் எப்படியும் கொன்று விடுவார்களாம்.....!"

"ஃபோன் மிரட்டலை டேப்பில் பதிவு செய்து வைத்தீங்களா?"

"வைத்திருக்கறேன் ஸார்...."

"இந்த மிரட்டலைப் பற்றி நரேஷிடம் ஏதாவது சொன்னீங்களா...?"

"இல்லை ஸார்.... ஏற்கனவே மிரண்டு போயிருக்கிற அவரை மேலும் கலவரப் படுத்த வேண்டாம் என்று நினைத்து, அவரிடம் இதைப் பற்றி ஒன்றும் சொல்ல வில்லை...."

"டேப் ரிக்கார்டரை ஆன் செய்யுங்கள்... ஹியர் பண்ணிப் பார்ப்போம்....."

"எஸ்.... ஸார்...." கமாண்டோ ஆபீஸர், விவேக்கை பக்கத்து அறைக்குள் கூட்டிப் போய் நாற்காலியில் உட்கார வைத்து விட்டு, டேப் ரிக்கார்டரை ஆன் செய்தார்.

காஸட் சில விநாடிகளுக்கு மெளனமாய் சுழன்று, பின் ஒரு கரகரப்பான குரலை வெளியிட்டது.

"போலீஸ் பாதுகாப்பை எவ்வளவு பலப்படுத்தினாலும் சரி; நரேஷ் நாளைக்குக் காலையில் உயிரோடு இருக்கப் போவதில்லை. நரேஷின் மரணம் நிச்சயிக்கப்பட்ட ஒன்று. அவனுடைய மரணத்தைக் கடவுளாலும் கூட தடுத்து நிறுத்த முடியாது.

மாதம் பிறந்தால் சம்பளம் வாங்குவதற்காக காக்கி யூனிஃபார்மைப் போட்டுக் கொள்ளும் போலீஸால் நரேஷைக் காப்பாற்ற முடியாது. நரேஷுக்கு நாங்கள் சிகப்பு வணக்கம் வைக்கும் விநாடி வேகமாய் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது..."

டேப் சுழல்வது நின்றது. விவேக் காஸெட்டை ரீவைண்ட் செய்து, மறுபடியும் ஆன் பண்ணி குரலைக் கேட்டான். டேப் ரிக்கார்டர் பேசி முடித்ததும், மூன்றாவது தடவையும் ஆன் செய்து போட்டுக் கேட்டான். பிறகு அந்த காஸெட்டை தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு எழுந்தான்.

"இந்த காஸெட் என்கிட்டயே இருக்கட்டும். நீங்க வேற கேஸட்டை யூஸ் பண்ணி, ஃபோன்ல வர்ற மத்த கால்ஸை ரெக்கார்ட் பண்ணுங்க...."

"எஸ்..... ஸார்....!"

விவேக் அந்த அறையை விட்டு வெளிப்பட்டு நரேஷ் இருந்த அறையை நோக்கிப் போனான். அறை வாசலில் ரைஃபிள்களோடு நின்றிருந்த இரண்டு சென்ட்ரிகள் அட்டென்ஷனுக்கு வந்து தளர்ந் தார்கள்.

விவேக் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக, படுக்கையில் சாய்வாய் உட்கார்ந்தபடி புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த நரேஷ், "ஹலோ" சொல்லி ஒரு சின்னப்புன்னகையோடு எழுந்து உட்கார்ந்தான்.

"தோள்பட்டைக்காயம் இப்போ எப்படியிருக்கு மிஸ்டர் நரேஷ்....?"

"இட்ஸ்... ஓ.கே....! அது லேசா ஒரு சிராய்ப்புதான்.... வலி கொஞ்சம் இருக்கும்.... பட்டாலரபிள்....."

விவேக் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு நரேஷுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"மிஸ்டர் நரேஷ்.... உங்களுக்கு பிருந்தாங்கிற பொண்ணைத் தெரியுமா.....?"

"பிருந்தா....?"

"ம்.....! அவ ஒரு கால் கேர்ள். இப்போ உயிரோடு இல்லை. பல மாதங்களுக்கு முன்பு தற்கொலை பண்ணிகிட்டா...."

"யாருன்னு தெரியலையே...?"

"சரி...! நீங்க... மிஸ்டர் ஆச்சார்யா, மிஸ்டா பங்கஜ் மூணு பேரும் பல மாதங்களுக்கு முன்பு டெல்லி போய், எந்த மத்திய மந்திரியையாவது மீட் பண்ணினீங்களா....?"

நரேஷ் யோசித்துவிட்டுத் தலையாட்டினான்.

"எஸ்.... மீட் பண்ணினோம்...."

"எந்த மந்திரியை....?"

"விளையாட்டுத்துறை அமைச்சர் பால கங்காதரை! அவரை மீட் பண்ணும்படி அவர் சம்பந்தப்பட்ட அமைச்சகம் எங்களுக்கு லெட்டர் அனுப்பியிருந்தது. போய்ப் பார்த்து பேசிவிட்டு வந்தோம்...."

"என்ன விஷயமாய் பேசினீர்கள்.....?"

"வரப்போகிற ஆசியா கிரிக்கெட் போட்டியை கல்கத்தாவில் நடத்தலாமா.... இல்லை சென்னையில் நடத்தலாமா என்பதைப் பேசி முடிவு எடுக்கத்தான்...! இதை எதுக்காக கேட்கறீங்க...? இப்ப இருக்கிற பிரச்சனைக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்....?"

விவேக் தன் கையில் வைத்திருந்த ப்ரெளன் கவரைப் பிரித்து பங்கஜ்-பிருந்தா ஜோடியாய் இருந்த ஃபோட்டோவைக் காட்டினான்.

"பங்கஜ்க்கும் பிருந்தாவுக்கும் தொடர்பு இருந்திருக்கு.... பிருந்தா தற்கொலை பண்ணிகிட்டதால, பங்கஜை அந்த அவதூறிலிருந்து காப்பாத்தறதுக்காக நீங்களும் ஆச்சார்யாவும் பங்கஜைக் கூட்டிக்கிட்டு டெல்லி போய் மந்திரியைப் பார்த்து இன்ப்ளூயன்ஸ் பண்ணியிருக்கிறதாகத் தகவல்...."

"இட் ஈஸ் ஏ காஸிப்..... ஹைலிரிடிலெஸ், பங்கஜ் ஒரு நல்ல கிரிக்கெட் ப்ளேயர். பட், பெண்கள் விஷயத்தில் அவர் ஒரு ப்ளேபாய். அழகான பெண் ஒருத்தி ரசிகையா இருந்துட்டா, பங்கஜ் அந்தப் பெண்ணோட பெட்ரூம் வரைக்கும் கண்டிப்பா போயிடுவார்.....!

நீங்க சொல்ற பிருந்தாவும் அது மாதிரியான பெண்கள்ல ஒருத்தியா இருக்கலாம். இந்த சமயத்துல உங்களுக்கு இன்னொரு விஷயத்தையும் தெளிவு படுத்திடறேன் ஸார்... பங்கஜ்க்கு சாதாரண பெண்கள் மட்டும் இல்லை; பிரபல சினிமா நடிகைகளும் பெண் சிநேகிதிகளாக இருந்திருக்காங்க.

அந்த விஷயம் எல்லாப் பத்திரிகைகளிலும் கிசுகிசுவாக வந்திருக்கு..... பங்கஜை நான் பல தடவை காப்டன் என்கிற முறையிலேயும், நண்பன் என்கிற முறையிலேயும் பெண்கள் விஷயத்துல ஜாக்கிரதையாயிருக்கும் படி 'வார்ண்' பண்ணியிருக்கேன். பட், பங்கஜ் தன் போக்கை மாத்திக்காமே ஒரு ப்ளேயராகவே கடைசிவரை இருந்திட்டார்".

விவேக், தன் இடது கை ஆட்காட்டி விரலால் நெற்றியைத் தேய்த்துக் கொண்டு நரேஷை ஏறிட்டான்.

"மிஸ்டர் நரேஷ்...! பெண்கள் விஷயத்தில் கிரிக்கெட் போர்டு சேர்மனும் சரி; பங்கஜ் ஜும் சரி.... ரொம்பவும் மோசமானவங்களா இருந்திருக்காங்க. கொலைகளுக்கான காரணம் இந்தப் பெண்கள் விஷயம்தான்னு வெச்சுக்கிட்டாலும், உங்களை எதுக்காக எதிரிகள் கொலை செய்ய நினைக்கிறாங்க....?"

"அதுதான் எனக்கும் புரியலை ஸார்..... பெண்கள் விஷயத்துல நான் ஹண்ட்ரட் பர்ஸண்ட் ப்யூரிடன். என் மனைவியைத் தவிர நான் எந்தப் பெண்ணையும் தொட்டது கிடையாது...."

"அப்படீன்னா எதிரிகள் உங்களைக் கொலை செய்ய முயற்சி பண்றதுக்கான காரணம் என்னவாயிருக்கும்ன்னு நினைக்கறீங்க...?"

"தெரியலை ஸார்...."

"நீங்க இந்திய கிரிக்கெட் டீமுக்கு எத்தனை வருஷமா காப்டனா இருந்துட்டு வர்றீங்க?"

"நாலு வருஷ காலமா...."

"இது யாருக்காவது எரிச்சலை ஏற்படுத்தியிருக்கா?"

"எனக்குத் தெரியாது ஸார்.... நான் எல்லோரையுமே நண்பர்களாத்தான் நினைச்சுட்டு வந்திருக்கேன். எனக்கு எதிரிகள் இருப்பாங்கன்னு என்னால நினைக்க முடியலை...."

நரேஷ் சொல்லிக்கொண்டிருக்கும் போதே விவேக்கின் சட்டைப் பையில் மூக்கை நீட்டிக் கொண்டிருந்த செல்ஃபோன் சிணுங்கியது.

எடுத்து காதுக்குக் கொடுத்தான் விவேக்.

"எஸ்...."

"ஸார்..... நான் ஃபாரென்ஸிக் விக்டர்...."

"சொல்லுங்க விக்டர்...."

"ஸார்.... மிஸ்டர் நரேஷை துப்பாக்கியால் சுட நடந்த முயற்சியில், தோட்டாவோட ட்ராஜக்டரி பாத் எதுன்னு கண்டு பிடிச்சோம்.... அந்த ட்ராஜக்டரி பாத்படி, தோட்டா சிட் அவுட்ல இருந்த பில்லரில் பாய்ஞ்சிருக்கணும்..... இல்லையா ஸார்...?"

"ஆமா...."

"பட் அப்படிப் பாயலை...?"

"ஆமா...."

"ஸார்....! கண்ணாடி ஜன்னலில் தோட்டா பாய்ந்து சிதறிய சில்லுகளை கெமிக்கல் சோதனைக்கு உட்படுத்திப் பார்த்த போது ஒரு உண்மை பிடிபட்டது ஸார்...."

"என்ன உண்மை....?"

(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# தர்மயுத்தம்

## 37

## ஆம்பளை அழலாமா?

தமிழில் அதிகமாக படம் இல்லை. என்றாலும் மலையாளத்தில் சித்ரா பிஸியாக இருந்த நேரம் அது. எப்படியோ சித்ரா, 'திவ்யா' வேஷத்திற்கு தீர்மானிக்கப்பட்டார்.

முதல் நாள் படப்பிடிப்பு துவங்குவதற்கு முன்னால் நானும் எனது உதவியாளர் அபிராம மூர்த்தியும் ஓரிடத்தில் நின்றபடி அன்று எடுக்கப்படவிருந்த காட்சிகளைப் பற்றிப் பேசி கொண்டு இருந்தோம்.

அப்போது சற்று தூரத்தில் வந்து நின்ற காரிலிருந்து குட்டைப் பாவாடையுடன் ஒரு பெண் இறங்கிச் செல்வதைப் பார்த்தேன்.

நான் மூர்த்தியிடம், "யாரப்பா அந்தப் பொண்ணு?" என்று கேட்டேன். "அதுதான் சார் சித்ரா" என்றான் மூர்த்தி.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. கதையிலும், என் கற்பனையிலும் இருக்க வேண்டிய தோற்றத்திற்கு எதிர்மாறான தோற்றத்தில் காரிலிருந்து இறங்கிப் போன அந்தப் பெண்ணை எப்படி திவ்யாவாக மாற்றப் போகிறோம் என்ற கவலை வந்துவிட்டது எனக்கு.

சிறிது நேரத்தில் படப்பிடிப்பு நடந்த வீட்டிற்குள் நுழைந்த நான், "சித்ராவை கொஞ்சம் வரச் சொல்" என்றேன்.

சித்ரா என் எதிரே வந்து 'வணக்கம்' சொன்னார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

சற்று நேரத்திற்கு முன் நான் பார்த்த குட்டைப் பாவாடை சித்ராவுக்குப் பதிலாக தான் ஏற்றுக் கொண்டிருக்கிற திவ்யா வேடத்திற்கான மேக்கப்போடும் உடைகளோடும் என் எதிரே நின்றிருந்த அவரை உட்காரச் சொன்னேன்.



பிறகு பேசும்போது "உனக்கு இந்த நடிப்புத்துறையில் திறமையை வெளிப்படுத்தி நல்லதொரு நடிகை என்ற பெயர் வாங்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறதா?"

"நிறைய இருக்கிறது"

"அப்படியென்றால் நீ முழுமனதோடும், ஈடுபாட்டுடனும் இந்தத் தொலைக்காட்சித் தொடர் சிறப்பாக உருவாவதற்கு ஒத்துழைக்க வேண்டும்" என்றேன்.

"சத்தியமாக ஒத்துழைப்பேன்" என்றார்.

திறமை மிகு கலைஞர்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று... காட்சியை, கதாபாத்திரத்தை இயக்குநர் விளக்கிச் சொன்னதும் கேட்ட மாத்திரத்தில் தன்னுடைய திறமையையும் சேர்த்து அந்தக் காட்சியையும், கதாபாத்திரத்தையும் சிறக்கச் செய்வது.

இன்னொன்று.... காட்சியைப் பற்றி, கதாபாத்திரத்தைப் பற்றி இயக்குநர் சொல்லிக் கொடுக்கும்போதே அதை அப்படியே காப்பியடித்து, சொல்லிக் கொடுத்தவரையே பிரமிக்க வைக்கும் அளவில் திருப்பிச் செய்வது.

இதற்கு இயக்குநர் அமைவதும் கஷ்டம் அதற்கேற்ற நடிகர், நடிகை அமைவது அதை விடக் கஷ்டம்.

அந்த வகையில் சித்ரா இரண்டாவது வகையைச் சார்ந்தவர் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

சித்ராவுக்கென்று சுயமான கற்பனைத் திறன் கிடையாது. ஆனால் சொல்லிக் கொடுப்பவரை காப்பியடிப்பதில் சித்ராவுக்கு நிகர் சித்ராதான்.

ஒரு நாள் படப்பிடிப்பின் போது ஒரு சிறிய குளோஸப் ஷாட்டில் செய்ய வேண்டியதைச் சொல்லி "ரெடி...!" என்றேன்.

"எப்படிச் செய்ய வேண்டும்... செய்து காட்டுங்கள்" என்றார். வேறு வழியில்லாமல் செய்து காட்டினேன்.

டேக்கில் என்னுடைய சிறு அசைவைக் கூட விட்டுவிடாமல் அப்படியே செய்து காட்டினார்.

ஆனந்தமும், ஆதங்கமும் கொண்ட மனநிலையில், "நீ ஒரு பிளாட்டிங் பேப்பர். உன்னை அறையலாமான்னு தோணுது" என்று கையை ஓங்கினேன்.

பக்கத்திலிருந்த என் உதவியாளன் மூர்த்தி, "பார்த்து சார்... பிளாட்டிங் பேப்பர்ங்கறீங்க.. அறையப் போறீங்க.. ரிபீட் ஆகப் போகுது சார்..." என்றான்.

மற்றவர்களின் பார்வையில், திறமைக் கணிப்பில் அலங்காரப் பொம்மையாக, கவர்ச்சிப் பொருளாகத் தமிழ் சினிமாவில் ஊறுகாயாக வர்ணிக்கப்பட்ட சித்ராவின் திறமை, 'இவளா என் மனைவி?' தொடர் வெளிவந்ததற்குப் பிறகு பலராலும் பாராட்டப்பட்டது.

என்னைப் பொறுத்தவரையில் சித்ரா ஏற்றிருந்த திவ்யா என்ற கதாபாத்திரம் என் கண்முன்னால் நடமாட ஆரம்பித்தாள்.

அதற்குக் காரணம் சித்ராவின் வேஷப் பொருத்தமா? திறமையான நடிப்பாற்றலா? கதைச் சூழலா? கதாபாத்திரங்களின் வடிவமைப்பா? இன்றுவரை எனக்குப் பதில் தெரியவில்லை.

அந்தத் தொடர் எடிட்டிங் செய்யப்பட்டபோது 'இரும்பு இதயம் கொண்டவர்' என்று வர்ணிக்கப்பட்ட எடிட்டர் சுரேஷ் என்பவர்கூட மனம் கலங்கி 'மார்க்கிங்' செய்ய முடியாமல் திணறிப் போன நிகழ்ச்சி இன்றும் என் மனத்தில் நிழலாடுகிறது.

நான் எழுதி இயக்கிய திவ்யா, எடிட்டிங் ரூமில் மார்க்கிங் நேரத்தில் என்னையே பல நாள் அழவைத்திருக்கிறாள். இன்று வரை சென்னை தொலைக்காட்சியில் வந்த எத்தனையோ தொடர்களில் 'இவளா என் மனைவி?'யின் சரித்திரம் தனிச் சிறப்புடன் விளங்குகிறது.

இயல்பாகவே நான் உணர்ச்சிவசப் படக் கூடியவன். என் உள்ளத்து உணர்வுகளை ஒளித்துக் கொள்ளத் தெரியாதவன். படப்பிடிப்பு நாட்களிலேயே பலரும் பார்க்க நான் அழுததுண்டு.

ஒரு நண்பன் என்னிடம் கேட்டார்.

"என்ன இப்படி பலஹீனமாக இருக்கிறீர்களே... ஆம்பளை அழலாமா?"

அடுத்து என் மனத்தில் எழுந்த கேள்வியே 'ஆம்பளை அழக் கூடாதா?' அப்படியென்றால் கண்ணீரையும், கண்ணீர் சுரப்பிகளையும் ஆண்களுக்கு ஏன் படைத்தான் ஆண்டவன்? கண்ணிலிருந்து வடிவதனால் அதற்கு 'கண்ணீர்' என்பது காரணப் பெயராக இருக்கலாம்.

என்னைப் பொறுத்தவரையில் அது கண்ணீர் அல்ல, அது கருணை நீர். கருணை நிறைந்த நெஞ்சங்களிலிருந்து சுரக்கும் நீர். அந்தக் கருணை நீரைத் தடுப்பவனும், ஒளிப்பவனும் மனசாட்சி இல்லாத மனித உறவுக் கள்வர்கள்.

அடி மனத்தின் ஆழத்தில் பிறக்கும் அழுகையை அடக்குவதோ, குறைகளை, குற்றங்களை கண்டு குமுறுகிற நெஞ்சங்களில் இருந்து பிறக்கின்ற கோபத்தை மற்றவர்களுக்கு தெரியாமல் மறைத்துக் கொள்வதோ, கவலைகளை, வருத்தத்தை, சோகத்தை, அதிருப்தியை வெளிக்காட்டாமல் வேஷமிடுவதோ. அவரவர் இதயத்தையும் இந்த உலகத்தையும் ஏமாற்றுகிற வித்தையாக இருக்கலாம்.

அந்த வித்தைகள் எனக்கு வேண்டாம். கம்பி மேல் நடந்து சார்க்கஸ் காட்டுகிற வித்தைக்காரன் கூட கீழிறங்கி தரையில் நடந்துதான் வாழவேண்டும்.

மழைக் காலத்தில் மழை பொழிந்து, குளிர் காலத்தில் குளிர் அடித்து, கோடைக் காலத்தில் வெயில் காய்ந்து, காற்றடிக்க வேண்டிய நேரத்தில் காற்றடித்தால்தான் இந்த உலகம் ஒழுங்காக இயங்குகிறது என்று அர்த்தம்.

அதேபோல் மனிதர்கள் சிரிக்க வேண்டிய நேரத்தில் சிரித்து, அழ வேண்டிய நேரத்தில் அழுது, ஆத்திரப் பட வேண்டிய நேரத்தில் ஆத்திரப்பட்டு, கவலைப்பட வேண்டிய நேரத்தில் கவலைப்பட்டால்தான் மனித இதயங்கள் ஒழுங்காக இயங்குகின்றன என்று பொருள்.

நாம் பெற்ற பிள்ளைகள் பிற்காலத்தில் நம்மை அழவும், ஆனந்தமும் அடையச் செய்வது போல், படைப் பாளிகளின் படைப்புக்களான கதாபாத்திரங்கள் படைத்தவனையே ஆட்டிப் படைப்பது கலையுலகில் மாத்திரம்தான்.

அந்தச் சுகங்களும், சோகங்களும் உண்மையான, உணர்ச்சியுள்ள கலைஞனுக்கு மாத்திரம் தான்!

(அனுபவங்கள் முற்றும்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி....

## 04 எஸ்.டி.சிவநாயகம்

எழுத்துச்சிற்பி சிவநாயகம் அவர்கள் பற்றி எழுதத் தொடங்கியதும் பலதரப்பட்ட கருத்துக்கள் வந்து மோதுகின்றன.

மட்டக்களப்பில் திரு.சிவநாயகம் வாழ்ந்த காலம் ஒரு மறுமலர்ச்சிக் காலம் என்று சொன்னால் அது மிகையாகாது.

உலகில் எத்தனையோ புரட்சிகள் நடைபெற்று வருகின்றன. நாட்டு அரசியலை மாற்றியமைக்கும் இராணுவப் புரட்சி, கைத்தொழில் புரட்சி, சமுதாயப் புரட்சி மற்றும் விவசாயப் புரட்சி என்றெல்லாம் பலதரப்பட்ட புரட்சிகளையெல்லாம் உலகம் கண்டிருக்கிறது.

கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் மட்டக்களப்பு தமிழகத்தில் நிகழ்ந்த பல சம்பவங்களையும் நினைவு கூர வேண்டிய நிலை எனக்கு ஏற்படுகிறது. இவற்றில் பல அம்சங்களை வாசகர்களுடன் பரிமாறிக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன். எனக்குத் தெரிந்த சம்பவங்களையிட்டு எழுதும்போது, அவை வெறும் சுயபுராணமாக பலருக்குத் தோன்றலாம். இருப்பினும் இக்கருத்துக்களை தொக்கி நிற்கும் பல உண்மைகளை இக்கட்டுரை மூலம் வெளிப்படுத்தத் துணிந்துள்ளேன். எனது இத்தகைய துணிவுக்கு காரணம் இல்லாமலுமில்லை. மட்டக்களப்பு சமுதாய, அரசியல் மற்றும் பண்பாடுடன் கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல அம்சங்களையும் அவற்றுடன் தொடர்புடைய காரண கர்த்தாக்களையும் நன்றாகத் தெரிந்து வைத்துள்ளவன் என்ற இறுமாப்புத்தான் அது.

இத்தொடரின் இரண்டாவது அங்கத்தை வாசித்ததும் பலர் எம்முடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும், நேரடியாகச் சந்தித்தும் எனக்குத் தெரிந்த விபரங்களனைத்தையும் இத்தொடரில் வெளிப்படுத்துமாறு அன்புக் கட்டளையிட்டனர்.

காலமோ மிக நெடியது. பல சம்பவங்கள் நடைபெற்ற ஆண்டுகள், திகதிகள் போன்றவை மறதி எனும் திரைக்குள் முடங்கிக் கிடக்கின்றன. இவற்றை எடுத்துக் கூறுவது கடினமான பணிதான். இருப்பினும் வாசகர்களாகிய நீங்கள் அடிக்கடி எனக்கு நினைவூட்டி உதவும் பணியினை மேற்கொள்வீர்கள் என்பதனால் கட்டுரையைத் தொடர்கிறேன்.

மட்டக்களப்பில் மிகச் சிறியளவில் தான் பகுத்தறிவு இயக்கம் தோன்றியது. இவ்வியக்கம் ஒரு சமுதாயப் புரட்சியையே ஏற்படுத்தியது. இவ்வியக்கம் தோன்றிய காலத்தில் மட்டக்களப்பில், சாதிப் பாகுபாடுகள் மிக உச்சக்கட்டத்தில் இருந்தன.

பலர் மறந்திருப்பார்கள். ஆனால் இன்னும் என்னுடைய உள்ளத்தின் ஆழத்திலே மிகப் பசுமையாக உறைந்து நிற்கிற அந்தப் பயங்கர நினைவை இங்கொரு தரம் மீட்டுப்பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

மட்டக்களப்பில் சிகையலங்காரம் செய்யும் அழகுக்கலைத் தொழிலாளர்கள் மூன்றாம் வட்டாரத்தில் வாழ்ந்து வந்தார்கள். உயர் சாதிக்காரர்கள் என்று கூறிக்கொள்வோர் சிலரும் அந்தப்பகுதியில் வசித்து வந்தார்கள். இப்பிரிவினர் இரு சாராருக்குமிடையே வன்முறை மோதல்கள் அடிக்கடி இடம் பெற்று வந்தன.

அரசாங்கக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நான் அன்று காலைப் பொழுதில் உம் குறுக்குத் தெருவால் கல்லூரிக்கு நடந்து போய்க்கொண்டிருந்தேன். எனக்கு முன்புறமாக நடுத்தர வயதுடைய சிகையலங்காரத் தொழிலாளி ஒருவர் சென்று கொண்டிருந்தார்.

எனக்குப் பின்புறமாக ஒருவர் ஓடி வருவது தெரிந்தது. மிக வேகமாக ஓடி வந்த அவர், எனக்கு முன்னால் நடந்து சென்ற அந்நபரின் தலைமீது தான் கொண்டு வந்த ஓர் இரும்புத் தடியால் ஓங்கி அடித்து விட்டார். இரத்தம் பீறிட்டுப்பாய்ந்ததோடு,



அவர் கீழே சரிந்தார்.

இந்தக் காட்சியை நேரடியாகக் கண்ட நான் பதை பதைத்துப் போனேன். ஓடிச் சென்று அவர் அருகில் அமர்ந்து என்னால் இயன்ற வரை அவரை ஆறுதல் படுத்தினேன்.

இந்தக் காட்சியை வெறுமனே பார்த்துக்கொண்டு பலர் அந்த வழியால் போய் வந்தார்கள். இவ்வாறு ஏறத்தாழ அரை மணி நேரம் சென்ற பின்னர் தாக்குண்டவரின் உறவினர் ஒருவர் அங்கு வந்தார். இதனைத் தொடர்ந்து ஒரு பொலிஸ் சார்ஜன் சைக்கிளில் அங்கு வந்தார். அவர் எனக்கு உறவினர். அவர் வந்ததும் படுகாயமுற்று அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பவர் பற்றி எதுவித கவனமும் செலுத்தாமல், என்னை திட்டித் தீர்க்க ஆரம்பித்தார். உடனடியாக அவ் விடத்தை விட்டு வீட்டுக்குச் செல்லுமாறு சற்று கடுமையாகவே எனக்கு கட்டளையிட்டார். அங்கு நின்றால் சம்பவம் பற்றி கோர்ட்டில் சாட்சி கூறவேண்டிய நிலை ஏற்படலாம்" என்று துரத்தினார்.

### சாதிவான்கள்

இந்தச் சம்பவம் அப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருந்த சாதிச்சண்டைகளுக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டாகும்.

பகுத்தறிவு இயக்கம் தோன்றியதும் இத்தகைய சாதிச்சண்டைகள் மெல்ல நீங்கி விட்டன. பல வகையான பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இவ்வியக்கத்தில் சேர்ந்து கொண்டனர். உயர்சாதிக்காரர் என்று தம்மைத் தாமே கூறிக்கொள்வோரின் பயங்கர கண்டனங்களையும் பகுத்தறிவு இயக்கம் எதிர் கொள்ள வேண்டியதாயிற்று. டோர்ப் பிடோ ஜனார்த்தனம் மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோது, கூட்டத்தைக் குழப்புவதற்கு முன்னோடியாக விருந்தவர்களும் இந்த உயர்சாதிவான்களே தான்!

பகுத்தறிவு இயக்கம் மட்டக்களப்பில் சாதிப்பாகுபாடுகள் களைந்தெறியப்படுவதில் பெரும் பங்காற்றியதுடன் வேறு பல முற்போக்குக் கருத்துக்களும் வளர்வதற்கு வழி வகுத்தது.

தந்தை செல்வாவால் தோற்றுவிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் வளர்ச்சியிலும் பகுத்தறிவு இயக்கம் தன் பங்கினை செலுத்தியிருக்கிறது.

### தமிழரசுக் கட்சி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பக் கூட்டம் கொழும்பு மருதானையில் அப்போது இருந்த அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மட்டக்களப்பிலிருந்து மிகவும் குறைவானவர்களே பங்குபற்றினர். மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக விருந்த திரு.சாம் தம்பிமுத்து அவர்களின் தந்தையாரான திரு.இ.எல்.தம்பிமுத்து அவர் களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

### பகுத்தறிவு இயக்கம்

திரு.இ.எல்.தம்பிமுத்து அவர்கள் 'திராவிடமக்கள் வரலாறு' என்ற வரலாற்று நூலை ஆங்கிலத்தில் எழுதியவர். இந்தியாவிலேயே ஆங்கில நூலும் தமிழ் நூலும் பிரசுரிக்கப்பட்டன.

திரு.சிவநாயகம் அவர்களும் திரு.இராசதுரை அவர்களும் இக்காலகட்டத்தில் சுதந்திரன் பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். தமிழரசுக் கட்சியின் ஆரம்பக் கூட்டத்தில் பங்கு பற்ற மாணவர்களாகிய நாங்கள் மூவர் சென்றிருந்தோம். பின்னர் 'அப்சராஸ்' இசைக்குழுவில் சேர்ந்து பிரபல பாடகராகத் திகழ்ந்த பாலா என்ற திரு.பாலசுப்பிரமணியம், ஆனந்தராஜா மற்றும் நான் ஆகிய மூவரும் கறுத்தச் சட்டைகளை அணிந்து சென்றிருந்தோம், இதனை ஓர் அபசகுனமாக சில ஆஸ்தீகர்கள் அக் கூட்டத்தில் கருதினார்கள். திராவிடர் கழகத்தவர்கள் இந்தியாவில் கறுப்புச் சட்டை அணிவார்கள் என்பதனால் நாங்களும் கறுப்புச் சட்டை அணிவதை பழக்கமாகக் கொண்டிருந்தோம்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு தேவாரத்துடன் ஆரம்பிக்கலாம் என்று சில பெரியவர்கள் கூறினார்கள். இதனை நாங்கள் மூவரும் எதிர்த்தோம். தமிழ் வாழ்த்துப் பாடல் ஒன்றுடன் தான் தமிழரசுக் கட்சியின் கூட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டோம். அப்பொழுது தந்தை செல்வா அவர்கள் "தேவாரமும் தமிழ்பாடல்தானே?" என்றார். ஆனால் நாங்கள் மூவரும் வெளி நடப்புச் செய்யப் போவதாகக் கூறினோம்.

கோப்பாய் கோமான் திரு.கு.வன்னிய சிங்கம் அவர்கள் "அவர்கள் கூறுவதும் ஒரு முறைக்கு சரியான காரணம் தான். இங்கு இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய மும்மதத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஆகவே இந்துக்களுக்கு மட்டும் உரித்தான தேவாரத்தைப் பாடுவது முறையல்ல. பத்மநாதன், நீங்களே தமிழ் வாழ்த்துப் பாடலைப் பாடுங்கள்...!" என்று கூறினார்.

### தூங்காதே தமிழா

நான் எழுந்து பாடிய பாடலில் முதல் வரிகளை இங்கு தருவது பொருத்தமாகும்.

சுதந்திர சூரியன் உதிக்கின்ற நேரம்
தூங்காதே தமிழா!
விதம் விதமாகிய புது மணம் விரிந்திடும்
விண்ணொளி தன்னில் பல
வர்ணங்கள் தெரிந்திடும்
தூங்காதே தமிழா!

சுத்தானந்த பாரதியார் அவர்கள் இயற்றிய இப்பாடல் சந்தர்ப்பத்திற்கு மிகப் பொருத்தமாக இருந்தமையால், தந்தை செல்வா அவர்கள் பின்னர் பல தடவைகள் இப்பாடலைப் பாடும் படி கேட்டு, இரசித்து மகிழ்வார்.

என்னுடைய பாடலைத் தொடர்ந்து பாலா அவர்கள் 'வாழ்க தமிழ் மொழி' என்ற மகாகவி பாரதியாரின் பாடலைப் பாடினார்.

• தூங்காதே தமிழா என்று தொடங்கும் பாடல் பிற்பட்ட காலங்களில் நடைபெற்ற

## இரா.பத்மநாதன்

தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாடுகளில் என்னால் பாடப்பட்டு வந்தது. இதன் பின்னர் சுதந்திரன் பத்திரிகையால் நடத்தப்பட்ட தேசிய கீதப்போட்டியில் கவிஞர் பரம்மஹம்ஸதாசன் அவர்கள் எழுதிய 'வாழ்க ஈழத்தமிழகம்' என்று தொடங்கும் பாடல் முதல் பரிசைப் பெற்றது. அதன் பின்னர் தமிழரசுக்கட்சி மேடைகளில் இத் தேசிய கீதம் திருமதி.மங்கயற்கரசி அமிர்தலிங்கம் அவர்களால் பாடப்பெற்று பிரசித்தமாகிற்று.

எனது வாழ்க்கையில் நான் ஏற்றுக் கொண்ட முதல் தொழில் ஆசிரியர்த் தொழிலாகும். ஆங்கில உதவியாசிரியராக மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளிலும் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கப் பாடசாலையிலும் பணிபுரிந்தேன்.

களுதாவளை இ.கி.மி. பாடசாலையில் எனக்கு ஆசிரியராகப் பணிபுரியும் கட்டளை அப்போது இ.கி.மி. பாடசாலைகளின் முகாமையாளராக இருந்த ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தஜி வழங்கியிருந்தார்கள். இதனை ஒரு சிலர் ஆட்சேபித்தனர். "இவன் ஒரு 'சுனா மானா' சைவப்பள்ளிக்கூடத்தில் இவனை ஆசிரியராக நியமித்தால் இவன் பிள்ளைகளுக்கும் நாஸ்திக கருத்துக்களையே புகட்டுவானே!" என்று கூறினர்.

ஆனால் சுவாமிஜி, அவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. "பத்மநாதனை சிவானந்த வித்தியாலயத்தில் படிக்கும் காலத்திலே நான் அறிவேன். இங்கு பயின்றவர்கள் எப்பேர்ப்பட்ட கொள்கையுடையவர்களாக இருந்த போதும், தங்கள் கடமையை செவ்வனே நிறைவேற்றுவார்கள். தனது சொந்தக் கருத்தை மாணாக்கர்களுக்குத் திணிக்க முற்படமாட்டார்கள். பத்மநாதனில் எனக்கு பரிபூரண நம்பிக்கையுண்டு!" என்று கூறியிருக்கிறார்.

இதனை சுவாமிஜி அவர்களே என்னிடம் தெரிவித்தார்.

பகுத்தறிவு இயக்கத்தின் தாக்கம் கிழக்கு மாகாணத்தில் பல பிரதேசங்களிலும் பரவியது. பகுத்தறிவு இயக்கக் கருத்துகளை ஏற்றுக் கொண்டவர்கள் தாங்கள் கைக்கொண்ட பணிகளில் தங்கள் கருத்துக்களை புகுத்த முற்படவில்லை. தங்கள் பணிகளை திறம்பட செய்து முடித்தார்கள். என்பதற்கு சிறந்ததோர் உதாரணமாக திகழ்ந்தவர் இசை ஆசிரியராக கடமையாற்றிய எம்.எஸ்.பாலு அவர்கள். கடந்த வாரம் இத் தொடரில் அவர் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணிபுரிந்தார், என்று தவறுதலாகக் குறிப்பிட்டு விட்டேன். ஆனால் இன்று கல்முனை ஸாகிரா கல்லூரி என்றழைக்கப்படும் முன்னாள் சாய்ந்தமருது மத்திய மகா வித்தியாலயத்தில் தான் அவர் பணிபுரிந்தார்.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் திரு.நல்லையா அவர்களே திரு.பாலு அவர்களை இசை ஆசிரியராக பணி புரிய ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் இசை ஆசிரியராக பணி புரிவதற்கு ஏற்ற தகைமைச் சான்றிதழ் அவரிடமிருக்கவில்லை. இருப்பினும் பாலு அவர்களுடைய ஆற்றலை அறிந்தே திரு. நல்லையா அவர்கள் கல்வித்திணைக்களத்தின் வரையறைகளைக் கடந்து இந்த நியமனத்தை ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இன்று நுண்கலைப்பீடத்தின் தலைவராக விளங்கும் பேராசிரியர் மௌனகுரு அவர்களும் திரு.பாலு அவர்களின் ஆரம்பப் பயிற்சியில் இடம் பெற்ற ஒருவர். கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் ஈழத்துரெத்தனம், கவிஞர் வில்வராஜன், கவிஞர் அன்பு முகைதீன், இசைக்கலைஞர் அபுபக்கர் போன்ற பலர் திரு.பாலு அவர்களின் சீடர் குழுவைச் சேர்ந்தவர்களே.

**(இன்னும் வரும்)**

(திரு.பாலு அவர்களின் சீடர் பட்டியல் மிகப் பெரியது. இதில் அங்கம் வகித்தவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் உபயோகமாக இருக்கும்.)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 58**

# அரங்கம் அந்தரங்கம்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

'மாதரை நம்பாதே' என்று மூதாதையர்கள் பாடினார்கள். ஏமாந்தவர்கள் எத்தனை பேரோ, யாருக்குத் தெரியும்?

போலீசார் என்னை விசாரிக்கத் தொடங்கும்போது, எனது பம்பாய் நண்பர்கள் சிலர் உள்ளே நுழைந்தார்கள்.

அவர்களில் ஒருவர் வசந்தலால். அவர் பம்பாயில் ஒரு மாஜிஸ்திரேட்.

நல்ல வேளையாக அவரும், மற்றவர்களும் காட்டிய பரபரப்பில் போலீசார் கொஞ்சம் தயக்கம் காட்டினார்கள். இல்லையென்றால் போலீஸ்காரன் புத்தி குடுமியைப் பிடிப்பது தானே!

"வட் பொயட்? வாட் ஹாப்பன்ட்?" என்றார் வசந்தலால்.

நான் நடந்ததைச் சொன்னேன்.

அந்தப் பெண்ணின் அங்க அடையாளங்களைக் கேட்டார்கள்.

"அங்க அடையாளங்கள் எதற்கு? ஏர் இந்தியா விமானத்தில் பணிபுரிகிறாள். பெயர் சந்திரபுஷ்கரணி!" என்றேன்.

போலீசார் ஏர் இந்தியாவை டெலிபோனில் விசாரித்தார்கள்.

"அப்படி பெயருள்ள பெண்ணே தங்களிடம் வேலைப் பார்க்கவில்லை!" என்று ஏர் இந்தியா அலுவலகம் பதில் கொடுத்தது.

அவளது அசல் பெயர் வேறு, நீண்ட நாட்களாக அவள் சொல்லிக் கொண்டிருந்த பெயர் வேறு என்பது எனக்கு அப்போது தான் தெரியும்.

பெட்டியை வைத்து விட்டுப் போகும் போது, அவள் கட்டி இருந்த புடவையின் நிறம் எனக்கு ஞாபகம் இருந்தது.

"பச்சைப் புடவை; பனாரஸ் பட்டு!" என்றேன் நான்.

"மச்சம் உண்டா?" என்று கேட்டார்கள்.

"முகத்தில் இல்லை!" என்றேன்.

"வேறு இடங்களில்...!" என்றார்கள்.

வசந்தலால் என்னைப் பற்றிப் போலீசாருக்கு விளக்கத் தொடங்கினார்.

அவற்றைக் கேட்டதும் அவர்கள் எனக்கு மரியாதை செலுத்தத் தயாராகத்தான் இருந்தார்கள்.

ஆனால் நான் இருக்கும் அறையிலேயே ஒரு குற்ற நிகழ்ச்சி நடந்த பிற்பாடு என்னை விசாரித்து ஒரு சாட்சியாக்காமல் விடுவது எப்படி?

குற்றம் என்று வரும்போது பெரிய பெரிய பதவி வகித்தவர்களெல்லாம் கூண்டில் ஏற வேண்டி வருகிறது. இன்றைக்கு ஒருவனைப் பதவியில் பார்க்கும் போது, 'என்றைக்கு இவன் கூண்டில் நிற்பானோ' என்று எண்ணத் தோன்றுகிறது.

சட்டத்தின் முன் மேடையில் நிரபராதிகளே சதிராட வேண்டியிருக்கும்போது, நான் எம்மாத்திரம்?

வசந்தலால் ஒரு காரியம் செய்தார்.

என்னுடைய அறையில் அந்தப் பொருட்கள் எடுக்கப்பட்டதாக எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொடுத்தார்.

ஒரு மாஜிஸ்திரேட் அதற்குச் சாட்சியாகி விட்டதால், அவர்களும் என்னை அதிகம் தொல்லை செய்யவில்லை.

எனக்குத் தாள முடியாத துயரம். ஏறக்குறைய என் வாழ்க்கையே இப்படித்தானே?

எனக்குச் சம்பந்தமுள்ள விஷயங்களைக் கோட்டை விட்டு விட்டு, சம்பந்தமில்லாத விஷயங்களில் மாட்டிக் கொள்வதுதானே என் வழக்கமாகப் போய்விட்டது!

கடிகாரம் கட்டுவார்கள் என்று நீட்டிய கரத்தில், விலங்கு விழுவது ஒன்றும் எனக்குப் புதிய அனுபவம் அல்லவே!

பொது அறிவை அதிகம் கொடுத்த இறைவன், வாழ்க்கைத் திறமையைப் பறித்துக் கொன்று விட்ட கதை தானே என்னுடைய கதை!

"நாங்கள் இருக்கும்போது நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?" என்று வசந்தலால் எனக்கு ஆறுதல் சொன்னார்.

இரவில் ஒரு நண்பரின் பங்களாவில் 'டின்னர்' இருப்பதாகவும், நானும் அங்கே வரவேண்டும் என்றும் எனது நண்பர்கள் வற்புறுத்தினார்கள்.

எனக்கு பம்பாயைக் கண்டாலே பயமாக இருந்தது.

தங்கக் கடத்தலுக்குப் பெயர் போன இடம் பம்பாய்.

அங்கே யாரிடமும் ஒரு 'பெல்ட்' கூட வாங்கிக் கட்டக் கூடாது. அதிலே வரிசையாக தங்க 'பிஸ்கெட்'டுகள் இருக்கும்.

பெரிய பங்களாக்களில் கடத்தல் தங்கங்களைப் பேரம் செய்வார்கள் போலீசாரையே கைக்குள் போட்டுக் கொண்டிருப்பார்கள். சிலர் மந்திரிகளையே பிடித்து வைத்திருப்பார்கள். எங்கே என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரியாது.

பத்தடுக்கு மாடியில் நாற்பது வீட்டுப் பகுதிகள் என்றால், ஒவ்வொரு பகுதியிலும் ஏதோ நடந்து கொண்டிருக்கும்.



'ஜாக்தே ரஹோ' என்ற படத்தில் ராஜ்கபூர் அதைத்தானே காட்டினார்!

"நான் ஒட்டலிலேயே சாப்பிடுகிறேன்!" என்றேன்.

அவர்கள் வற்புறுத்தினார்கள்.

நான் பேச்சோடு பேச்சாக, "இவ்வளவு உத்தமியாகப் பழகிய சந்திரபுஷ்கரணி ஏன் இந்த வேலையைச் செய்திருப்பாள்?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை, வேறு எங்காவது

**கவியரசு கண்ணதாசன்**

கொண்டு போவதற்குப் போயிருப்பாள்; வழியில் யாராவது ஒரு போலிஸ்காரனின் சந்தேகப் பார்வை விழுந்திருக்கும். தனது பாதுகாப்புக்காக இங்கே நுழைந்து பெட்டியை இங்கே வைத்திருப்பாள். உங்களுக்கும் அவளுக்கும் வேறு எந்த விதமான தகராறுமில்லையே! உங்களை ஏன் அவள் மாட்டிவிட வேண்டும்?" என்று கேட்டார் ராமையா என்ற தமிழ் நண்பர்.

(அந்தரங்கம் வரும்)

# “மன்னிக்க வேண்டுகிறேன்”



**சி.நாகேந்திரன்-எருவில்**

‘இன்றைக்காவது நேரத்தோடு கிளாசுக்கு போகலாம் என நினைத்தேன். அதுவும் சரி வராது போலிருக்கு’ எனத் தனக்குள் சொல்லிக் கொண்டு பேருந்து வரும் வீதியை நோக்கிக் கொண்டிருந்தாள் கவிதா. அப்போது அவளை நோக்கி ஒரு தனியார் ‘வேன்’ வந்து கொண்டிருந்தது. கையை அதன் முன் நீட்டி நிறுத்தி அதனுள்ளே, நுளைந்து கொண்டாள். அதற்குள் ஒரு ஆசனம் இருக்கவே அதில் அமர்ந்தாள். அவள் அமர்ந்த ஆசனத்துக்கு எதிர் ஆசனத்தில் ஒரு வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் அமர்ந்து இருந்தான். அவன் தன் முகத்துக்கு கிரிக்கெட் வீரர்கள் அணியும் கண்ணாடியை அணிந்திருந்தான்.

அவள் ஏறி ஆசனத்தில் அமர்ந்தது தொடக்கம் அவன் அவளையே பார்த்துக் கொண்டு இருப்பது போல் கவிதாவுக்குத் தெரிந்தது. ‘என்ன இவன் பெண்களைக் காணாதவன் போல, என்னையே பார்த்துக் கொண்டு இருக்கிறான்’ எனத் தனக்குள் கோபித்துக் கொண்டு தன் கோபத்தை தன் முகத்தில் வெளிப்படுத்தியவாறு, அடுத்த பக்கம் அவள் தன் பார்வையைத் திருப்பினாள். அப்போதும் அவளுக்கு அவன் பார்ப்பது போல உணர்வு ஏற்பட ‘என்ன இவன் என்னையே பார்த்துப் பார்த்து இருக்கிறான்? எனக்கு அருவருப்பாய் இருக்கு... செருப்பக் களற்றி சொத்தையில இரண்டு அடி போட்டால் தான் இந்த ஆள் திருந்துவான்!’ என நினைத்தவள் ‘சீச்சி! இவன் பார்த்தால் பார்க்கட்டும். நாம் அடுத்த இறக்கத்தில் இறங்கி விடுவோம். இப்ப பெண்களை யார் தான் பார்ப்பதில்லை? விழுங்குவது போல் பார்க்கும் கூட்டம் தான் எங்கும். இந்த நிலை எப்பதான் மாறப் போகிறதோ?’ என நினைத்துக் கொண்டு இருக்கும் போது, வேகமாகப் போன வேனை சாரதி திடீரென பிறேக்கை அழுத்தி நிறுத்தினான். எல்லோரும் திடீரென முன்னோக்கி விழுந்தனர். அப்போது கவிதாவுக்கு எதிரில் இருந்த அந்த இளைஞன் அணிந்திருந்த கண்ணாடி கழன்று விழுந்தது. அவன் அதை எடுப்பதற்கு அங்கும் இங்கும் தடவினான்.

அந்தச் சமயத்தில் தான் கவிதாவுக்குப் புரிந்தது இவர் ஒரு கண்பார்வையற்றவர் என்பது. அதற்காகத்தான் இந்தக் கண்ணாடியை அணிந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட அவள் ‘ஐயோ நான் அவரைப் பிழையாக நினைத்து விட்டேனே’ எனத் தனக்குள் நினைத்த அவள், ‘என்னை மன்னித்து விடு கடவுளே’ எனத் தனக்குள் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு அவன் தேடிக் கொண்டிருக்கும் கண்ணாடியைக் கையில் எடுத்தாள். “இந்தாங்க உங்கள் கண்ணாடி!” என அவன் கையைப் பிடித்து கண்ணாடியைக் கொடுத்தாள்.

அதனைப் பெற்ற அவன் “தாங்ஸ்!” எனக் கூறியவாறு “நீங்கள் யார்?” எனக் கேட்டான். “நான் உங்கள் எதிரே இருந்த சீற்றில் இருந்தவள்!” எனக் கூற “நான் பிறப்பிலே கண் பார்வையை இழந்தவன். இப்போது எங்களைப் பராமரிக்கிற விழிப்புலனற்றோர் இல்லத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறன். நான் குறிப்பிட்ட அந்த இடம் வந்ததும் வேனைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லுங்கள்!” எனக் கூறி முடித்தான் அவன்.

அதனைக் கேட்ட கவிதா தன்னை அறியாமலே அழுது விட்டாள். ‘அவரைப் பற்றி அறியாமையால் நான் தவறாக நினைத்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும் கடவுளே’ என்று மீண்டும் தனக்குள்ளேயே இறைவனைக் கேட்டவாறு தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தாள் கவிதா. ■

# சூழ்நிலை

கடந்த இரண்டு வருடங்களாக மனதில் சுமந்து கொண்டிருந்த சுமையின் ஒரு பகுதி இறக்கி வைக்கப்பட்ட உணர்வு சிவமணியை வியாபித்திருந்தது. நாளை கிடைக்கப்போகும் செய்திதான் மிகுதிச் சுமையையும் இறக்கி வைக்க உள்ளது.

அந்த நிமிடத்திற்காக அவள் மட்டுமல்ல. அவளது குடும்பமே காத்திருந்தது. இத்தனை காலமும் நிறைவேறாமலிருந்த எதிர்பார்ப்பு இந்தத்தடவையாவது நிறைவேறிவிடவேண்டும் என்பதற்காக சிவமணி நேர்த்திவைக்காத கோயில்களே யாழ்ப்பாணத்தில் இல்லை எனலாம்.

காலையிலும் நல்லூர் முருகன் கோயிலுக்குச் சென்று வந்துதான் சமையல் வேலைகளுக்காக அடுக்களைக்குள் புகுந்தாள்.

“சிவமணியக்கா! உங்களுக்கு திருகோணமலையிலிருந்து ரெலிஃபோன் கோல் வந்திருக்கு. உடனடியாக வாங்க!” என அவள் வீட்டுக்குச் சற்றுத்தொலைவிலுள்ள தொலைபேசி சேவை நிலையத்திலிருந்து வந்து சொன்னார்கள்.

சிவமணி மகிழ்ச்சி மேலிட தொலைபேசி சேவை நிலையத்துக்கு வந்து சேர்ந்தாள்.

“இப்ப கோல் வரும். அதிலை இருங்க அக்கா!” என்று அங்கு சொல்லப்பட்டதும் கதிரையில் அமர்ந்தாள்.

அழைப்பு அவளது மகன் ஜெகனிடமிருந்து தான் வந்தது என்பதை ஊகிக்க அவளுக்கு சில நொடிகள் கூட தேவைப்படவில்லை.

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட கப்பலில் ஜெகனும் கொழும்புக்குச் சென்றிருந்தான்.

கப்பல் திருமலைச் சென்றடைந்ததும் தொலைபேசி எடுப்பதாக அவன் சொல்லியிருந்தான்.

ஜெகனை வெளிநாடு அனுப்பி அவனது உழைப்பின் மூலம் அவனுக்கு முன்னும் பின்னும் பிறந்த சகோதரிகளின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்க வேண்டும் என்ற எண்ணமே பெற்றோர்களிடம் உண்டானதால் ஜெகனும் வெளிநாட்டு ஆசைக்கு ஈர்க்கப்பட்டான்.

வீடு காணி, நகை என எல்லாவற்றையும் ஈடுவைத்தும், கடன் பெற்றும் இரண்டு வருடங்களுக்கு முன் ஜெகன் சுவிஸ் நாட்டிற்கு அனுப்பப்பட்டான். ஆனால் அந்நாட்டிற்குள் புக முன்பே வேறு ஒரு நாட்டிலிருந்து அவன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டான்.

அவனையே மூலதனமாகக் கொண்டு இயங்க எதிர்பார்த்த குடும்பத்திற்கு அவன் திரும்பி வந்த செய்தி இடியை இறக்கியது. மீண்டும் அவன் வெளிநாடு சென்று உழைக்காவிட்டால் அவர்கள் மீள முடியாத பள்ளத்துள் விழுந்துவிட்டவர்களாகிவிடுவார்கள்.

மீண்டும் ஜெகனை அனுப்புவதற்காக முகவர்கள் காத்திருக்கச் சொன்னார்கள். கொழும்பு விடுதியில் மாதங்கள் ஆறு காத்திருந்தான். அனுப்பப்படுவதாய்க் காணவில்லை.

விடுதிக்கட்டணம், உணவுச்செலவுகளுக்கென ஊரிலிருந்து அப்பா பணம் அனுப்பிக் கொண்டிருந்தார். வீட்டில் பட்டினியைக் குடிபுக வைத்துவிட்டு மகனுக்காக வருமானத்தை அனுப்பிக் கொண்டிருந்தார்.

வெளிநாடு போனால் கூட கொழும்பில் நின்ற செலவுகளை அடைக்கவே நீண்ட நாள் உழைக்கவேண்டும் என்பதும் தனக்குப் பணத்தை அனுப்பிவிட்டு வீட்டில் எல்லோரும் அரைகுறை வயிற்றை நிரப்பிக் கொண்டிருப்பதும் ஜெகனுக்கு தாக்கத்தைக் கொடுத்தது.

“வெளிநாடு செல்வது உறுதியானதும் ரெலிஃபோன் மூலமோ பக்ஸ் மூலமோ தெரியப்படுத்துங்கள். வருகிறேன்!” எனக் கூறிவிட்டு ஜெகன் ஊர் வந்து விட்டிருந்தான்.

யாழ்ப்பாணத்திற்கும் ஏனைய இடங்களுக்குமான தரைவழிப்பாதை அடைக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் கடல்வழிப் போக்குவரத்தின் மீது தான் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அந்தப் பயணங்கூட எப்போ இடம் பெறும்? எப்போ தடைப்பட்டு நிற்கும்? என்பது அதனை ஒழுங்கு செய்பவர்களுக்கே தெரியாது! நாம் நினைத்த இடத்திற்கு, நினைத்த நேரத்தில் செல்லக்கூடிய நிலையில் இன்று பயணங்கள் இல்லை. இதைக் கருத்திற்கொண்ட முகவர்கள்."நாங்கள் பயணத்திகதி அறிவித்தவுடன். வந்துவிடவேண்டும். உங்களால் குறிப்பிட்ட திகதிக்குள் வரமுடியாவிட்டால். இன்னொரு தடவை உங்களுக்கு சந்தர்ப்பம் தரப்படாது. இதனால் எங்கள் மீது நீங்கள் குறைநினைக்க வேண்டாம்” என்று சொல்லியே ஜெகனை அனுப்பியிருந்தார்கள்.



இரண்டு வாரங்களுக்கு முனபு தான் “உடனடியாக வரவும், 15ம் திகதி பயணம்!” என முகவரிடமிருந்து செய்தி வந்தது.

கப்பல் பயணம் ஒழுங்கு செய்யும் காரியாலயத்திற்கு ஜெகன் ஓடினான்.

“அடுத்த கப்பலுக்கு ரிக்கற் கொடுத்தவர்கள் நிறையப்பேர் இருக்கினம். அதைவிட இன்னும் பலர் பல்வேறு முக்கிய தேவைகளுக்காகச்செல்ல அனுமதி கேட்டுக் கொண்டிருக்கினம். இந்த நிலையிலை எதுவித ஆதாரமும் இல்லாமல் வந்து நிக்கிறீங்க. ஆதாரத்தோடை வாங்க பார்க்கலாம்” என பொறுப்பதிகாரி உறுதியாகக் கூறிவிட்டார்.

முகவர்களுடன் தொடர்பு கொண்டு தொலைநகல் மூலம் கடிதம் பெற்று, அடுத்த கப்பலுக்கும் அனுமதி பெறுவதற்கிடையில் உடல், உள உளைச்சல்கள் கொஞ்சநஞ்சமல்ல.

கப்பல் பயணத்திகதி அறிவிக்கப்பட்ட தினம் பயணங்களில் ஒருத்தனாக ஜெகனும் காங்கேசன்துறைக்குச் சென்றான். “உரிய திகதிக்கு முன்னதாகவே ஜெகன் கொழும்பு சென்று விடுவான்' என ஜெகன் குடும்பமே நிம்மதிப் பெருமூச்சு விட்டிருந்த நேரம், மறுநாள் ஜெகன் திரும்பி வந்திருந்தான். ‘மறு அறிவித்தல் வரை கப்பல் பயணம் தற்காலிகமாக இடை நிறுத்தம்' என்ற செய்யத்தான் அவன் திரும்ப வந்ததற்குக் காரணம்.

பயணத்திகதி நெருங்கிக் கொண்டிருப்பதை எண்ண எண்ண வீட்டில் எல்லோர் மனமும் நிம்மதி இழந்து தவித்துக் கொண்டிருந்தது. வீடு மயான அமைதியால் மூடப்பட்டிருந்த வேளை மீண்டும் கப்பல் பயணத்திற்கு அனுமதி பெற்றவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

நேற்று இரவு வானொலி “750 பயணிகளுடன் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து கப்பல் திருமலைநோக்கி புறப்பட்டது” என செய்தி சொன்னபின் தான், கொந்தளிக்கும் கடலாக மாறியிருந்த ஜெகன் குடும்பத்தவர் மனங்கள் அமைதி பெறத் தொடங்கியிருந்தது. ‘நாளை 15ம் திகதி’

‘இன்று ஜெகன் திருமலை சென்றுவிட்டமையால் நாளை சுவிஸ் பயணமாகிவிடுவான்’ என்ற நினைப்பு சிவமணி மனதை முழு அமைதிக்கு இட்டுச் சென்ற நேரம் தொலைபேசி அழைத்தது.

சிவமணி தொலைபேசியை காதருகே கொண்டு சென்றாள். தொலைபேசிவழியே வந்த குரல் ஜெகனுக்கு சொந்தமானதல்ல.

நேற்று ஜெகனுடன் கப்பலில் சென்ற ஊரவர் சண்முகத்துக்கே சொந்தமானது.

“சிவமணியக்கா! நாங்கள் திருகோணமலைக்கு வந்து சேர்ந்திட்டம். இண்டைக்கு இரவே கொழும்புக்குப் போயிடுவம். ஆனால் சின்ன ஒரு பிரச்சினை அதைச் சொல்லத்தான் எடுத்தனான்” என சண்முகம் சொல்லிக் கொண்டிருந்த போதே சிவமணியின் மனசு ஏதோ விபரீதம் நடந்து விட்டதை சண்முகத்தின் குரலில் இருந்து உணர்ந்தது.

“அப்ப ஜெகன் எங்க சண்முகம்?”

“நாங்க திருகோணமலைக்கு வந்த நேரம் இங்க ரவுண்ட்டப் நடந்தது. அதிலை சந்தேகத்தின் பேரிலை ஜெகனை மறிச்சு வைச்சிருக்கிறாங்கள். நான் எப்படியும்......” அதற்கு மேல் சண்முகம் சொல்லிக் கொண்டிருந்தது எதுவும் அவள் காதில் விழவில்லை.

கையிலிருந்து தொலைபேசி நழுவியது கண்கள் இருண்டு வர, நெஞ்சின் இடப்பக்கத்தை ஒரு கையால் பொத்தியவாறே, சிவமணி தரையை நோக்கிச் சரிந்துகொண்டிருந்தாள்.

**மு. கலை**

# தப்பு



**எம். ரமேஷ்**

திடுக்கிட்டெழுந்தாள் வள்ளியம்மாள். ஒரு கணம் அதிர்ந்து போனாள். எங்கும் ஒரே இருளாகவிருந்தது அவள் கண்களுக்கு. தான் எங்கிருக்கின்றாள் என்பது கூட அவளுக்கு கேள்விக்குறியாக இருந்தது.

கண்களைக் கசக்கியவள் மீண்டும் தன் பார்வையை நாளாப்பக்கமும் ஓடவிடுகின்றாள். அப்போதுதான் புரிந்தது, வீட்டு விறாந்தையில் தான் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்திருப்பது.

‘அம்மாடியோ... நான் நல்லாவே பயந்துபோயிட்டன்...’ நினைத்தவளாய் கடிகாரத்தை நோக்குகின்றாள். நேரம் சாயங்காலம் 6 மணியைக் காட்டியது.

‘அடக் கடவுளே...!! என்னைய நம்பி பேத்தி காயத்ரிய விட்டுட்டுப் போயிருக்காங்க, நான் என்னடா என்னா நல்லாத் தூங்கிட்டனே... காயத்ரி என்ன செய்யிறாளோ தெரியல்ல..’

இதுலவேற அக்கம்பக்கத்தவர்கள் இவள் அடிக்கடி ஒரு பொடியனோட கதைக்கிறதா சொல்லுதுகள். எல்லாம் பொறாமை... பொறாமை... என் பேத்தி அப்படிப்பட்டவள் இல்ல..., இருந்தாலும் வீட்டுலையும் என்னத் தவிர வேறயாருமில்ல ஏதாச்சும் எடக்கு முடக்கா நடந்திட்டா...?,

மனம் கூத்தாட, தடுமாற்றத்துடன் தன் ஊன்றுகோலின் உதவியினால் மெல்ல எழுந்துகொண்டாள் வள்ளியம்மாள்.

‘என் பேத்தி அப்படிப்பட்டவள் இல்ல...’ மனதினுள் இனம்புரியாத ஒரு பயம்- வள்ளியம்மாளிற்கு. இருந்தும் காயத்ரியை பார்த்துடலாம் என்ற எண்ணத்துடன் நகர்கின்றாள் வள்ளியம்மாள்.

‘என்ன..., இவள எங்கையுமே காணல்ல. பக்கத்து வீட்டுல கேட்டுப்பார்க்கலாமா...?, இல்ல இல்ல இப்பவே அதுகள் இல்லாததையும் பொல்லாததையும் காயத்ரிய பத்தி சொல்லுறப்போ இதவேறகேட்டா அதுகளுக்கு என்னும் ஒரு நல்ல சந்தர்ப்பமாபோயிடும். என்ன பண்ணலாம்? ஒரு வேளை மத்தவங்க சொல்லுறமாதிரி அந்தப் பொடியனோட இல்ல இல்ல அப்படி இருக்காது இங்கதான் எங்காவது இருப்பா.

ஆ! அவளோட ரூமுல பார்க்கலாம். விரைகிறாள் வள்ளியம்மாள்.

“இதுவும் பிடிக்கலையா.....?”

ரூமுக்குள்ளிருந்து காயத்ரியின் குரல். திக்கென்றது வள்ளிம்மாளிற்கு. இன்னும் சற்று கூர்மைப்படுத்தினாள் தன் செவிகளை.

“என்னதான் செய்தாலும் திருப்தியா இல்லையே. இன்னும் கொஞ்சநேரத்துல எங்க வீட்டார்கள் வந்திடுவாங்க. அப்புறம் எல்லாமே அம்போதான்...!”

அழுத்தமாக ஒலித்தது காயத்ரியின் குரல். வள்ளியம்மாளிற்கு நம்பவே முடியவில்லை. இவை நிஜமாவென்று, ஒருமுறை தன்னைத் தானே கிள்ளிப்பார்க்கின்றாள் உண்மைதான்.

‘அப்படியென்றா அக்கம் பக்கத்தவர் சொன்னது உண்மைதானா...? என்ன- நெஞ்சழுத்தம் இவளுக்கு? வீட்டுக்குள்ளையே கொண்டுவந்திட்டாளே... பாவி மக!

இந்த கிழவிய ஏமாத்திடலாம் என்ற தைரியத்துலதானே அவனை ரூமுக்குள்ள கூட்டிவந்தனி. இரு இரு இந்த கிழவி யாரென்பதை காட்டுறன்.

இன்னைக்கு ஒனக்கும், ஒன்னோட கள்ளக்காதலனுக்கும் ஒரு முடிவுகட்டுரன். எவ்வளவு... எவ்வளவு மதிப்பானது எங்க குடும்பம். அந்த குடும்பத்தையே நீ நாசம் பண்ணுறியா... இது நல்லதில்ல... கொஞ்சம் கூட நல்லதில்ல...!” புறுபுறுத்தாள் வள்ளியம்மாள்.

“முடிஞ்சா இன்னுமொருநாள் பார்க்கலாம். எப்ப இப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்குமென்று ஆவலா இருக்கன்...”

புன்முறுவலுடன் காயத்ரியின் குரல் மீண்டும். அவ்வார்த்தைகளால் கொதித்துப் போன வள்ளியம்மாய், தன் இடுப்பில் செருகியிருந்த மாற்றுச் சாவிக்கொத்திலிருந்து காயத்ரியின் ரூம் சாவியால் ஓசையின்றி திறந்தாள் கதவை.

“இப்ப நான் அழகா இருக்கேனா..?” காயத்ரி உள்ளிருந்து.

“நீ அழகா மட்டுமில்ல ஆட்டக்காரியாவும் இருக்க!” கூறியபடி உள்நுழைந்த வள்ளியம்மாள். காயத்ரியின் கரங்களை இறுகப் பிடித்தவண்ணம் நாளாப்பக்கமும் நோட்டமிட்டாள். புரியாதவளாய் குழம்பிப் போன காயத்ரி,

“பாட்டி ஏன் இப்படி திடீரென்று வந்து என்னைப் பிடிச்சீங்க!? என்னத்த தேடுறீங்க!?

“நீ யாரோட இப்ப கதைச்சனி...?” கோபமான குரலில் வள்ளியம்மாள்.

“ஓ! பட்டி நீயும் மத்தவங்கள மாதிரி என்னைத் தப்பாப்புரிஞ்சிட்டியா? எதையுமே நம்பக்கூடாது தீரவிசாரித்து ஒரு முடிவுக்கு வரணும் என்று நீங்கதான் நான் சின்னனா இருக்கப்போ சொல்லுவீங்க!

ஆனா... ஆனா நீங்களே இப்படி நடந்துக்கிறப்போ நான் என்ன சொல்லுறது பாட்டி? மத்தவங்கதான் ஏதோ எல்லாம் பேசறாங்க என்டா நீங்களுமா..?”

தளர்ந்தகுரலில் காயத்ரி.

அப்போதுதான் அவள் கண்ணாடி முன்னின்று தனக்குத் தானே அலங்கரித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் என்பதை ஆங்காங்கே சிதறிக்கிடந்த ஆடைகள் வள்ளியம்மாளிற்கு புரியவைத்தன.

‘நான் எவ்வளவுபெரிய தப்புசெய்து விட்டேன்!’ வள்ளியம்மாளின் மனம் குற்ற உணர்வால் தலைகுனிந்தது.

‘கண்ணால் பார்ப்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீரவிசாரித்தறிவதே மெய்....!’ ●

# கதை எழுதுவது எப்படி?

“வணக்கம்”

“வாங்க!”

“பிரபல எழுத்தாளரான நீங்கள், கதை எழுதுவது எப்படி என்று விபரமாய்ச் சொல்ல வேண்டும்”.

“நீளமான வர்ணனைகள் தவிர்க்கணுமாமே?”

“ம்”

“கதை முடிவில எதிர்பாராத முடிவு இருக்கணுமாமே?”



“சரி”

“உண்மைச் சம்பவத்தை மனதில் வாங்கி எழுதணுமாமே?”

“ம்”

“நீட்டிக்கொண்டே போகாமல் நெத்தியடியாய் இருக்கணும் என்று சொல்கிறார்களே?”

“ம்”

“அதிக கதாபாத்திரங்கள் கூடாதாமே?”

“ம்”

**-வசந்தி-**

“ம்”

“ஒரு தடவை எழுதியதை பல தடவை படிச்சு மெருகூட்டணுமாமே?”

“ம்”

“மிகவும் நன்றி. சிறுகதை எழுதுவது எப்படி? என்று மிகவும் கச்சிதமாய், மனதில் பதியும்படி வழிகாட்டியதற்கு நன்றி.” ●



# இலக்கிய நயம்

# அப்பாவின் மாணாக்கன்!

தருவது முழடில்யன்

வீட்டு வாசலில் அமர்ந்திருந்தாள் கௌசல்யா. மாலை வெயில் உருகி வழிந்து கொண்டிருந்தது. வானம் ஒளிக் கடலாக விரிந்து கிடந்தது. தன் இறப்பைக் கூட எண்ணற்ற ஜாலங்களோடும் வெளிச்ச வேடிக்கைகளோடும் கொண்டாடி மறைந்து கொண்டிருக்கும் சூரியன்.

சொல்லில் அடங்காத அந்தப் பேரழகைத் தொடும் பொருட்டு, சூரியனை நோக்கிப் பறக்கும் பறவைபோலப் பறந்து செல்ல ஆசைப்பட்டாள் கௌசல்யா. உடலின் பாரம் சோர்வைத் தந்தது. அந்தி நேர ஒளித் தந்திகளில் காற்று மீட்டும் பண்ணைக் கேட்டபடி அமர்ந்திருந்தாள். தாங்க முடியாத அளவுக்கு இன்பத்தினால் நிரம்பி விட்ட மனதைச் சுமக்கும் வலுவின்றி உடல் தளும்பி அசைவதாகப் பட்டது. மனமுடைந்து அழுதுவிடப் போகிறோமோ என்று அஞ்சினாள்.

"என்ன, கந்தர்வர்களுடனா உரையாடிக் கொண்டிருக்கிறீர்கள்?" குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

புன்முறுவலோடு ஆரூரன் நின்றுகொண்டிருந்தான்.

"தனிமையிலிருக்கும் பெண்களைத் தேடி கந்தர்வர்கள் வருவதுண்டாம். பூத்த மலர்களின் வாசனையில் ஏறி அவர்கள் வருவார்களாம்... உங்கள் முகத்தைப் பார்த்தால் நம் கண்ணுக்குத் தெரியாத யாருடனோ இன்பமாக உரையாடிக் கொண்டிருந்ததைப் போலத் தோன்றியது. அதுதான் கேட்டேன்..... அப்பா இல்லையா?"

மனதுக்குள் பொத்திவைத்த இரகசியத்தை யாரோ திறந்து பார்த்து விட்ட படபடப்பில், விழிகள் துடிக்கச் சடாரென்று எழுந்து நின்றுகொண்டு, "வாருங்கள்!" என்றாள்.

கதவைத் திறந்து உள்ளே சென்று. "வாருங்கள்!" என்று அவனை மீண்டும் அழைத்தாள்.

"அப்பா இல்லையா?" கேட்டபடி தயக்கத்தோடு வாசலில் நின்றான்.

"வந்துவிடுவார், உள்ளே வந்து இருங்களேன்..."

உள்ளே நுழைகையிலேயே வீட்டின் சுத்தமும், பொருட்கள் இருந்த ஒழுங்கும் அவனைக் கவர்ந்தது. அவள் காட்டிய கதிரையில் அமர்ந்துகொண்டான்.

அவன் பார்வையில் நிலவிய திருப்தி அவளுக்குச் சந்தோஷமளித்தது.

"எங்கள் பாடசாலைக்குப் புதிதாக வந்திருக்கிறீர்கள் இல்லையா, இதற்கு முன்பு எங்கு படித்தீர்கள்?"

"கிராமத்தில், இங்கிருந்து முப்பத்தெட்டு மைல் தொலைவிலிருக்கிறது என் கிராமம்!"

"பெற்றோரோடு வந்துவிட்டீர்களா, இல்லை தனியாகவா...?"

"தனியாகத்தான். இங்கே பக்கத்தில்தான் அறை ஒன்று எடுத்துத் தங்கியிருக்கிறேன். படிக்க வேண்டும் என்ற ஆசையில் வந்துவிட்டேன். அம்மாவை, தங்கையை நினைத்தால் தொடர்ந்து இங்கே தங்கிப் படித்து முடிப்பேனா என்று சந்தேகமாக இருக்கிறது!"

"கொஞ்ச நாட்களுக்குப் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து பழகிவிட்டால் சரியாகிவிடும்."

"ம்... முயற்சிக்க வேண்டும்... அப்பா ரொம்ப தூரம் போயிருக்கிறாரா?" தனிமையில் அவளுடனிருக்கும் சங்கடத்தை உணர்ந்தான் ஆரூரன்.

"பக்கத்தில்தான். வந்துவிடுவார். என்னுடன் தனியே இருப்பது மனதில் அந்தரமாக இருக்கிறதா?" கேட்டுவிட்டுச் சிரித்தாள் கௌசல்யா.

அவள் சிரிப்பு ஆரூரனை அமைதிப்படுத்தியது. இறுக்கமான மனநிலையிலிருந்து மீண்டான்.

"பாவனைகளின்றி இயல்பாக நடந்துகொண்டால் மனதுக்குச் சங்கடம் எதுவுமில்லை!" என்று தொடர்ந்து சொன்னாள்.

ஆரூரன் திடுக்கிட்டவன் போல அவளைப் பார்த்தான்.

"பாவனைகளில்லாமல் நமது வாழ்க்கையில் இருக்க முடியுமா? அப்பாவிடம் பழகுவதைப் போல் உங்களிடம், உங்களிடம் நடந்துகொள்வதைப் போல் சகோதரியிடம். சகோதரியிடம் போல நண்பனிடம்.... நாம் நடந்துகொள்ளும் முறை வேறுபட்டுத்தானே இருக்கிறது."

"அப்போ, அந்தந்த இடங்களுக்கேற்றபடி நம்மைப் பொருத்திக் கொண்டு நடிப்பதுதானா..... எல்லாமே நடிப்புத்தானா?"

"எல்லா உறவுகளுக்குமென்று அதற்கான எல்லைகள் உண்டு. அதை அங்கீகரித்துவிட்டால் பிரச்சினை இல்லை.... இயல்பு கெட வேண்டியதில்லை."

"என்னால் நடிக்க முடியாது!" என்று சொன்னவள், "பொறுங்கள் வருகிறேன்," என்று உள்ளே போனாள். கையில் தேனீரோடு திரும்பி வந்தாள்.

தேனீரை வாங்கிப் பருகிக் கொண்டே, "நாடக மேடை ஒன்றில்தானே நாமெல்லோரும் இருக்கின்றோம்," என்றான் ஆரூரன்.

"நான் நானாகத்தான் இருப்பேன்!"

ஆரூரன் மெல்லச் சிரித்தபடியே கூறினான் "அது கூட இயல்பானதல்ல."

"அப்போ ஆளுக்குத் தகுந்தபடி வேஷம் போடுவதுதான் இயல்பா?"

"இல்லை. பாவனைகளின்றி இயல்பாக இருத்தல் சுலபமில்லை என்கிறேன். அதற்கு இமய மலை செல்ல வேண்டும் அல்லது குழந்தையாகி விட வேண்டும்."

"நான் குழந்தையாகவே இருந்துவிட்டுப் போகிறேன்......"

"குழந்தை நிலைக்குத் திரும்புதல் எல்லோராலும் முடியுமா? மனதின் அந்தந்த நேர உந்துதல்களை நேர்மையுடன் பின்பற்றுகிற குழந்தைகள்......"

"அப்போ, நான் வேஷதாரியா?" கௌசல்யா குரலில் சற்று சூடு பறந்தது.

அவன் சிரித்துவிட்டுச் சொன்னான், "என்னிடம் எந்த நடிப்புமில்லை என்பது ஒன்றில் அறியாமையாக இருக்க வேண்டும் அல்லது...... இதைச் சொல்வதற்கு மன்னியுங்கள். இத்தகைய திடம், மனதின் அகங்காரத்திலிருந்து பிறப்பது!"

"வேஷம் போடுவதை விட என்னிடம் அகங்காரம் இருப்பது நல்லதுதான்."

"அகந்தை இருப்பது முற்றிலும் கெட்ட குணம் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், அகங்காரமிருந்தால் வாழ்க்கையின் அடிகள் மிக மிக வலிக்கும். எங்கள் துக்கங்களிற்குப் பின்னால் எப்போதும் அகங்காரம் இருக்கிறது."

கௌசல்யா மௌனமானாள். அவனையே சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "அப்பா வருகிறபோது வரட்டும். வாருங்கள், சமையல் எப்போதோ முடித்து விட்டேன். சாப்பிட்டுவிட்டுக் காத்திருக்கலாம்," என்றபடி பதிலை எதிர்பாராமல் உள்ளே போனாள்.

அடுத்த நாள். சிநேகிதி கேட்டாள், "புதிதாய் வேற்றூரிலிருந்து வந்தவனுக்கு சாப்பாடெல்லாம் போட்டனுப்பினாயாமே, என்ன சங்கதி?"

"போடீ, அவனிடம் நீ பேசிப் பார்த்திருக்க வேண்டும். அவன் எத்தனை விஷயம் தெரிந்தவனாக இருக்கிறான். எதிராளியின் மனம் நோகாமல் தன் கருத்தைப் புலப்படுத்தி விடுகிற அந்தப் பேச்சுவன்மை யாருக்கு வரும்? பேச்சுக் கலையில் அதிசிறந்த, அப்பாவின் மாணாக்கன் அவன். கற்பதற்காக ஊர்விட்டு ஊர் வந்திருக்கிறான். நாம் விருந்தளித்துப் போற்ற வேண்டியவன் தான் அவன்."

**அன்னாய்! இவன் ஓர் இளம் மாணாக்கன்**
**தன் ஊர் மன்றத்து என்னன் கொல்லோ**
**இரந்தூண் நிரம்பா மேனியொடு**
**விருந்தின் ஊரும் பெரும் செம்மலனே.**

(குறுந்தொகை : 33)

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## ஸ்போர்ட்ஸ்

## சூதாட்ட அறிக்கை சமர்ப்பிப்பு



கிரிக்கெட் சூதாட்டம் குறித்த 400 பக்க அறிக்கையை இந்திய மத்திய புலனாய்வுத் துறையின் சிறப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளிடம் சமீபத்தில் சமர்ப்பித்தார் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் ஐ.எஸ்.பிந்த்ரா.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய பிந்த்ரா, அறிக்கையைச் சமர்ப்பித்த பின் கூறியதாவது;

"ஷார்ஜாதான் கிரிக்கெட் சூதாட்ட மையம். அதை என்னால் உறுதியாகக் கூற முடியும். டொரண்டோ, ஷார்ஜா, கோலாலம்பூர் போட்டிகளின் போதுதான் சூதாட்டம் காளான் போல் வளர்ந்தது.

சூதாட்டத்தில் கபில்தேவிற்கு தொடர்புள்ளது என்பதைத் தெரிவிக்க மனோஜ் பிரபாகரும் சென்றிருந்தார்.

பிந்த்ரா தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பிய கடிதத்தில் டொரண்டோ, ஷார்ஜா போட்டிகளை 'சூதாட்டப் போட்டிகள்' என்று வர்ணித்துள்ளார்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை துணைத் தலைவர் கமல் மொரார்க்கா, இணைச்செயலர் ஜோதி பாஜ்பாய் அளித்த பேட்டியில்,

"இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் தமக்கு ஆதரவு குறைந்து வருவதால் ஏற்பட்ட விரக்தியால் தான் பிந்த்ரா சூதாட்டம் பற்றிய குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருகிறார்.

டொரண்டோ, ஷார்ஜா போட்டிகளில் சூதாட்டம் நடந்தது என்றால், 1993 முதல் 1996 வரை பிந்த்ரா சபைத்தலைவராக இருந்தபோது தான் இப்போட்டிகள் நடந்தன. ஏன் அவரால் அதைத் தடுக்க முடியவில்லை?" என்றும் கூறியுள்ளனர்.

## மனைவியை அடித்த கிரிக்கெட் வீரர் கைது

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிவரும் இந்திய உத்தரப்பிரதேச மாநில கிரிக்கெட் அணியின் கப்டனுமான ஞானேந்திர பாண்டே, தமது மனைவியைக் கண்மூடித்தனமாக அடித்ததால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில நாட்களாக இவர் தமது மனைவி பிரதீபாவை அடித்து வந்ததாகக் கூறப்படுகிறது. இது குறித்து தகவல் வந்ததும், பிரதீபாவின் தந்தை கடந்த 13ம் திகதி பிரதீபாவை மருத்துவமனையில் சேர்த்தார். அவரது உடல் நிலையும் கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரதீபாவின் தந்தை கொடுத்த புகாரின் அடிப்படையிலேயே பாண்டே கைது செய்யப்பட்டுள்ளார்.

பாண்டேயின் குடும்ப அங்கத்தவர்கள் யாராவது பிரதீபாவுக்கு தொல்லை கொடுத்துள்ளனரா? எனப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ரொபின் சிங் காயம்

ஆசியக் கோப்பைக் கிரிகெட் போட்டியில் விளையாடுவதற்காக புனேயில் நடைபெற்ற பயிற்சியின்போது இந்திய வீரர் ரொபின் சிங் காயமடைந்துள்ளார்.

கடந்த 16ம் திகதி பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, மற்றொரு தமிழ் நாட்டு வீரரான எஸ். ஶ்ரீராமுடன் மோதிக் கொண்டார். அதில் ரொபின் சிங்கின் முன் தலையில் காயம் ஏற்பட்டது. 5 தையல்கள் போடப்பட்டன. ஶ்ரீராம் இலேசான சிராய்ப்புக் காயத்துடன் தப்பிக் கொண்டார்.

**★ 'சந்தித்த வேளை' படத்தில் 'சிலோனு சிங்களப் பெண்ணே....' பாட்டில் வரும் 'வளரும் பிள்ளை இவன் அப்படியே சாப்பிடுவேன்' என்ற பல்லவி வரியின் அர்த்தம் என்ன? (தற்போது இது எங்கள் குடும்பப் பிரச்சனை, நாட்டுப் பிரச்சனையாகும் முன் தயவு செய்து விடைதாருங்கள்)**

சுகந்தினி, குருணாகலை.

உங்கள் தமிழுணர்விற்கு முதலில் பிடியுங்கள் என் பாராட்டை. இது போன்ற பாடல்களில் எல்லாம் தமிழ் வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் உங்கள் திறமை, ஒரு தொல்பொருள் ஆய்வாளரின் பணிக்கு நிகரானது. எனவே உங்கள் குடும்பப் பிரச்சனையைத் தீர்த்துவைக்க வேண்டியது என் கடமை. அந்தப் பல்லவியில் வருவது ஹோர்லிக்ஸ் விளம்பரத்தில் வரும் ஒரு பிரபலமான வரி.

●●

**★ ஒருவரை பற்றி புரியாமல் சந்தேகப்படுபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? (நான் எத்தனையோ கேள்விகளை எழுதியனுப்பியும் பதில் தரவில்லை. இதுவும் குப்பைக் கூடைக்குள்...)**

ஆர்.மணிவண்ணன், பூண்டுலோயா.

உங்கள் கேள்விக்கு முன் வந்த தபாலட்டைகளைப் பார்த்து முடிப்பதற்குள், அவசரப்பட்டு புரியாமல் சந்தேகப்படுகிறீர்களே..... மணிவண்ணன்.

●●

**★ காதல் அழகா? காதல் பெண் அழகா?**

எச்.எம்.நிபாஜி, திருகோணமலை.

கம்பன் மகனிடம் தான் கேட்க வேண்டும்.

●●

**★ தினமுரசு வாரமலரில் உங்களுக்குப் பிடித்த பகுதி எது?**

எட்வேட் நிஷாந்தன், பெரிய நீலாவணை.

ஹிஹி....ஹி.... எனக்குத் தற்பெருமை பிடிக்காது. அப்படியான சமயங்களில் பேசாதிருந்து விடுவேன்.

●●

**★ பாடகி கல்யாணிமேனன், டைரக்டர் ராஜீவ் மேனன் இருவரும் உறவினர்களா?**

நிலாம், தாராபுரம்.

தாயும் மகனும்!

●●

**★ வானொலி தொலைக்காட்சிகளுக்கும் பத்திரிகைகளுக்குமிடையே என்ன சச்சரவு? அண்மையில் அரச தொலைக் காட்சியிலும் இதுபற்றிப் பிரஸ்தாபித்தார்கள் பார்த்தீர்களா?**

வி.அனுஷா, கொழும்பு 15.

மார்க் ட்வைன் சொன்னதுபோல், எல்லோரும் விமர்சனம் வேண்டும் என்கிறார்கள். ஆனால் பாராட்டைத்தான் எதிர்பார்க்கிறார்கள். அதனால்தான் 'குறைகளைத் தயங்காமல் சுட்டிக்காட்டுங்கள். திருந்துவதற்குத் துடிக்கிறோம், என்பது போன்ற பெரும்போக்கான பேச்சைக் கேட்டு, யாராவது உண்மையான குறைகளைச் சொல்லிவிட்டால் இவர்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. இவர்கள் எதிர்பார்க்கிற குறைகளாவன.... 'உங்கள் அரைமணிநேர நிகழ்ச்சி அற்புதம்! மேலும் அரைமணித்தியாலம் நீடித்திருக்கக் கூடாதா என்பதுதான் குறையாக இருந்தது....', 'ஆஹா அருமையான நாடகம் ஒன்றை உங்கள் தயாரிப்பாளர்கள் தந்திருந்தார்கள். எல்லோரும் பார்க்கக் கூடிய இரவு நேரத்தில் ஒளிபரப்பாததுதான் குறை...', 'உங்கள் நிகழ்ச்சிகள் எல்லாம் படு சூப்பர்! இவ்வளவு தரமான நிகழ்ச்சிகளைத் தரும் தமிழ்ப் பிரிவுக்கு ஒதுக்கப்படும் நேரம் போதாதென்பதே ஒரேயொரு குறை....' போன்றவைதான் இவர்கள் திருந்துவதற்காகக் கேட்கத் துடிக்கும் குறைகள்.

இத்தனைக்கும் "தமிழுக்கென்று ஒதுக்கிய நேரத்தையும் முழுமையாகப் பயன்படுத்துகிறீர்களில்லையே... தமிழ் நிகழ்ச்சிகள் தரமாக இல்லையே?" என்று அரச தொலைக்காட்சியினரிடம் அமைச்சர் கேட்டதற்கு, "தயாரிப்பாளர்கள் இல்லாததுதான் குறை" என்றார்களாம். சரி தமிழ்த் தயாரிப்பாளர்கள் சிலரைப் புதிதாக எடுக்கலாம் என்று நடவடிக்கைகளை ஆரம்பித்தால், "இங்கே புதிதாக ஆட்கள் தேவையில்லை நாங்களே எல்லாம் செய்வோம்" என்று போர்க்கொடி உயர்த்துகிறார்களாம்.

'புதிதாக யாரும் வந்து எங்களை விட நிகழ்ச்சிகளை நன்றாகச் செய்ய விடமாட்டோம். நாங்களும் சொதப்பல் நிகழ்ச்சிகளைத் தருவதிலிருந்து பின்வாங்க மாட்டோம்.... நாங்களும் பல்வேறு சிரமங்களைப் பட்டுக்கொண்டு நேயர்கள் பொறுமையையும் சோதிக்காமல் விடமாட்டோம்.....' ஹே வாகினி!

●●

**★ சக்தி ரி.வி.யில் சனிக்கிழமைகளில் நடைபெறும் 'இளையகானம்' நிகழ்ச்சியில் அறிவிப்பாளராக கடமையாற்றும் மேதா ரகுநாத் திரைப்படங்களிலும் நடித்துள்ளார் என்று சிநேகிதிகள் சொல்கிறார்கள். உண்மையா சிந்தியா?**

சிவபாலன் அகிலா, மண்டூர்.

என்ன அகிலா, இவ்வளவு அப்பாவியாக இருக்கிறீர்கள்? உடனடியாக 'அலைபாயுதே' படத்தைச் சென்று பார்த்து விடுங்கள்!

●●

**★ நானும் எனது நண்பனும் எல்லா விஷயத்திலும் ஒருமித்த கருத்தையே கொண்டிருக்கிறோம். எங்களுக்குள் எந்த சண்டையும் வருவதில்லை. எங்கள் நட்புக்கு எடுத்துக் காட்டாக சிந்தியா எதைக் கூறுவீர்கள்?**

டி.பிரசாந்தன், மட்டக்களப்பு.

உங்கள் நட்பு உயர்ந்ததுதான் சந்தேகமில்லை. இன்னொரு- விஷயமும் உண்மை. உங்கள் இருவரிலும் யாரோ ஒருவர் மட்டும்தான் சிந்தனை செய்கிறீர்கள்.

●●

**★ காதல் எங்கே ஆரம்பமாகின்றது, எங்கே முடிவடைகின்றது?**

கே.சுதாகர், அக்கரைப்பற்று 09.

காதல் கடவுள் எனப்படும் மன்மதனைச் சொல்லுகையில் பாரதி பாடுகிறான்: 'மனதிலே தோன்றுவோன் மனமுண்ணுவோன்....' மன்மதக் கூத்தின் ஆரம்பம் முடிவு எல்லாம் நம் மனதினுள்ளேதான். கண்களும் மற்றும் நான்கு புலன்களும் வெறும் கருவிகள்தான்.

●●

**★ ஆசியக் கோப்பைப் போட்டிக்கு அரவிந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளாரே?**

எம்.திவ்யரூபன், வவுனியா.

அதுமட்டுமில்லை. ஜெயசூரியவோடு அவரை ஆரம்பத் துடுப்பாட்டக்காரராகக் களமிறக்கும் வட்மோர் அவர்களின் உத்தியும் அதிரடியான மாற்றத்தைத் தரலாம் பார்ப்போம்!

●●



**★ சிந்தியா! ஏ.ஆர்.ரஹ்மான் முதன் முதலில் முழுமையாகப் பாடியபாடல் என்ன? படம் என்ன?**

இரா.சதீஸ், பொகவந்தலாவ.

அந்த அரபிக்கடலோரம். படம் 'பம்பாய்'.

●●

**★ சிந்தியா! ஒரு நாள் இலங்கையின் ஜனாதிபதியாக நீங்கள் ஆகினால், முதல் வேலையாக என்ன செவீர்கள்?**

எம்.மூர்த்தி, கம்மடுவ.

பதவிப்பிரமாணம்.

●●

**★ பெண்களை-விண்மீன் கண்கள், வெண்டைக்காய் விரல்கள், எலுமிச்சை உதடுகள் என்று பலப் பலவாக வர்ணிக்கிறார்களே.... ஏன் ஆண்களை வர்ணிப்பதில்லை?**

ந.கனகலிங்கம், பொகவந்தலாவ.

பெண் கவிஞர்கள் மிகக் குறைவு. இருக்கும் சிலரும் மனதைத் திறந்து பேச சமூகம் விடுவதில்லை.

●●

**★ ஒரு பெண்ணால் ஏமாற்றப்பட்ட ஆண், வேறு ஒரு பெண்ணை மணந்து மனநிம்மதியுடன் வாழ முடியாது என்பது என் கருத்து. சிந்தியா என்ன கருதுகிறீர்கள்?**

மாணிக்கம் வசந்தன், திருகோணமலை.

அதே பெண்ணை மணந்திருந்தாலும் மனநிம்மதி இருந்திருக்காதென்று.

போகட்டும் வசந்தன். காலம் எல்லாக் காயங்களையும் ஆற்றிவிடும். நீங்களும் கல்யாணம் செய்துகொள்வீர்கள். சந்தோஷமாக வாழ்க!

விக்கிரமாதித்தன் தேவேந்திரனிடம் ஆயிரமாண்டு காலம் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரியும் வரத்தைப் பெற்று வந்தான். ஆனால் தனது இணைபிரியாத சகோதரனும், மதியூக மந்திரியுமான பட்டி தான் வாழும் காலம் வரை உயிர் வாழ முடியாதே என்று விக்கிரமாதித்தன் வருந்தினான்.

விக்கிரமாதித்தனின் துயரத்தைக் கண்ட பட்டி "அண்ணா! வருந்த வேண்டாம். நாம் வணங்கும் காளிகாம்பாள் நம்மைக் கைவிட மாட்டாள். அவளிடமே நான் சென்று வரம் பெற்று வரப் போகிறேன். விடை கொடுங்கள்!" என்று கூறிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

நேராக உஜ்ஜைனி மாகாளி உறையும் கோவிலுக்குச் சென்றான். குளத்தில் குளித்து விட்டு நேராக அம்மன் சந்நிதி முன் போய் தியானத்தில் அமர்ந்து கொண்டான்.

காளிகாம்பாள் நகர்வலம் சென்றுவிட்டு அப்போதுதான் திரும்பி வந்து கொண்டிருந்தாள். தன் பக்தனான பட்டி தியானத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு அவன் முன்னே போய் நின்று "மகனே பட்டி! இதோ என்னைப் பார்! உன் அன்னைதான் இங்கு வந்திருக்கிறேன். என்னைப்பார்!" என்றாள்.

கண்களைத் திறந்து பார்த்த பட்டி, தன் முன் காளிகாம்பாளே காட்சி தந்து கொண்டிருப்பதைக் கண்டான். "தாயே!" என்று சுத்தியவண்ணம் காளிகாம்பாளின் தாள்களில் வீழ்ந்து வணங்கினான். "தாயே! எனது அண்ணன் விக்கிரமாதித்த மாமன்னன் தேவலோகம் போய் இந்திரனிடம் ஆயிரம் ஆண்டுகள் உயிருடன் இருந்து அரசாளும் உரிமையை வரமாக வாங்கி வந்துள்ளான். தேவி, நான் இரண்டாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்வதற்கு வரம் தந்தருளவேண்டுகிறேன்!" என்று கோரினான்.

### "அண்ணன் தலையைக் கொய்துவா!"

"மகனே பட்டி! நீ இரண்டாயிரம் ஆண்டுகள் உயிருடன் வாழ வேண்டுமானால், உன் அண்ணன் விக்கிரமாதித்தனுடைய தலையை எனக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்து தரவேண்டும்!" என்றாள் காளிகாம்பாள்.

"அவ்வாறே எனது அண்ணனின் தலையை எடுத்து வந்து உன் காலடியில் சமர்ப்பிக்கிறேன் தேவி!" என்று கூறிய பட்டி உடனடியாக விக்கிரமாதித்தனின் அரண்மனைக்குச் சென்றான். அங்கு படுத்திருந்த விக்கிரமாதித்தனை எழுப்பினான். "அண்ணா! உன்தலை எனக்கு அவசியம் தேவைப்படுகிறது. தருவாயா?" என்று கேட்டான்.

"தம்பி, நீ விரும்பிக்கேட்ட எப்பொருளையாவது நான் தராமல் விட்டிருக்கிறேனா? நீயே வெட்டி எடுத்தக்கொள்!" என்று சற்றும் தயங்கமின்றி கூறினான் விக்கிரமாதித்தன்.

பட்டி தனது உடைவாளை உருவி எடுத்து விக்கிரமாதித்தனின் தலையைச் சீவி எடுத்தான். அத்தலையை ஒரு தங்கத் தாம்பாளத்தில் வைத்து எடுத்துக் கொண்டு காளிகாம்பாள் கோவிலை அடைந்தான். காளிகாம்பாள் சந்நிதியில் விக்கிரமாதித்தனின் தலையை வைத்துவிட்டு வணங்கி நின்றான்.

காளிகாம்பாள் பிரத்தியட்சமாகத் தோன்றினாள். பட்டி, "தாயே, கோரியபடி விக்கிரமாதித்த மன்னனின் தலையை இதோ கொண்டு வந்துவிட்டேன்!" என்றான். காளிகாம்பாள் புன்முறுவல் பூத்தவளாக, "பட்டி, உன் பக்தியை மெச்சினேன். நீ இரண்டாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ வரமருளுகிறேன். உன் அண்ணன் ஆட்சி புரியும் காலம் வரை அவனுக்குத்துணையாக நீயும் இருந்து வருவாயாக!" என்று கூறினாள்.

### பொருளற்ற வரம்

காளிகாம்பாள் இவ்வாறு வரமருளியதும் பட்டி கலகலவென்று ஏளனமாகச் சிரித்தான். காளிகாம்பாள் சற்றுக்கடுமையாக, "ஏன் சிரிக்கிறாய்? நான் கொடுத்த வரம் பொய்யாகும் என்றா கருதுகிறாய்?" என்றாள்.

பட்டி "தேவி, கோபம் கொள்ள வேண்டாம்! அண்ணன் விக்கிரமாதித்தன் இந்திரனிடம் ஆயிரம் ஆண்டுகள் சிம்மாசனத்தில் இருந்து அரசாளுவான் என்று பெற்று வந்த வரமே, வாங்கிய ஒரிரு நாட்களிலேயே பொய்த்துப் போய் விட்டது. இதோ என் அண்ணனை நானே வெட்டிக் கொன்று விட்டேன். அவ்வாறிருக்க, இறந்து போன என் அண்ணனுடன் நான் இனிமேல் இரண்டாயிரம் ஆண்டுகள் எவ்வாறு இணைந்து வாழப்போகிறேன்! இதனை நினைத்ததும் எனக்குச் சிரிப்பு வந்தது தேவி!" என வினயமாகக் கூறினாள்.

"பட்டி! உன் புத்தியை மெச்சினேன். விக்கிரமாதித்தனுக்கு ஏற்ற மதியூக மந்திரி தான் நீ என்பதை நிரூபித்துவிட்டாய், என்னுடைய வரத்தின் மகிமையைப்பற்றி ஐயுற வேண்டாம். உனக்கு வேறு என்ன வரம் வேண்டும் என்று கேள்!" என்று காளிகாம்பாள் பட்டியிடம் கேட்டாள்.

## காடாறு மாதம் நாடாறு மாதம்!

"தாயே! என் சகோதரன் உயிருடன் இருந்தால் அல்லவா நான் அவனுடைய அமைச்சராக இருந்து ஆட்சி நடத்த முடியும். ஆகவே என் அண்ணன் மீண்டும் உயிர் பெற்று வாழ அனுக்கிரகம் பண்ண வேண்டும்!" என்று கேட்டான்.

மனம் மகிழ்ந்த காளிகாதேவி புனித நீர்ப் பேழை ஒன்றை பட்டியிடம் கொடுத்து, "உன் அண்ணனின் தலையை எடுத்துச் சென்று அவனுடைய உடலுடன் ஒன்று சேர்ந்து, இப்புனித நீரைத் தெளித்தால் அவன் உயிர் பெற்றெழுவான்!" இவ்வாறு வரமளித்துவிட்டு அம்பாள் சந்நிதியுள் மறைந்தாள்.

பட்டி குதூகலமடைந்தான். உடனடியாக தன் அண்ணன் விக்கிரமாதித்தனின் தலையை எடுத்துக் கொண்டு வேகமாக அரண்மனை சென்றடைந்தான். விக்கிரமாதித்தனின் தலையை உடலுடன் இணைத்து விட்டு புனித நீரை உடல் மீது தெளித்தான். தூக்கத்திலிருந்து எழுபவன் போல் விக்கிரமாதித்தன் எழுந்தான். இருவரும் ஆரத்தழுவிக் கொண்டார்கள்.

"தம்பி! பட்டி, என்னுடைய தலையைக் கொய்யவேண்டும் என்று கேட்டாயே! ஏன் இன்னும் அதனைக் கொய்யவில்லை?" என்று கேட்டான்.

"அண்ணா, தங்கள் தலையை நான் கொய்தேன். காளிகாம்பாளுக்கு அத்தலையைக் காணிக்கையாக்கினேன். மகிழ்ச்சியடைந்த காளிகாம்பாள் எனக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ வரம் அருளினாள். அந்த இரண்டாயிரம் ஆண்டும் உனக்கு மந்திரியாகவே இருந்து சேவை புரிவதற்கும் அவள் வரம் தந்தாள்!" என்று பட்டி கூறினான்.

### பட்டியின் திட்டம்

விக்கிரமாதித்தன், "என்ன தம்பி பட்டி, நான் ஆயிரம் ஆண்டுகள் மட்டும் தானே உயிர்வாழ்வேன், அப்படியானால், நீ எவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகள் உயிருடன் எனக்கு அமைச்சனாக இருக்க முடியும்?" என்று கேட்டான்.

பட்டி தனது திட்டத்தை விளக்கினான்.

"அண்ணா! இந்திரனின் வரத்தின்படி நீங்கள் ஆயிரம் ஆண்டுகள், இந்திரனே அளித்த சிம்மாசனத்தில் வீற்றிருந்து பரிபாலனம் செய்யபோகிறீர்கள்! நான் இரண்டாயிரம் ஆண்டு தங்கள் மந்திரியாக இருக்கப் போகிறேன்.

தங்கள் ஒரு வருடத்தில் ஆறு மாதங்கள் மட்டும் அரியணையில் அமர்ந்து ஆட்சி புரியுங்கள், ஆறு மாதங்கள் முடிந்ததும் நீங்கள் அரண்மனையை விட்டு வெளியேறி, காடுகளில் திரியவேண்டும். அவ்வாறு ஆறு மாதங்கள் முடிந்ததும் நாடுதிரும்புங்கள். இதே போல் நாடாறு மாதம் காடாறு மாதம் என்று பரிபாலனம் செய்தால் எப்படியும் நீங்கள் ஆயிரம் ஆண்டுகள் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிவீர்கள். இந்திரன் தந்த வரம் பொய்க்காது. எஞ்சிய ஆறுமாதங்கள்-ஒவ்வொருவருடமும் மொத்தம் ஆயிரம் வருடங்கள் உயிர்வாழப் போகிறீர்கள். ஆகவே நாம் இருவருமே இரண்டாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்ந்து விடுவோம்! இந்திரன் தந்த வரமும் காளிகாம்பாள் கொடுத்த வரமும் எத்தகைய தடையுமின்றி நிறைவேறும்!"

இவ்வாறு பட்டி அளித்த விளக்கத்தைக் கேட்ட விக்கிரமாதித்தன் தன் தம்பியின் புத்திசாலித்தனத்தை வெகுவாகப் பாராட்டினான். இந்த உடன்பாட்டுக்கு அமைய விக்கிரமாதித்தன் ஆறு-மாதங்கள் நல்லாட்சி புரிந்து விட்டு காடு செல்வார். அடுத்த ஆறுமாதங்களும் பட்டி அரசனுக்குரிய கடமைளை செவ்வனே நிறைவேற்றி சிறப்பான முறையில் அரச பரிபாலனம் செய்து வந்தான்.

சிம்மாசனத்தின் முதல் படிக்கட்டில் இருந்த விநோத ரஞ்சிதப் பதுமை போஜராஜனிடம் கதையைக் கூறி முடித்து விட்டு, "போஜ மன்னரே, இத்தகைய வீரதீரப் பாக்கிரமசாலியான விக்கிரமாதித்த மன்னனைப் போன்ற ஆற்றல் உம்மிடம் இருக்கிறதா?" என்று கேட்டது. அப்பதுமை கேட்ட கேள்விக்கு ஏற்ற பதிலைக் கூறமுடியாமல், போஜராஜன் படியிலிருந்து கீழே இறங்கினான்.

*(மன்னன் வருவான்...)*

# மன்னாதி மன்னன் 07



இராஜகுமாரன்

## கா.பூ.கந்தசாமிக்கு சளப்பி கந்தர் எழுதுவது

*கந்தசாமி அண்ண,*

ஊருக்குப் போனாப்பில ஒரு கிழம ஊட்ட நிண்டு போட்டன். ரவுணுக்குள்ள கிடந்தாலும், நாட்டுப்பக்கத்து ஆள்தானே அண்ண. நம்மட ஊர கண்ணில வைக் காட்டி, என்னவோ மாதிரி இரிக்கி. என்ர மூத்தவனும் லீவில வந்தாப்ப "பெற்றதாயும், புறந்த பொன்னாடும்" எண்டு படிச்சுக் காட்டினான். "நற்றவ வானில் நனி சிறந்தனவே" எண்டு பாட்ட முடிச்சுப் போட்டன் நான்.. ஓரத்தில நிண்ட சின்னவன் போடியும், வாயில கைவச்சித்தான். "இந்த சளப்பி கந்தர எந்தக் கோனாரும் உசுப்ப ஏலாது" எண்டுத்தான். சும்மா ஊட்டில கிடக்கக்க, நமக்குத்தான் என்ன வேல? கிடக்கிற புத்தகத்த, கித்தகத்த எடுத்துப் போட்டு வாசிக்கிறதானே!.

ரவுணுக்குள்ள எண்டாலும், நம்மட கல்லடிக்க தான் இருக்கன். ஊருக்கு கீருக்கு போற தெண்டாலும்-மெயினில இருந்தா பஸ்ஸ கிஸ்ச லேசாப் புடிச்சிக்கலாம் இலுவா?.



போன முறையுமெண்டா-வெட்டுகுள்ள சோராமாரியான மழ பேய்ஞ்சு போட்டு. எப்படியெண்டாலும்-அண்ண வெட்டுக்கொத்துக்குள்ள இந்த சனியன் மழ புடிச்சா அதப்போல அரிகண்டமுமில்ல. அரிச்சானியமுமில்ல. அதப்போல வெறுவாக்கிலங் கேடும் இல்ல. நானும் சோட்டையில கனக்க விதைச்சிப்போட்டன். இத ஆரிட்ட சொல்லற? இப்பயும் என்ன வெல்லாவெளியில கல்லடிப் புள்ளையாருக்கு தேங்கா அடிச்சி கும்பிட்டுப் போட்டுத்தான் பூமா தேவியில நெல்லையும் அள்ளி எறிஞ்சிருக்கன். என்ன கணகாட்டுப் படுத்திப் போடக் கூடாதெண்டு கும்பிட்டு குட்டித்து வந்திருக்கன். புள்ளையாரு அப்படிப் புழ செய்ய மாட்டாரென எண்ணுறன்.

வாய்க்காலில தண்ணியையும், கணக்குக்கு தந்திட்டானுகள் எண்டா, பாத்தித்து நிக்க பயிரும் எழும்பிரும்.

முதலெண்டா இந்தப் போடிக்கு, ஒரு கயிட்டமும் இல்ல, ஒருக்கா ரெண்டு தரம் வட்டைக்க போய்க்கீவாற. பயிரப்பச்சய பாத்தித்து வந்தா நல்லனெண்டு. இப்பல்லாம் றோட்டால போறவாற கயிட்டம். காடு, கரம்பயில செத்துக்கித்துக் கிடந்தாலும். பாப்பாருமில்ல. கேட்பாருமில்ல தொட்டுக் கிட்டுப் பார்த்தா தொந்தரவு பிசகு வந்திரும் எண்டுதானே நினைக்கினம். இப்ப இரிக்கிற 'நேச்சருக்கு' வட்டப் பக்கம் போக ஏலாம இரிக்கி.

கந்தசாமி அண்ண, போன போக மெண்டா இனி இல்லெண்ட நட்டம். மழையில நனைஞ்சி, தோஞ்சி என்ர நெல்லுமணியும் மடியாப் போயித்து. மடியில கிடந்த தல மயிரோட அள்ளித்துப் போயித்து. நெல்ல விக்கயும், ஏலாம போயித்து. யாபாரியும் வாங்கமாட்டன் எண்டு போட்டான். அரசாங்கமும் மடி எண்டு எடுக்கமாட்டான் எண்டுற்றாங்க. ஒரு மாதிரி குசமசக்குப் பண்ணி கொஞ்சத்த யாபாரிற்ற குடுத்துப் போட்டன். முதலப் போல எண்டா-அண்ணய்க்கு ரெண்டுக்கு நாலு மூட நெல்ல குத்தி அரிசி அனுப்பிப் போடுவன் இலுவா. இப்ப இத நினைக்கலாமா அண்ண?. ஊராப் பேராக் காணல்லயாம்-ராமநாதனாம் பேரு எண்ட மாதிரி இலுவா இரிக்கி.

இஞ்ச கிடக்கிற சில பேரு.இவன் போடிதானே இவனுக்கு என்ன தெரியுமெண்டு நினைக்கானுகள். எண்ட மம்பட்டிப்புடி ஆடிறத்தாலதான், இரண்டு அவுளாலும் சோறு தின்னுறானுகள்.

சும்மா-சொல்லக்கூடாது அண்ண-நம்மட தமிழ் ஆக்கள். வேலையும், வேலதான். படிப்பும்படிப்புத்தான்-எண்டு கனகருர சின்னவன் கதைச்சித்துப் போறான். ஓம் அண்ண நம்மட ஆக்கள் தானே அந்தக் காலத்தில அரசாங்கத்தையும் கொண்டு நடத்தின. இத நாம அயத்துப் போகக்கூடா. இராமநாதன் துரையும் இங்கிலாந்து தேசத் துக்குப் போய் வெள்ளக்காரனோட எல்லாருக்குமாக பேசின இலுவா?. இப்பயும் அண்ண நம்மட புள்ளயள் படிப்பில சரியான கெட்டிக்காரர்தானே. இந்த முறையும் புள்ளயள் சோதினையில நல்லா பாஸ் பண்ணினதாம் எண்டு-சரியான கெம்பளிக்கமா இரிக்கினம் தாய் தகப்பன்.

இஞ்சயும் என்ன. தொண்டர் ஆசிரியர் போராட்டம், விபுலானந்தச் சாமிர பள்ளியில போராட்டம் எண்டு முடிஞ்ச பாடில்ல. தொண்டர் ஆசிரியருக்கு கொஞ்சப் பேருக்கு 'குடுக்கிறதாம்' எண்டு கத அடிபடுது. கதைக்கிறவன் கதைச்சா குடுக்கிறதுல என்ன குறைச்சல் இருக்கி எண்டு சொன்ன நான். இந்த விபுலானந்தச்சாமிர பள்ளியில தான் கனக்க நாளாக புள்ளயள் படிக்கப் போகாம கிடக்குதுகள். சும்மா அப்புச்சுப்பான காரியமல்ல. எல்லாரும் பாத்துக் கேட்டுப் போட்டு, இப்ப சும்மா உட்டிட்டினம். அதுகள அவயளும் நல்லா சலித்த பருவம். இப்ப நம்மட ஊர் மனையிலயும் மூப்பன், மூத்தான் இல்லாத கூத்துத்தானே நடக்குது. இந்தப் புள்ளயள் புழைச்சிப் போக வேணும் இலுவா? படிக்கிற புள்ளியள் எத்தன நாளைக்கு அண்ண! அங்க குந்தி, இஞ்ச குந்தி சீவியம் கடத்திற. விபுலானந்தச் சாமிர பள்ளியல சங்கீதம் படிக்கிற புள்ளயளும் குளறுதுகள். படிச்சிவெளிக்கிட்ட புள்ளயளும் குளறுதுகள். மட்டக்களப்பில இதுகளப்பாத்து மீனும் பாடுதில்லையாம். அதுவும் குளறுதாம். வாழைச்சேனையால கண்டுமணிப் போடியும் சளப்பியர வந்து பாதித்துக் போறான். சித்திர வருஷத்துக்குள்ள குடுத்து அனுப்பின மருந்துக்கு சும்மா என்ன பாத்துப் போக எண்டு நினைச்சிப் போட்டான் போல-'நமக்குள்ளதானே போடியார் எண்டு போட்டு-வீட்டு மேசையில 'வாகரத்தேன்' போத்தல் ஒண்ட இலுவா வச்சித்துப் போயித்தான். நல்ல நாவல் பூத்தேன் அண்ண. வாய் ஊறிப் போடா தேயுங்கோ.








# கொடூரம்










மூட நம்பிக்கையின் விளைவாக ஒரே சமயத்தில் பலபேர் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன.

'உலகம் அழியப் போகிறது. அதற்கு முன்னதாகவே நாம் அனைவரும் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த வண்ணமே ஒன்றாக மரணமடைந்தால் நேராக சொர்க்கத்துக்கு போய் விடலாம்' என்ற நம்பிக்கையில் தான் இத்தகைய பாரிய தற்கொலைகள் நடைபெற்று வருகின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் தான் உகண்டா நாட்டில் பல நூற்றுக் கணக்கானோர் ஒரே சமயத்தில் தற்கொலை செய்து கொண்ட துயர சம்பவம் உலகை உலுக்கியது.

1978ம் ஆண்டு நவம்பர் 18ம் திகதியன்று கயானா நாட்டில் ஜோர்ஜ்டவுனுக்கு அருகிலுள்ள போட் கைடுமா என்ற இடத்திலுள்ள 'மக்களின் ஆலயம்' என்ற தேவாலயத்தில் ஒரு மதப்பிரிவைச் சேர்ந்த 913 உறுப்பினர்கள் சயனைட் கரைக்கப்பட்ட கூல் எய்ட் என்ற பானத்தை அருந்தி உயிர் துறந்தார்கள். இவ்வாறு இவர்கள் உயிர் விடுவதற்கு முன்பாக, இந்த மதப்பிரிவின் தலைவர் ஜிம் ஜோன்ஸ் என்பவர், தற்கொலை செய்து கொள்வதற்கான காரணத்தையும் தற்கொலை செய்யும் முறையையும் அங்கு குழுமியிருந்த அனைவருக்கும் விளக்கிக் கூறியிருந்தார்.

ஜிம் ஜோன்ஸ் அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் தன்னுடைய மதப் பிரிவினை உருவாக்கினார். ஏராளமான பண மோசடிகளில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட அவர், தன்னுடைய 900 பக்தர்களையும் அழைத்துக் கொண்டு அமெரிக்காவை விட்டு வெளியேறினார்.

தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலையின் பின்னர் பிரேதங்களை தேடிய போது ஜோன்சின் சடலமும் கண்டெடுக்கப்பட்டது. ஆனால் அவர் பானமருந்தி தற்கொலை செய்யவில்லை, என்ற உண்மை தெரியவந்தது. அவருடைய உடலில் துப்பாக்கி சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

# வளமும் வனப்பும்

நோர்வே நாட்டின் தேசிய தினம் கடந்த வாரம் (மே 17) கொண்டாடப்பட்டது. நோர்வே நாட்டு மக்கள் தமது தேசியக் கொடியை தமது உடலில் ஒரு பாகம் போன்றே நேசிக்கிறார்கள்.

இதில் நோர்வே நாட்டு மக்கள் தமது தேசியக் கொடிகளை ஏந்தியபடி தேசிய தின ஊர்வலமொன்றில் போவதைக் காணலாம்.

நோர்வே நாட்டுப் பழங்குடி மக்கள் துருவ மான்களை நம்பி வாழ்ந்த இடையர்கள். ஆனால் இன்றோ நோர்வே எண்ணெய் வளத்தினால் செல்வம் கொழிக்கும் நாடாக விளங்குகிறது. இருந்தபோதிலும் நோர்வேயின் வடபகுதியில் வாழும் மக்கள் இன்றும் கூட துருவமான்களை நம்பியே வாழ்கிறார்கள். பனிபடர்ந்த வெளியொன்றில் துருவமான்களை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்கிறார்கள். துருவ மான்களை மேய்க்கும் இடையர்கள் ஸ்நோ ஸ்கூட்டர்கள் என அழைக்கப்படும் வண்டிகளில் பயணம் செய்தபடி அம்மான்களை மேய்ச்சலுக்குக் கூட்டிச் செல்கிறார்கள்.



## 5 வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி. றெமின்டா றெமிஜியஸ் 18.05.2000



யாழ்ப்பாணம் ... நகரைச் சேர்ந்த றெமி - ... தம்பதியினரின் செல்வப் புதல்வி றெமின்டா தனது 5வது பிறந்த தினத்தை 18.05.2000 அன்று ... என்னும் இடத்திலுள்ள தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, மாமாமார் (லண்டன்), ஆசைமாமா (நோர்வே), பெரியப்பா குடும்பம், அத்தை குடும்பம் (கனடா), சித்தப்பா குடும்பம் (இந்தியா), மாமா குடும்பம் (இலங்கை), அப்பம்மா, அம்மம்மா, அன்ரிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், அத்தான்மார், மச்சிமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் றெமின்டாவை பல்கலையும் கற்று இறைவன் அருளால் இன்புற்று இனிதே வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல் : ... TP 0796692847

# வெற்றி

இடம்பெற்ற உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவை ஒரேயொரு ஓட்டத்தால் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குச் சென்று சம்பியனானது அவுஸ்திரேலியா.

அதுமட்டுமன்றி உலகக்கோப்பைப் போட்டிக்குப் பின் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் வெல்லப்பட முடியாத அணியாகவும் விளங்கி வருகிறது அவுஸ்திரேலியா.

சமீபத்தில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்தது. அங்கு 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடியது. அதில் 2-1 என்ற கணக்கில் தென்னாபிரிக்காவிடம் தோல்வியடைந்தது. தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கப்டன் ஹன்சி குரோன்ஜே ஊழல் வழக்கில் சிக்கியதால் அணித்தலைவர் பொறுப்பை சகலதுறை ஆட்டக்காரர் ஷோன் பொல்லொக் ஏற்றார்.

இளவயதில் பெரிய பொறுப்பை ஏற்று உலகக் கோப்பைப் போட்டியில் தம்மைத் தோற்கடித்த அவுஸ்திரேலியாவை வென்று பழி தீர்த்துக் கொண்டார் பொல்லொக். இத்தனைக்கும் அணியில் குரோன்ஜே, டொனால்ட், கலினன் போன்ற சிறந்த வீரர்கள் இத் தொடரில் இடம் பெற்றிருக்கவில்லை.

முதல் போட்டித் தொடரிலேயே வெற்றிக்கனியைச் சுவைத்த இந்த கப்டன், இனி வரும் போட்டிகளிலும் அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்வார் என்ற நம்பிக்கையை அளித்து விட்டார்.

